
கல்கி
அடுத்த இதழில்:
பாமினிப் பாவை
KALKI
26.7.1964
30 காசு

ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

எனக்கு அஷ்டமத்தில் சனி ஆறாம் இடத்தில் குரு—





டாக்டர் சொன்னார்: "உங்கள் உடம்பில் ஏதும் கோளாறு இல்லை; உடலுக்குத் தேவையான போஷாக்குக் கிடைப்பதில்லை என்பதின் அறிகுறிகள் தாம் சோர்வும் அசதியும். தினமும் ஹார்லிக்ஸ் பருகுங்கள்." அன்றிரவு இதைப் பற்றி ஜோஸ்யர் சர்மாவிடம் கேட்டேன். "டாக்டர் சொல்வதைச் செய்யும்," என்றார் அவர்



சந்தேகத்துடன்தான் அன்று முதல் ஹார்லிக்ஸ் அருந்த ஆரம்பித்தேன்; ஆனால் பலன் உடனுக்குடன் தெரிந்தது! இப்பொழுதெல்லாம் தெம்பும் சுறுசுறுப்புமாய் இருக்கிறேன். சம்பு சித்திக்கு ஒரே ஆனந்தம்! டாக்டர் என்னை ஹார்லிக்ஸ் பருகும்படி சொன்னது என் ஜாதகவிசேஷம் தான்!



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

கல்கி





மூஷிகர்: உத்தரப் பிரதேச முதன் மந்திரி சுசேதா கிருபளானி மாறு வேஷத்தில் நியாயவிலைக் கடைக்குச் சென்று கடைக்காரர் குறைவாக எடை போட்டதைக் கண்டுபிடித்து அவருக்குத் தண்டனை கிடைக்க ஏற்பாடு செய்தார். ரூபாய் நோட்டுக்களைக் குறைவான மதிப்புள்ளவையாகச் செய்யும் காங்கிரஸ் சர்க்காரை யார் தண்டிப்பது?

பொருளடக்கம்

குரோதி. ஆடி 11 ● ஜூலை 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே! சம்பவங்களும் கற்பனையே





அபாயம் பரவுகிறது!



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 52

காமராஜ் திருவிழா

காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கட்டுப்பாட்டோடு இயக்கி, அதற்குப் பெரும் ஆதரவு திரட்டித் தரும் திரு காமராஜ் அவர்களின் பிறந்ததின வைபவத்தை அக் கட்சியினர் விமரிசையாக நடத்தியது அவர்களைப் பொறுத்தமட்டில் நியாயமே. காங்கிரஸின் தனிப் பெரும் தலைவராயிருந்த நேரு அவர்கள் மறைந்து இரண்டு மாதங்களுக்குள் இப்படிக் கலியாண கோலாகலம் செய்திருக்கலாமா என்று சிலர் கேட்கிறார்கள். நேரு அவர்கள் மறைந்து விட்டது காரணமாகவேதான் இப்போது வேறொரு கதாநாயகரை மையமாக வைத்துப் பிரசாரம் செய்ய அவசியம் நேர்ந்திருக்கிறது. அதைத் திறம்படச் செய்திருக்கிறார்கள்.

தமிழ் மகன் ஒருவர் நாடு முழுவதிலும் பேரும் புகழும் எடுக்கிறார் என்றால் அதில் நம் எல்லாருக்குமே பெருமைதான். காமராஜரது பிறந்த தினத்தின்போது அரசியல் உணர்வைக் கலக்காமல் மகிழ்ச்சி அடைந்தோம். ராஜாஜி இந்த உணர்ச்சியால் ஊக்கப்பட்டுத் திரு காமராஜ் அவர்களை மனமார வாழ்த்தியிருக்கிறார். ''இதில் அரசியல் எதுவுமில்லை. சிநேக தர்மத்தின்மீது காமராஜ் அவர்களை வாழ்த்தினேன். உயர்ந்த அந்தஸ்து பெற்ற மகனுக்கு ஆசி கூறுவதுபோல் அவருக்கு ஆசி அளித்தேன்'' என்கிறார் ராஜாஜி.

நாம் அரசியல் கருத்துக்களை மறக்க முயன்றாலும், உண்மையில் காமராஜ் திருவிழா எப்படி நடத்தப்பட்டது என்பதை மறக்கவோ மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆளும் கட்சியும் அரசாங்கமும் ஒன்றில் மற்றது கரைந்துபோய், கட்சிக் காரியத்தை அரசாங்கத்தின் காரியமாக நினைத்துச் செய்யும் புது 'ஜனநாயக சோஷலிஸ' விசித்திரத்தை வியக்தமாகக் கண்டோம். சுதந்திரக் கட்சியைப் 'பணக்காரர் கட்சி' என்று கூறுகிற காங்கிரஸ் கட்சியின் அபரிமிதமான பணபலத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே காமராஜ் உற்சவம் நிகழ்ந்தேறியது. மூல அரசியல் சாஸனம் வாக்களித்திருந்த சொத்துரிமையைக் காப்பாற்றுவதற்காகச் சுதந்திரக் கட்சி பாடுபடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக அதற்குப் பணக்காரர் கட்சி என்று பெயரிட்டுள்ள காங்கிரஸார், திரு காமராஜின் வரவேற்புக்காகச் சென்னையில் செய்துள்ள பொருட்செலவை அகில இந்தியாவிலும் பொதுத் தேர்தலுக்குப் பிரசாரம் செய்யக்கூடச் சுதந்திரக் கட்சி செலவிட்டதில்லை. இத்தகைய பணபலம் காங்கிரஸுக்குக் கிடைத்திருப்பதற்குக் காரணம் உற்பத்தித் தொழில் சமூகத்தையும் வியாபாரிகளையும் இஷ்டப்படி ஆட்டி வைக்கும் 'சோஷலிஸ' சூத்திரக் கயிறு அவர்களிடம் இருப்பதுதான். மாய வசியத்தில் இணையற்ற இந்த சோஷலிஸ சூத்திரக் கயிற்றை ஆட்டியே திரு காமராஜின் பிறந்ததின விழாவைக் கொண்டாடியிருக்கிறார்கள். 'ஜனநாயக சோஷலிஸ' விழா என்றே அதற்கு நாமகரணமிட்டிருக்கிறார்கள். ஜனநாயக சோஷலிஸத்தைப் பற்றிப் பெரும் கருத்தரங்குகள் நடத்தியிருக்கிறார்கள்.

எத்தனை அமர்க்களங்கள் செய்தாலும் உண்மையை மாற்ற முடியுமா? ஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் இணைப்பது தீயையும் நீரையும் சேர்ப்பது போலத்தான். பொதுவுடைமை என்பது உண்மையில் பொது மக்களின் கூட்டு உடைமையாக உருப்பெற முடியாது; எல்லாவற்றையும் சர்க்கார் உடைமையாக்குவதுதான் பொதுவுடைமை என்று பெயர்பெற்றுள்ள முறை. எல்லோரும் சர்க்காரின் அடிமைகளாகும் சோஷலிஸத்தில் தனி மனிதனின் சுதந்திரத்தை மையமாகக் கொண்ட ஜனநாயகம் எப்படி வாழ முடியும்? சோஷலிஸத்தில் ஜனநாயகம் சாக வேண்டியதுதான். ரயில்வே,

தபால் போன்ற சில தொழில்களைச் சர்க்கார்தான் நடத்த வேண்டும்; மற்றத் தொழில்களிலும் முதலாளிகளின் கொடுங்கோன்மை ஏற்படாமல் கட்டுப்படுத்திக் காப்புத் தர வேண்டியது சர்க்காரின் பொறுப்பு என்பதை ஒப்புக் கொள்கிறோம். எனவே தனியார் துறை—சர்க்கார் துறை இவற்றை வேறு விதத்தில் மாற்றி ஒன்றோடொன்று இணைத்து அமைப்பதாகச் சொன்னால் அந்தக் கருத்தை ஓரளவுக்கு வரவேற்கலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியிலோ ஒருகாலும் இணைக்க முடியாத சோஷலிஸம், ஜனநாயகம் என்ற இரண்டு சித்தாந்தங்களைக் கபந்த பிண்டமாக இணைத்து மயக்குகிறார்கள்.

அடித்துச் சொல்கிறோம்: சோஷலிஸத்தின் லட்சியமான சர்க்காரின் தனித் தொழிலுரிமையின் கீழ் நாடு ஒருகாலும் அபிவிருத்தி அடைய முடியாது. தொழில் அறிவும், லாபம் பெற வேண்டும் என்ற சுய ஈடுபாடும் இல்லாத அரசியல்வாதிகள், சிப்பந்திகள் இவர்களைக் கொண்டு நாற்பத்தைந்து கோடி மக்கள் அடங்கியுள்ள ஓர் உப கண்டத்தை ஒரே 'கம்பெனி'யாக்கி நிர்வகிப்பது நடக்கிற காரியமா? சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள தொழில்களில் எவ்வளவு கால தாமதமும் பொருள் விரயமும் ஏற்படுகின்றன என்பதைக் கண்ணுக்கு மெய்யாகக் கண்டு வரும்போது அந்த ஏற்பாட்டை மேலும் விஸ்தரிக்கும் சோஷலிஸத்துக்கு எப்படி ஆதரவு தரமுடியும்? இன்று நாட்டில் மலிந்துள்ள லஞ்ச ஊழலுக்கு சோஷலிஸத்தின் பூர்வாங்கமான பெர்மிட்—லைசென்ஸ் முறைதான் காரணம். அன்பின் வழியே முன்பு நாட்டின் ஆதரவைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி இப்போது தொழிலதிபர்களிடம் பய பீதியை உண்டாக்கி, அவர்களின் நிதி ஆதரவைப் பெற்று, அவர்களையே அழிக்கும் சோஷலிஸத்தைப் பிரசாரம் செய்வது விந்தை! இதைவிடப் பெரிய விந்தை அப்படிப் பயந்து வாழும் கோடீசுவரர்களே சோஷலிஸத்தைப் புகழ்ந்து சண்டப் பிரசண்டமாகப் பிரசாரம் செய்வதாகும்.

சோஷலிஸ ஜனநாயகத்தைக்குறித்து மக்கள் கண்களை நன்றாகத் திறந்து கொள்ள வேண்டும். தனியார் தொழிலில் குறைபாடுகள் உண்டு. அவற்றைச் சர்க்கார் மூலம் சரிசெய்யலாம். தனி முதலாளிகளை அழித்துச் சர்க்கார் ஒன்றே முதலாளியானால் அது அதிக்கிரமம் செய்யும்போது யாரிடமிருந்தும் காப்புப் பெற முடியாமல் மக்கள் சுதந்திரத்தை இழந்து நிற்பார்கள்.

தனியார் தொழில்தான் மனிதனின் சுய இச்சை என்ற பெரிய இயற்கை விதியின்மீது அமைந்திருக்கிறது. பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அணுவிலும் புகுந்து ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும் சர்வ வல்லமை பொருந்தியுள்ள ஆண்டவனும் மக்களுக்குச் சுயமாகச் செயல்படும் ஆற்றல் இருப்பது போல் ஒரு மாயத்தை அருளியிருக்கிறான்; அதனாலேயே உலகில் தர்ம வாழ்வுக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. சர்வசக்தனான ஆண்டவனே இடமளித்துள்ள சுய முயற்சிச் சுதந்திரத்தைச் சர்வாதீன சர்க்கார் குலைக்கப் பார்ப்பதை விடப் பேதைமை உண்டா?

தத்துவப் பேச்சுக்களும், சித்தாந்த ஆராய்ச்சிகளும் ஒருபுறம் இருக்கட்டும். நடைமுறையை ஆராய்வோம். சோஷலிஸத் தொழில் நிர்வாகத்தில் தங்கள் சுதந்திரத்தை இழந்ததற்குப் பதிலாக லௌகிக லாபங்களையாவது மக்கள் பெற முடியுமா? முடியாது. சர்க்கார் தொழிலில் யாருக்கும் ஊக்கமிராது என்பதால் உற்பத்தி அடியோடு குறைந்து போகும். வறுமைதான் நாட்டின் பொதுவுடைமையாக இருக்கும். பல சோஷலிஸ நாடுகளில் அரசாங்கத் தொழில் நிர்வாகம் தோல்வியுற்று வருவதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். ருஷ்யா உள்ளிட்ட சோஷலிஸ நாடுகள் தனியார் சுதந்திரம் பெற்றுள்ள நாடுகளிலிருந்து இறக்குமதியைப் பெருக்கி வருகின்றன. இயற்கை விதியைப் புறக்கணித்தால் இப்படித்தான் நடக்கும். பிரசார மந்திரங்களாலோ, தனி மனிதருக்குத் திருவிழா எடுப்பதாலோ இயற்கை விதிகளை மாற்ற முடியாது.

தி. மு. க.வுக்கு நன்றி

கல்லூரிப் பாடங்களைத் தமிழ் போதனை மொழியில் கற்பது அகில இந்தியாவில் தங்கள் எதிர்கால நலனுக்கு உகந்ததல்ல என மாணவர்கள் அறிந்து இந்தத் திட்டத்துக்கு ஆதரவை மிகவும் குறைத்து விட்டதால் கோவைக் கல்லூரியில் மீண்டும் ஒவ்வொரு பாடமாக ஆங்கிலத்துக்கு மாறி வருகிறது. விவேக

மாக நடந்து கொண்ட மாணவர்களை யும், அவர்களின் விவேகத்தை மதித்துப் பழைய ஏற்பாட்டைத் துணிவுடன் மாற்றி யு ள் ள அரசாங்கத்தையும் பாராட்டுகிறோம்.

இளைஞர்கள், பொதுமக்கள், ஆட்சி யாளர் யாருமே போதுமான அளவு உணர்ந்திராத இன்னொரு மொழி அபாய முண்டு. அந்த ஹிந்தி அபாயத்தை நன்கு உணர்ந்து திடமாக எதிர்த்து வருகிற பெருமை திராவிட முன்னேற் றக் கழகத்தையே சாரும். தினந் தோறும் சாஸனத்தைத் தாங்கள் இழுத்த இழுப்புக்கு மாற்றி வரும் காங் கிரஸார், ஆட்சி மொழி ஷரத்தை எதிர்ப்பதற்கு அடையாளமாகத் தி.மு. க.வினர் அந்தப் பகுதிப் பிரதியை (இதற்கென்று தாங்களே தயாரித்த பிரதியை) எரிப்பது சாஸன அவமதிப் புக் குற்றத்தைச் சேரும் எனச் சட்டம் செய்திருப்பது அபத்தமாகும். தி.மு.க. தோழர்கள் அதற்கும் அஞ்சாமல் சத் தியாக்கிரகம் செய்வது, இவ்விஷயத்தில் உறங்கிக் கிடக்கும் நம் நாட்டின் எதிர் காலச் சம வாய்ப்புக்காக அவர்கள் புரியும் உத்தமப் போராட்டமாகும். ''நான் மட்டும் இந்த விருத்தாப்பிய தசையிலில்லாமல் இளைஞனயிருந்தால் தி. மு. க. சத்தியாக்கிரகத்தில் நானும் கலந்து கொள்ள வேண்டியவன்'' என் கிறார் ராஜாஜி. ஹிந்தியர்களின் பசப்பு வார்த்தையை நம்பி வீண் போகாமல் தீரத்துடனும், விடா முயற்சியுடனும் தென் சமுதாயத்தினர் எல்லாருடைய நலனுக்காகப் போராடி வரும் தி. மு. க. வுக்கு நம் நெஞ்சார்ந்த நன்றி.

என்ன சேதி?

காங்கிரஸ் அடக்குமுறை

ஒரு புறம் உணவு தானியப் பற்றாக் குறையில் நாடே தவித்து வருகையில், இன்னொரு புறம் சர்க்காரின் வர்த்தகக் கார்ப்பரேஷன் பெர்ஷிய வளைகுடாவி லுள்ள பஸ்ராவுக்கு அரிசி ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி பெற்று வரும் அநியாயத்தைக் காண்கிறோம். இதனை எதிர்த்து, தினமும் முந்நூறு டன் அரிசி ஏற்றுமதியாகும் பம்பாய் அலெக்ஸாண்ட்ரா துறைமுகத்தை நோக்கிச் சுதந்திரக் கட்சி அங்கத் தினர்கள் ஊர்வலம் நடத்திச் சென்ற னர். அவர்களைப் போலீஸார் துறை முகவாயிலில் தடுத்து நிறுத்தினர். தொண்டர்கள் ஆட்சேபித்த போது பிரம்புப் பிரயோகமும் தொடங்கப்பட் டது. போலீஸ் உயர்அதிகாரி உட்பட எல்லாப் போலீஸாரும் முன்னுனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினர் காங்கிர ஸைத் தாக்கிய அதே பாணியில் வரம்பு மீறி அடக்குமுறை செய்ததாகத் தெரி கிறது. இச்செய்தியை மிகுந்த மன நோவோடு தெரிவிக்கிறோம்.

ஏன் இந்த முக்கியத்துவம்?

ஒரு தேசத்தில் வலதுசாரிக் கட்சிகள் இடதுசாரிக் கட்சிகள் என்று இருந் தால் பொருள் உண்டு. சோஷலிஸம் என்ற பதத்துக்குச் சந்தர்ப்பத்தைப் பொறுத்து வேறு வேறு விளக்கம் தரும் காங்கிரஸ் கட்சிக்குள் வலதுசாரி, இடது சாரி என்று இருந்தாலும் அதில் ஓரளவு அர்த்தமுண்டு. ஆனல் பூரண இடதுசாரிக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வலது சாரி இடது சாரி என்று இரண்டு கிளையாம். இந்தப் பொரு ளற்ற பிரிவினையைப் பெரிதுபடுத்தித் தினந்தோறும் பத்திரிகைகள் செய்தி களைப் பிரசுரிப்பது ஒரு விசித்திரம். கம்யூ னிஸ்ட் கட்சிக்குள் இருக்கும் பிளவு களுக்கு வலது — இடது என்று பெயர் தந்து முக்கியத்துவம் தரத் தேவையே இல்லை. இதனல் ஏற்படக் கூடிய ஒரே நன்மை தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சிக்கல்களைக் கண்டு அதன் பிடியிலிருந்து விலகக் கூடிய நல்ல வாய்ப் புத்தான்.

நன்றி மறவாத நற்றமிழர்

ஈழத்திலும் பர்மாவிலும் நாம் காணும் அவலநிலைக்கு மாருக மலேஷிய சர்க்கார் அந்நாட்டிலுள்ள இந்தியர்களை மிகவும் நல்ல முறையில் நடத்தி வரு கிறது. இதற்குப் பிரதியாக இந்தியர் களும் — அவர்களில் முக்கியமான பகுதி யினரான தமிழர்களும் — மலேஷியா சர்க்காரிடம் நன்றி விசுவாசத்துடன் நடந்து வருகின்றனர். கம்யூனிஸ ஆபத்தை எதிர்நோக்கியுள்ள மலேஷி யாவின் ராணுவத்திலும் நம்மவர்கள் பலர் சேர்ந்திருக்கிறர்கள் என்ற புல் லரிக்கும் தகவலை மலேஷியாவின் காபி னெட் மந்திரியான ஸ்ரீ மாணிக்கவாச கம் அவர்கள் தெரிவித்துள்ளார். நம் நாட்டு ரத்தத்தில் வெள்ளை அணு, சிவப்பு அணு என்பதைப் போல் நன்றி அணுக்களும் நிறைந்துள்ளன என்பதற்கு இந்த ஓர் உதாரணம் போதும்.


1
2
3
4
5
6
7

உன்மத்தப் பேச்சுக்கள்

ராஜாஜி

ஐந்து ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் அவர்கள் இந்தியா பாகிஸ்தான் இவ்விரு நாடுகளும் கூட்டுச் சேர்ந்து பாதுகாப்பு அமைத்துக் கொள்ள வேண்டுமென்று மிகவும் இனிய முறையில் யோசனை கூறியிருந்தார். துரதிர்ஷ்டவசமாகப் பிரதமர் நேரு அவர்கள் அந்த யோசனையைப் புறக்கணித்து விட்டார். 'என்ன வந்தாலும், ஏது நடந்தாலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்' என்று கொஞ்சமும் யோசனை செய்யாமல் உணர்ச்சி வேகத்துடன் மறுத்து விட்டார். இன்று, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், அயூப்கான் அவர்கள் லண்டனில் மீண்டும் இந்தியா — பாகிஸ்தான் கூட்டுப் பாதுகாப்புப் பற்றிப் பேசியிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு முன்னேற முயல்வது இந்தியாவின் பொறுப்பு.

ஆனால் பாகிஸ்தான் அதிபரின் யோசனையை நம் நாட்டுப் பத்திரிகைகள் தவறாக விமரிசனம் செய்துள்ளன. 'அயூப்கான் குட்டிக்கரணம் போடுகிறார்' என்று கூறி அவரது கருத்தைக் கேலி செய்திருக்கின்றன. இந்த ஐந்தாண்டு இடைக் காலத்தில் அயூப்கான் அவர்கள் கூறிய பல கருத்துக்களுக்குக் கூட்டுப் பாதுகாப்பு யோசனை முரணானது என்பதைப் பெரிதாகக் கருதி நல்ல யோசனையை நையாண்டி செய்வது சரியா? எந்தக் கொள்கையையும் மாற்றிக் கொள்ளவே கூடாது என்ற பிடிவாதத்தை ராஜ நீதியின் தேவதையாக்கி வழிபடத் தொடங்கினால் சமரஸத்துக்கும், நட்புக்கும் இடம் ஏது?

கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரிப்பது, கியூபாவுடன் வியாபார பகிஷ்காரம் செய்வது முதலிய முக்கியமான விஷயங்களில் கூட அமெரிக்க சட்டசபை முக்கியஸ்தர்கள் முரண்பட்ட கருத்துக்களைத் தைரியமாகத் தெரிவிக்கிறார்கள். உலகம் இடைவிடாமல் மாறிக்கொண்டே இருப்பதால் கருத்துக்களையும் தேச நலனையொட்டிப் புதுச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றிக் கொள்வது யுக்தம் என்று அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நம் நாட்டில் இந்த விவேகத்தைக் காணமுடியாதது விசனிக்க வேண்டிய விஷயம். எதிரி நாடுகளாக இருந்த ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களுடன் நெருக்கமான நட்புக் கொள்ளும் விவேகத்தை நாம் அமெரிக்காவில் காண்கிறோம். அதற்கு மாறாக நம் நாட்டில் நம்முடன் ஒன்றாக இருந்த பாகிஸ்தானுடன் நட்புக்கொள்வது பற்றிப் பேசினாலே தேசத் துரோகம் என்கிறார்கள். வெற்றுப் பிடிவாதம் தீரமாகாது. பிடிவாதத்தை விடுவதே இன்று தீரமாகும். அந்தத் தீரத்தை நாம் பெற்றாக வேண்டும். நீண்ட நாட்களாக வளர்க்கப்பட்ட கசப்பு உணர்ச்சிகளைக் கைவிடுவது கடினம் தான். என்றாலும் எதிராளிகளிடம் கடினம் இளகுவதாக அடையாளம் காணும்போது நாமும் விட்டுக்கொடுத்து நட்புக்கு முயல வேண்டும்.

'எக்காரணத்தைக் கொண்டும் பாகிஸ்தானுடன் நாம் நட்புக் கொள்ள வேண்டும்; இதற்காகச் சில தியாகங்களும் செய்ய வேண்டும்' என்று நான் சொல்வதைச் சிலர் பைத்தியக்காரத்தனமாகக் கருதுகிறார்கள். இந்தத் திட்டத்தில் என்னுடைய சொந்த ஆசைக்காகக் கண்ணுக்குக் காணப்படாத ஏதோ கண்ணி வைத்திருக்கிறேன் என்று ஒரு தமிழ்ப் பத்திரிகை எழுதியிருக்கிறது. பதவிகளெல்லாம் பெற்று எண்பத்தியாறு பிராயம் முடிந்து போன நான் சொந்த நலனுக்காக எவ்விதப் பேராசையும் பட இயலாது என்பதைத் தானாக அறிய முடியாதவர்களுக்கு நான் எப்படி விளக்குவேன்? தேசம் முன்னேறமுடியும்; மக்கள் முன்னேற முடியும் என்று நம்பிக்கை வைத்து, அதற்கு என் யோசனை உதவி செய்யும் என்று நம்பி அவற்றைக் கூறுகிறேன். தெற்கு ஆசியாவில் கம்யூனிஸப் பரவலைத் தடுப்பதற்கு இந்தியா பாகிஸ்தான் நட்பு மிகவும் அவசியம் என்று கருதி இந்த யோசனையை வலியுறுத்துகிறேன். மற்றபடி, மனச் சாந்தி தவிர எனக்குப் பிரத்தியேகமான ஆசை எதுவும் இல்லை. நான் ஒருநாளும் எதிர்பாராத உயர்ந்த பதவிகளையும், பெருமைகளையும் அனுபவித்துவிட்டேன். இனி அமைதி தவிர எதுவும் தேவையில்லை.

தூஷிப்பவர்களைப் பற்றியும் எனக்குக் கோபமில்லை. அரசியல் அபிப்பிராய பேதங்களில் கூட முன்போல் எனக்கு இப்போது ஆத்திரம் இல்லை. தவறு செய்பவர்களிடமும் பரிதாபம்தான் கொள்கிறேன் — கோபம் கொள்வதில் நன்மை ஏதும் இல்லை என்பதால்.

எதிரே: 1, 2. காமராஜரின் பிறந்த தினவிழா; ராஜாஜி ஆசி நல்குகிறார். 3. விவேகானந்தர் சிலையை ராஷ்டிரபதி திறந்து வைக்கிறார். 4. ராணிமேரி கல்லூரி பொன்விழாவில் ராதாகிருஷ்ணனோடு திரு ஏ. எல். முதலியார். 5. தொடக்ககால முதல்வர் மிஸ் டீலா ஹேயின் உரை. 6. ஐ. ஐ. டி. பட்டமளிப்பு விழா. 7. முதன்மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களின் வாழ்க்கை நூல் வெளியீடு.


உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா
Panama
Panama
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
பனாமா
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்.56
இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 634 TM
Greens' Advtg.



— சங்கம் —

"அதிர்ஷ்டக்காரன் அப்பா நீ! எங்கேயெல்லாமோ வெளியூர்களுக்குப் போய் வரப் போவதாகக் கேள்விப்பட்டேனே!" என்று கேட்டுக் கொண்டே வந்தார் என் நண்பர்.

"ஆமாம். பத்துப் பன்னிரண்டு நாட்கள் 'டூர்'. பிளேன், பஸ், கார், ஜீப், ரயில் எல்லா வகைப் பயணமும் உண்டு."

முதன் முதலாக வெளியூர்களுக்கு அப்படி ஒரு பயணம் போகும் வாய்ப்பு எனக்கு அப்பொழுதுதான் கிட்டியிருந்தது. அந்த உல்லாச மகிழ்ச்சியில் கூறினேன்.

"உன்னைக் கண்டால் எனக்குப் பொறாமை ஏற்படுகிறது. எனக்கு அந்த வாய்ப்பெல்லாம் எப்பொழுது கிட்டப்போகிறது. எங்கே கிட்டப் போகிறது!" என்று ஏக்கப் பெருமூச்சுவிட்டார் என் நண்பர்.

உல்லாசப் பயணம் புறப்பட்ட பொழுது இருந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் போய் வந்த பின் மறைந்து போயின. 'ஏதோ ஒரு சில நல்ல காட்சிகளைக் கண்டோம்' என்ற திருப்தி உள்ளூற இருந்தபொழுதிலும் உடற்களைப்பே மேலோங்கி நின்றது.

சற்றேறக்குறைய இதே உணர்வுதான் 'சங்கம்' என்னும் ஹிந்திப் படம் பார்க்கப் போய் வந்த பின்னரும் ஏற்பட்டது.

'ராஜ்கபூரின் படமான 'சங்கம்' வருகிறதாமே! ஏகச் செலவு செய்து எடுத்திருக்கிறாராமே! பாரிஸ், லண்டன், ரோம், ஸ்விட்சர்லாந்து, வெனிஸ் போன்ற நகரங்களுக்கெல்லாம் சென்று தத்ரூபமாகப் படம் பிடித்து வந்திருக்கிறாராமே! இமயமலைச் சாரலையும் ஆல்ப்ஸ் மலைச் சாரலையும் புகைப் புலனாகக் கொண்டு பல காட்சிகள் வருகின்றனவாமே! ராஜேந்திரகுமார், ராஜ்கபூர், வைஜயந்திமாலா மூவரும் ஏறக் குறைய நான்கு மணி நேரங்கள் மகிழ்விக்கிறார்களாமே! இரட்டை இடைவேளைகளாமே படத்தில்!'

இப்படியெல்லாம் பேச்சு அடிபடவே, படத்துக்கு மிகுந்த ஆர்வத்துடன் சென்று ஏமாந்தேன்.

'சங்கம்' என்றால் சேர்க்கை என்று பொருள். முக்கோணக் காதல் கதைகள் இதுவரை எத்தனை எத்தனையோ படமாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இதுவும் ஒன்று.

இரு நண்பர்கள் ஒருத்தியைக் காதலிக்கிறார்கள். நண்பனுக்காக ஒருவன் தன் காதலைத் தியாகம் செய்கிறான். ஏன், தன் உயிரையே கூடக் கடைசியில் விடுகிறான். அவன் சாம்பலைப் பிரயாகைச் சங்கமத்தில் சேர்க்கிறார்கள் தம்பதிகள். சுருக்கமாக இதுவே கதை.

படம் பார்த்துப் பழகியவர்களுக்கு இது பழைய புளித்துப் போன கதைதான்.

கீழ் நாட்டையும் மேல் நாட்டையும் இணைத்து ஏராளச் செலவில் படம் எடுத்திருக்கிறார்களே! 'உலக ஒருமைப்பாட்டைக் காட்டுவதற்காகவா?' என்று கேட்காதீர்கள். ஒருத்திக்கு எப்படியெல்லாம் அலங்காரம் செய்வித்து—அலங்காரமா, அலங்கோலமா?—அவலமாகக் காட்டலாம், மக்களின் கீழ்த்தர உணர்ச்சியைக் கிளறி விடலாம் என்ற நோக்கமே பெரு நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.


நடிப்பு? நடிகர்களைக் காட்டிலும் நாடு, நகரக் காட்சிகள் நன்றாக நடித்திருக்கின்றன. உணர்ச்சியைக் கொட்டுவதற்காகவென்று எண்ணி நடிகர்களை மௌனமாக நிறுத்தியிருக்கிறார்கள். உணர்ச்சி கொந்தளிக்க வேண்டிய இடத்தில் மௌனம் முக பாவத்தைக் காட்ட விடாமலே நன்றாக நடித்திருக்கிறது.

இரண்டொரு பாடல்கள் காதுக்குக் குளுமையாக இருக்கின்றன.

ராஜ்கபூரின் இந்தப் படத்திலே ஏராளமாக எதிர்பார்த்து ஏமாந்தவர்கள் கடைப் பகட்டிலே மயங்கி மட்டச் சரக்கை வாங்கிய உணர்வையேதான் பெறுவார்கள்.

இந்தப் படத்தைப் பார்ப்பதற்காகப் பொன்னான நான்குமணி நேரத்தை வீணடிக்க வேண்டுமா? என்னைக் கேட்டால், நாடு நகரங்களைப் பற்றிய நல்ல டாக்குமென்டரிகள் கிடைத்து விட்டால் குறைந்த நேரத்தில் பார்த்து நிறைந்த மகிழ்ச்சியைப் பெறலாமே என்றுதான் சிபாரிசு செய்யத் தோன்றுகிறது.

—ரா. வீ.



இருபத்தி ஏழாம் அத்தியாயம்

இளைஞனின் கனவு

இரகசியங்களைக் காப்பாற்றுவதைக் கடமையாகக் கொண்டிருந்த பைந்தமிழ்க் குமரன் கயல்விழி தன்னிடம் நேரடியாகக் கேட்ட கேள்வியால் சிறிது அதிர்ச்சியடைந்தான். "நீங்கள் புலவரா? அல்லது போர்வீரரா?" என்று மீண்டும் கேட்டாள் அவள். கேட்டு விட்டு அவனுடைய முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

"புலவர்களுக்கும் போர்வீரர்களுக்கும் ஏதும் வேறுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்றான் பைந்தமிழ்க் குமரன். "சொற்கள் என்ற ஆயுதம் கொண்டு தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டப் போராடுவோர் புலவர்கள்; அதையே போர்க் கருவிகளைக் கொண்டு செய்பவர்கள் போர் வீரர்கள்."

வரும் காலத்தில் நகைக்கச் சொல்லியிருக்கிறார் அவர். நான் நகைக்கிறேன்; துன்பம் பறக்கிறது. நான் அழுதுகொண்டிருந்தால் துன்பம் பெருகத்தானே செய்யும்? குறையப் போகிறதா?"

"எவ்வளவு கொடிய துன்பம் வந்தாலும் இதுதான் மருந்தா?" என்று கேட்டு விட்டுத் தன்னுடைய மலை போன்ற துன்பங்களை நினைத்துக் கொண்டு அவள் தேம்பித் தேம்பி அழுதாள். அவளால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

பெண்களுடன் நெருங்கிப் பழகி அறியாதவன் அவன். துன்பங்களை அந்த மெல்லியலார் எவ்வளவு மிகுதியாகப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள் என்பதை அவள் வாயிலாகக் கண்டான். அவளோ அதன் தொல்லை தாங்காது மீண்டும் ஓடிச் சென்று மலை முகட்டிலிருந்து கீழே விழுந்து விடுவாள் போலிருந்தது.



கயல் விழி

அகிலன்

"இவர்களில் நீங்கள் யார் என்றுதான் நான் கேட்கிறேன்."

"தொழிலால் நான் புலவன்; அவசியம் நேரும்போது ஆயுதமும் ஏந்துவேன். போர் வந்துவிட்டதால் களம் புகுந்தேன் அவ்வளவுதான்."

"உடலெல்லாம் நெருப்பாய்ப் பற்றி எரியுமே, இந்த வேதனையை எப்படி நீங்கள் தாங்கிக் கொள்ளுகிறீர்கள்?" என்று கண்ணீர் கலந்த குரலில் கேட்டாள் கயல்விழி.

"புலவர்களுக்கெல்லாம் தலைவர் ஒருவர் இருக்கிறார். படைத் தலைவருடைய கட்டளைக்கு வீரன் எப்படிப் பணிய வேண்டுமோ, அப்படி எங்கள் தலைவரின் கட்டளைக்கும் நான் பணியக் கடமைப் பட்டிருக்கிறேன். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறித் துன்பம்

"கயல்விழி! உன் துன்பத்தை நான் அறியக் கூடாதா?" என்று கயல்விழியை நோக்கிக் கனிவோடு கேட்டான் பைந்தமிழ்க் குமரன்.

அவனுடைய குரலின் ஏக்கம் அவளுக்குச் சிறிது ஆறுதலளிக்க முயன்றது. "இந்தப் போர்தான் என்னுடைய துன்பம்!" என்றாள் அவள். "என்னுடைய அருமைத் தந்தையார் எங்கு சென்றாரோ, என்ன ஆனாரோ தெரியவில்லை. பணியாட்களும் காவலர்களும் என் முன்னாலேயே கொல்லப்பட்டார்கள். என்னுடைய அத்தையார் இந்தக் கொடுமை தாங்க முடியாமல் மூர்ச்சித்து விழுந்து இறந்தார். இன்னும்...இன்னும்..." விக்கி விக்கி அவளால் அழத்தான் முடிந்தது. மேலே பேச முடியவில்லை.

"உன்னுடைய கண்ணீரைத் துடைக்கக் கூடச் சக்தியற்றவனாகக் கிடக்கிறேன் நான்" என்று கூறிய அவனது விழிகளில் இரண்டு நீர்மணிகள் திரண்டு விட்டன.

'வீரனையும் கோழையாக்கி விட்டோமே!' என்று பதறிய கயல்விழி, "அதற்குள் உங்கள் தலைவரின் ஆணையை மறந்து விட்டீர்களே?" என்று கூறி அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். "எனக்காகவும் நீங்கள் வள்ளுவரை மறந்துவிடக் கூடாது!" என்றாள்.

"நம் இருவருக்குமே இப்போது அவர்தான் துணை செய்ய வேண்டும்" என்றான் பைந்தமிழ்க் குமரன். பிறகு அவளிடம் கூறி, அருகிலிருந்த சுவடியை எடுக்கச் செய்தான்.

"'இடுக்கண் அழியாமை' என்ற தலைப்பில் உள்ள பத்துக் குறளையும் தயவுசெய்து எனக்காகப் படிக்கிறாயா?"

"நான் படிக்கிறேன்; நீங்கள் பொருள் கூறுங்கள்!" என்று சொல்லிக் கயல்விழி மகிழ்ச்சியோடு குறள் பாக்களைப் படிக்கத் தொடங்கினாள். பைந்தமிழ்க்குமரன் விளக்கம்கூறினான். அவன் கூறிய விளக்கங்களைக் கேட்டபோது அவனுடைய மனத்துயர் அவனை அறியாமலே விலகத் தொடங்கியது. அவனும் அதில் தன்னை மறந்து உற்சாகமாகவே ஒன்றிவிட்டான்.

சாளரத்தின் வழியே குளிர்காற்று இதமாக வீசியது. குன்றின் மீது



அடர்ந்து கிடந்த மரங்களில் பசுமை இனிய காட்சி நல்கியது.

''வைகையாற்றங் கரையில் என்னிடம் வீர சபதம் செய்து கொடுத்தீர்களே அது நினைவு இருக்கிறதா?''

''அது ஒன்றுதான் என்னுடைய முதல் நினைவு; முக்கியமான கனவு.''

''அதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? புலவராகிய உங்களால் அது எவ்வாறு சாத்தியமாகும்?''

''வள்ளுவர் இருக்கிறார்; அவர் எனக்கு வழி காட்டுவார்; வெற்றியும் தேடித் தருவார்'' என்றான் பைந்தமிழ்க் குமரன்.

கயல்விழியால் தமது நகைப்பை அடக்க முடியவில்லை. அவளையும் மீறிய ஏளனச் சிரிப்பு அது. இளைஞனுக்கு அது சுருக்கென்று தைத்துவிட்டது.

''கயல்விழி! நீ பாரதக் கதையைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? மிகப் பெரிய போர் ஒன்று அதில் பதினெட்டு நாட்கள் தொடர்ந்து நடந்ததே தெரியுமா, உனக்கு?''

''தந்தையார் கதை சொல்லியிருக்கிறார்கள்.''

''போர் தொடங்குவதற்கு முன்னால் துவாரகையின் அரசனான கண்ணனைத் தங்கள் பக்கத்தில் சேர்ந்து கொள்ளும்படி கேட்பதற்காகப் பாண்டவர்களுக்காக அர்ஜுனனும் கௌரவர்களுக்காகத் துரியோதனனும் சென்றார்கள். கண்ணனோ இருவருக்குமே உறவினராதலால் இருவருக்குமே உதவுவதாகச் சொன்னார்....''

புலவனிடம் அகப்பட்டுக் கொண்டால் கதை கேட்காமல் இருக்க முடியாது என்று உற்றுக் கேட்டாள் கயல்விழி. அவன் கதை கூறிய முறையிலும் அவளுக்கு ஒரு தனி அழகு புலப்பட்டது.

''உம்; பிறகு?''

''கண்ணன் அவ்விருவரிடமும் கூறினார்: 'என்னுடைய லட்சக்கணக்கான போர்வீரர்களையும் அவர்களுக்கான ஆயுதங்களையும் ஒருவருக்குக் கொடுக்கிறேன். என்னை மட்டும் மற்றொருவருக்குக் கொடுக்கிறேன். ஆனால் நான் என்னைக் கொடுத்தாலும் ஆயுதம் ஏந்திப் போர் புரிய மாட்டேன். போர் புரியாத இந்தக் கண்ணன் யாருக்கு வேண்டும்? லட்சக்கணக்கான என் வீரர்களும், ஆயுதங்களும் யாருக்கு வேண்டும்?''

''எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்!'' என்று குதூகலத்தோடு கூறினாள் கயல்விழி. ''கண்ணனை மட்டும் தன்னுடைய சாரதியாக ஏற்றுக்கொண்டான் அர்ச்சுனன். சேனை வீரர்களையும் போர்க் கருவிகளையும் கேட்டான் துரியோதனன்.''

''வெற்றி பெற்றது யார்?'' என்று கேட்டான் பைந்தமிழ்க் குமரன்.

''அர்ச்சுனன்!''

''எப்படி?''

கயல்விழி மருண்டு விழித்தாள்.

''கண்ணன் புலவனாக மாறி அர்ச்சுனனுக்குக் கீதையை உபதேசம் செய்தான். லட்சக்கணக்கான போர்வீரர்களை விடக் கண்ணனின் கீதைக்கு எவ்வளவு வலிமை என்பது தெரிகிறதல்லவா?''

வியப்புடன் அவன் விழிகளை நோக்கினாள் கயல்விழி.

''அன்று அர்ச்சுனனுக்குக் கீதை ஓர் ஆயுதமாக இருந்ததென்றால், இன்று எனக்கு வள்ளுவரின் குறள் ஏன் ஆயுதமாக இருக்க முடியாது? செந்தமிழ் மதுரையில் பிறந்த நான் இந்தப் பொய்யாமொழியின் வழியில் செல்லவில்லையென்றால் நான் தமிழனாய்ப் பிறந்து பயன் என்ன?''

இளைஞனின் கண்களில் புத்தொளி சுடர் விட்டது. அவன் தான் ஒரு நோயாளி என்பதையே மறந்துவிட்டான். எல்லையற்ற நம்பிக்கையும் ஆண்மையும் அவனை ஆட்கொண்டுவிட்டன என்பதைக் கண்டாள் கயல்விழி.

''முதற் கடமையாக நான் இந்த நாட்டின் இருட் சிறைகளில் வாடும் வள்ளுவரையும் மற்றப் புலவர்களையும் அவர்களுடைய சிறையிலிருந்து விடுவிக்கப் போகிறேன். வள்ளுவர் தலைமையில் ஒரு புலவர் படை திரட்டி இந்த நாடு முழுவதும் அனுப்பப் போகிறேன். என் கடமையில் பெரும் பகுதியை அவர்களே முடித்து விடுவார்கள்.''

வள்ளுவரைச் சிறை மீட்பதா! புலவர்கள் படை திரட்டுவதா! 'ஐயோ பாவம்! சித்தப் பிரமை கொண்டவர் போல் பேசத் தொடங்கி விட்டாரே!' என்று கவலைப்பட்டாள் கயல்விழி.

''மன்னரும் மக்களும் ஒன்று கூடிச் சங்கம் அமைத்துப் புலவர்களையும் இலக்கியங்களையும் போற்றி வளர்த்த செந்தமிழ் மண் இது. அப்போதெல்லாம் இந்த நாடு சீரும் சிறப்பும் பெற்றுத் தலைநிமிர்ந்து நின்றது. இப்போதோ நமக்கு வழி காட்டும் அந்தப் பண்பாளர்கள் ஏட்டுச் சுவடிகளுள் சிறைப்பட்டு இருட்டு மூலைகளில் பதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வடிக்கும் கண்ணீரில்தான் இந்த நாட்டின் துன்பங்களே முளைத்திருக்கின்றன.''

கயல்விழிக்கு அந்த இளம் புலவனின் தலைக்குள்ளே பெரிய பெரிய விஷயங்கள் நிறைந்திருப்பது போல் தோன்



நட்சத்திரங்கள் அறிவிக்கின்றன

உங்கள் வருங்காலம் சந்தோஷமாக விளங்க பஞ்சாப் நேஷனல் பாங்குடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவரா? பகற் கனவு காண்பவரா? உங்கள் கனவுகள் நனவாக **பஞ்சாப் நேஷனல் பாங்க்** *உங்களுக்கு உதவி புரியட்டும்.*

பஞ்சாப் நேஷனல் பாங்க் *சேமிப்புக் கணக்கில், தவறாது ஒழுங்காக போடப்படும் தொகைகள் ஆச்சரியமான வகையில் வளர்ச்சியடைவதுடன், உங்கள் இன்பக் கனவுகள் நனவாவதுபோல உங்கள் வருங்காலம் சந்தோஷமாகவும், இடமாகவும் இருக்க உதவுகிறது. நமது தேச முழுவதிலும் பரவியுள்ள* **பஞ்சாப் நேஷனல் பாங்கின்** *438 காரியாலயங்களில் ஏதாவது ஒன்றுக்கு விஜயம் செய்யுங்கள்; அங்குள்ள ஊழியர்கள் உங்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் உதவி புரிவார்கள்.*

PNB 70 - வது ஆண்டின் சேவையில்!

தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்

நவீனகால இந்திய பாங்குத் தொழிலில் மிகப் பழைய ஸ்தாபனம்

றியது. அவனே எட்ட முடியாத கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டே அவளிடம் ஏதேதோ பேசினன். சில செய்திகளை மட்டுமே அவளால் விளங்கிக்கொள்ள முடிந்தது. ஆனல் ஒன்றே ஒன்றை மட்டும் அவள் உறுதியாகக் கண்டுகொண்டாள். அவன் இதயம் அன்புப் பெருக்கால் பொங்கி வழியும் இதயம். பாண்டிய நாட்டு மக்களின் துயரைக் களைவதற்காக அவன் இன்னும் எத்தனையோ துன்பங்களை ஏற்றுக் கொள்வதற்குச் சித்தமாக இருந்தான். அவனுடைய அன்புக்குப் பாத்திரமான அந்த நாட்டு மண்ணில் பிறந்ததற்காகக் கயல்விழி இப்போது பெருமை கொண்டாள்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

தீயில் பிறந்த கண்ணீர்

குலசேகர பாண்டியரிடமே பாண்டிய மண்டலத்தின் ஆட்சிப்பொறுப்பை ஒப்புவிக்கப் போவதாகக் குலோத்துங்கர் விடுத்த அறிவிப்பு நாட்டின் எல்லாத் திசைகளுக்கும் பரப்பப்பட்டது. சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி செய்யும் மகத்தான தியாகம் இது என்று முரசுகள் முழங்கத் தொடங்கின. 'தியாக விநோத'ரின் இந்தத் தியாகத்தைப் பாண்டிய மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய வெறுப்பைத் தணிப்பதற்காக அரும் பாடுபட்டார் குலோத்துங்கர்.

ஆனல் குலசேகர பாண்டியர் இன்னும் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை.

இதனல் கலவரமடைந்த சக்கரவர்த்தி, குலசேகர பாண்டியர் மீது தமக்கொன்றும் கோபமில்லை என்றும், இளைஞன் சுந்தர பாண்டியனின் அடக்கமின்மையே போருக்குக் காரணமென்றும் அறிவிப்புகள் விடுத்தார். அந்தச் சிறியோன் செய்த சிறு பிழையைப் பெரியோராகிய தாம் மன்னித்துவிட்டதாகவும் பாண்டியருக்கு எல்லாவித அரச மரியாதைகளோடும் நாட்டை வழங்கப் போவதாகவும் கூறினர்.

மறைந்து வாழ்ந்த குலசேகர பாண்டியரை விழுப்பரையர் சந்தித்து விவரங்களைக் கூறியபோது, அவர் இதனல் சிறிதும் உற்சாகம் கொள்ளவில்லை. சுந்தர பாண்டியன் கொல்லப்பட்டான் என்ற செய்தி அவரை உருக்குலைத்து விரக்தி யடையச் செய்து விட்டது.

''சக்கரவர்த்தியின் பிரிவினல் மீண்டும் அவரது மேலாட்சிக்கு அடங்கி நாம் அரசு செய்வதானல், நாம் இந்தப் போரையே நடத்தியிருக்க வேண்டாமே!'' என்ருர் குலசேகர பாண்டியர். சுந்தர பாண்டியனின் பிரிவுக்குப் பின்பு அவர் அரண்மனையில் வாழ்வதை விட அரண்யத்தில் வாழ்வதே தமக்கு அமைதி தரும் என்ருர்.

''நாம் இமைக்கு அடிபணிய மாட்டோம் என்பதை நிலைநாட்டுவதற்காகவே இந்தப் போரை நாம் ஏற்றுக் கொண்டோம். இதில் நமக்கு வெற்றி கிட்டுமென்று நாம் நினைக்கவுமில்லை; இது கடைசிப் போராட்டமுமல்ல'' என்று வாதாடினர் விழுப்பரையர்.

''கடைசிப் போரை எவன் நடத்துவான் என்று நம்பி யிருந்தேனே அவனை முதற் போரிலேயே பறி கொடுத்து விட்டேனே!''

சுந்தர பாண்டியன் உயிரோடிருக்கிருன் என்பதையும் அதுவும் அடுத்தாற் போல் உள்ள கொடுங்குன்றத்தின் சரிவிலேயே இருக்கிருன் என்பதையும் கூறிவிடத் துடிதுடித்தது விழுப்பரையர் மனம். ஆனல் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார். விரைவில் வந்து மீண்டும் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுர்.

பைந்தமிழ்க் குமரனுக இருந்த சுந்தர பாண்டியனின் உடல் நிலையில் இப்போது தேற்றம் கண்டிருந்தது. எழுந்து நடமாடத் தொடங்கி விட்டான் அவன்.

கயல்விழியைக் கொடுங்குன்றம் நகரத்துக்கு அழைத்து வந்து அங்கு குடியேறியிருந்த குடும்பத்தாருடன் வசிக்கச் செய்திருந்தார் விழுப்பரையர். பகல் பொழுதுகளை அவனுக்குப் பணிவிடைகள் செய்வதிலும் அவனோடிருந்து குறள் படிப்பதிலுமாகக் கழித்துவிட்டு மாலை நேரங்களில் வீட்டுக்குத் திரும்பி விடுவாள் கயல்விழி. திருவுடைத் தேவியாரின் தாயன்பும் உய்யவந்தாளின் உற்ற பருவத்துத் தோழமையும் அவளுக்கு ஏற்றவையாக இருந்தன. உய்யவந்தாளின் தாங்க முடியாத துயரம் கயல்விழிக்கு அவளிடம் உள்ள கனிந்த பரிவைப் பொங்கச் செய்தது.

விழுப்பரையர் சுந்தர பாண்டியனுக்கு அரண்மனையில் மெய்க் காவலனுக இருந்த அம்பலக் கூத்தனையும் அழைத்துக் கொண்டு அவனைக் காணச்

சென்றிருந்தார். அம்பலக் கூத்தன், நெடும்பனை போல் உயர்ந்து வளர்ந்தவன். அவனுடைய தோற்றமும் விழிகளுமே கண்டோரைக் கதி கலங்கச் செய்யக் கூடியது. ஆனால் வயதில் இளைஞன்.

இந்தப் போரினால் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி உரு மாறிப் போயிருந்தான் அவன். முகத்தில் பாய்ந்த பகைவரின் கொடுவாள் அவனது இடது பக்கத்து நெற்றியையும் புருவத்தையும் இரு கூறாகப் பிளந்திருந்தது. இடது கண் செங்கோளமாக மாறிப் போய்விட்டது. அந்தப் பக்கத்துக் கன்னத்தின் சதை சிறிது சரிந்து தொங்கியது. மருத்துவத்தால் காயங்களை ஆற்ற முடிந்ததே தவிர, அவற்றால் ஏற்பட்ட கொடிய வடுக்களை மாற்ற முடியவில்லை.

சுந்தர பாண்டியனை அந்த நிலையில் உயிரோடு கண்டவுடன் அவனது ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் ஓர் எல்லை இல்லை. "பிரபு! பிரபு!" என்று கதறிக்கொண்டே அவன் கால்களில் விழுந்தான்.

"யாரது, அம்பலக்கூத்தனா?"

மெல்ல அவனைப் பற்றித் தூக்கி அவனது பயங்கரமான முகத்தைப் பார்த்தான் சுந்தர பாண்டியன். அன்புப் பெருக்கோடு அவனைத் தழுவிக் கொண்டு தனது விரல்களால் மெல்ல அவனது முகத்தைத் தடவிக் கொடுத்தான். சிவந்து போயிருந்த அம்பலக் கூத்தனின் இடது கண்ணிலிருந்து இரத்தம் போல் கண்ணீர் கசிந்து அவன் விரல்களை நனைத்தன.

"கூத்தா!"

"இளவரசே! தங்களை உயிரோடு கண்டவுடன் என் கவலையெல்லாம் தீர்ந்து விட்டது!"

"இளவரசனில்லை" என்று அவனகாதருகில் மெதுவாய்க் கூறி, "புலவர் பைந்தமிழ்க் குமரன்" என்று புதுப் பெயரை நினைவூட்டினார். கனவிலும் அவன் அதை மறந்துவிடக் கூடாதென்றார்.

விழுப்பரையரும் இளவரசனும் தனித்துப் பேசத் தொடங்கினார்கள். அம்பலக்கூத்தன் மண்டபத்துக்கு வெளியில் வந்து நின்று கொண்டான். விழுப்பரையர் குலோத்துங்க சோழரின் அறிவிப்பையும் அதற்குக் குலசேகர பாண்டியர் இணங்க மறுப்பதையும் தெரிவித்தார்.

"தாங்கள் பிரிந்து விட்டதாக எண்ணி மிகவும் அதிர்ச்சி அடைந்திருக்கிறார் அரசர். அதனால்தான் ஆட்சியை ஏற்க அவரால் இணங்க முடியவில்லை. தங்களுடைய ஆலோசனையைக் கேட்டுப் போக வந்திருக்கிறேன்."

சுந்தர பாண்டியன் தன்னை அப்போது வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. "தாங்கள் இப்போது இதை வெளியிடுவது உசிதம் என்று கருதுகிறீர்களா?" என்றான்.

"கூடாது; தலைநகரத்திலும் அரண்மனைக்குள்ளும் ஒற்றர் கூட்டத்தை நிரப்பி வைத்திருப்பார் குலோத்துங்கர். பெரிய பாண்டியர் எவ்வளவுதான் எச்சரிக்கையோடு இருந்தாலும் சில சமயங்களில் தவறுகள் நிகழ்ந்து விடக் கூடும். தங்களைச் சந்திப்பதற்கும் தங்களுக்கு உதவி செய்வதற்கும் அவர்கள் முயற்சிகள் செய்வார்கள். அன்புக்கும் பாசத்துக்கும் நாம் தளையிட்டு வைக்க முடியாது."

"ஆமாம், நம் குடிமக்களுக்கு அவர் செய்ய வேண்டிய அவசரக் கடமைகளைப் பாண்டியருக்கு நினைவூட்டுங்கள். நான் மறைந்திருந்தே என் கடமைகளைக் கவனிக்கிறேன். தாங்கள்தாம் அங்கும் இங்கும் எங்கும் இருக்கப் போகிறீர்கள்."

அடுத்தாற்போல் பாண்டியர் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இளவரசன் குறிப்பிட்டபோது, பெருவியப்பில் ஆழ்ந்து போனார் விழுப்பரையர்.

அவன் கூறினான்:

"போரில் ஏற்பட்ட அழிவுகள் இரண்டு வகையானவை. உயிர்ச் சேதத்தை நம்மால் ஈடுகட்ட முடியாது. ஆனால் உயிர்ச் சேதத்தால் வீரர்களின் குடும்பத்தாருக்கு ஏற்பட்டுள்ள புறச் சேதங்களையும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருட் சேதங்களையும் நாம் உடனடியாக ஈடு செய்ய வேண்டும். எரிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் ஒன்பது புது மனைகள் எழுப்பலாம். எங்கெங்கெல்லாம் அழிவுவேலைகள் நடைபெற்றிருக்கின்றனவோ அங்கெல்லாம் மும்மடங்கு புதுப் பொலிவோடு விளங்கும்படியாக ஆக்கப் பணிகள் செய்யலாம். நான்மாடக்கூடலான மதுரையை நாற்பது மாட, கூடங்கள் நிறைந்தவாறு புதுப்பிக்க முடியாதா என்ன?"

திகைத்தார் விழுப்பரையர். சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் அவன் ஊசலாடிக் கொண்டிருந்த போதும், அவன் எண்ணமெல்லாம் அவனிடம் இல்லை போலும்! தன்னுயிரைப் போல் அவன் மக்கள் உயிரை மதிக்கவில்லை.

அதற்கும் மேலே ஒரு படி மிஞ்சிப் போய் விட்டான்.

''இளவரசே! நாடு இருக்கும் நிலையில் இதையெல்லாம் செய்வதென்பது...''

''ஏன் முடியாது?'' என்று கேட்டான் சுந்தரபாண்டியன். ''துன்பத்தை வெல்லுவதற்கு அந்தத் துன்பத்தையே ஆயுதமாகக் கொண்டு போராடுவதை விடச் சிறந்த வழி வேறு இல்லை. மக்கள் கூட்டம் தான் நினைப்பதை விட அதிகமான துன்பத்தையும் பொறுப்பையும் தாங்கக் கூடியது. அதை ஒன்றுபடுத்தி நாம் ஆக்கப் போராட்டத்தில் திருப்பி விட வேண்டும். தென் பாண்டிய நாடு போரினால் பாதிக்கப்படவில்லையல்லவா? தனக்காகப் போராடிய வட பாண்டி மண்டலத்துக்கு அது நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அங்கிருந்து உணவு, பொருள், ஆட்கள் யாவுமே திரட்டப்பட்டு இங்கு வந்து சேர வேண்டும். மக்கள் மடிந்தார்களே தவிர, இந்த நாட்டின் அன்பும் அறமும் அழிந்து விடவில்லை?''

விழுப்பரையர் அன்பின் உருவமாகத் திகழ்ந்த அந்த இளைஞனுக்குத் தமக்குள் ஆசி கூறிக்கொண்டு அவனிடமிருந்து விடைபெற்றார். குலசேகர பாண்டியரை இசையச் செய்வதற்கு அவருக்கு ஓர் இலட்சியமும் கிடைத்து விட்டது.


பின்னர் அம்பலக்கூத்தனை அழைத்து வைத்துக்கொண்டு நாட்டு நடப்புக்களைக் கேட்டான் சுந்தர பாண்டியன். போரினால் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் போர் நெறிக்கு உட்பட்ட நிகழ்ச்சிகளாகத் தோன்றவில்லை. குலோத்துங்க சோழரே முன்னால் நின்று நடத்திய போரில் இந்த அளவுக்கு நெறி கெட்ட செயல்மிருந்திருக்கும் என அவன் கற்பனை செய்யவே இல்லை.

அது அதர்ம யுத்தமாக மாறிவிட்டது. அதில் பாண்டிய நாட்டுப் பெண்களுக்கு நேர்ந்த இன்னல்களைக் கூத்தன் கூடியவரையில் மறைத்துக் கூற முயன்றான். அதிலிருந்தே அதன் கொடுமை நன்கு புலப்பட்டு விட்டது இளவரசனுக்கு.

பேச்சின் இடையில் கூத்தனைப் பற்றியும் கேட்க நினைத்தவன் ''ஆமாம், நீ திருமணம் செய்துகொள்ள விரும்பினாயே ஒரு பெண் அவள் நலமாக இருக்கிறாளா?'' என்று கேட்டான்.

கேட்ட பிறகுதான் கேட்டது தவறு என்று தோன்றியது அவனுக்கு.

அம்பலக் கூத்தனின் அங்கமெல்லாம் பதறித் துடித்தது இந்தக் கேள்வி



''நான் புதைச்சு வைத்திருந்த எலும்புத் துண்டை யாரோ திருடிக்கிட்டுப் போயிட்டாங்களே!''

''அப்படியா? உடனே ஓடு! அதோ பாரு அந்தப் போலீஸ் நாயிகிட்டே கம்ப்ளெயின்ட் பண்ணு. போ! அது வந்து 'டிடெக்ட்' பண்ணித் திருடனைக் கண்டு பிடிச்சுடும்.''

யால். அவன் பதில் கூற முயன்றான்; ஆனால் முடியவில்லை. பற்களைக் கடித்தான். முன்பே பயங்கரமாகத் தோற்றமளித்த அவன் முகம் இன்னும் பயங்கரமாக மாறியது.

''வேண்டாம் அம்பலக் கூத்தா! நீ எதுவுமே கூற வேண்டாம். உனக்குத் துன்பம் நேரும் என்று தெரியாமல் கேட்டு விட்டேன்.''

''பிரபு! பிரபு!'' என்று குலுங்கி அழுதான் கூத்தன். ''என் தெய்வத்திடம் கூறாமல் நான் வேறு யாரிடம் கூறுவேன்? என் தெய்வத்திடம் முறையிடாமல் நான் வேறு யாரிடம் சொல்லி முறையிடுவேன்? ... அவள் ... அவள்... கறைபட்டுவிட்ட களங்கத்தால், நான் எவ்வளவு மன்றாடியும் கேளாமல், என்னைத் தீண்டாமலே தீக்குளித்துவிட்டாள் பிரபு!''

அவன் அன்று மூட்டிய தீ இன்று சுந்தர பாண்டியனின் நெஞ்சுக்குள்ளே பற்றிக் கொண்டது. அவன் தன் காயங்கள் நெருப்பாய்ப் பற்றியபோதெல்லாம் அழுது அறியாதவன். எத்தனையோ துன்பங்களிலும் புடம் போட்ட பொன்னாய்த் திகழ்ந்தவன்.

'இடுக்கண் வரும்போது நகைத்து விடு என்று கூறியுள்ளாயே, தலைவா, நான் இதையும் தாங்கிக்கொண்டு உயிர் வாழ வேண்டுமா?' என்று தனக்குள்ளாகவே ஓலமிட்டுக் கதறினான்.

அன்று இரவில் அவன் அழுத அழுகையில் பாண்டிய நாட்டுப் பெண் குலமனைத்தும் அந்தப் போரில் அடைந்த துயரம் கலந்திருந்தது. கண்கள் வீங்கிச் சிவக்கு மட்டும் அவன் அழுதான். நித்திரைத் தேவியும் அவனோடு சேர்ந்து புலம்பினாள். (தொடரும்)





இன்பமான கனவுகள் உட்வர்ட்ஸுக்கு நன்றி!

மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Aiyars ATC-308 TAM R




ஹோட்டல் தொழில் இன்று சுற்றுப் பிரயாணிகளுக்கு ஜீவநாடியாகத் திகழ்கிறது. அயல்நாட்டுச் செலாவணி பெற்றுத் தரும் கற்பக விருக்ஷங்களில் ஒன்று. அதற்கு மவுசும் மதிப்பும் இன்று பெருகியிருக்கின்றன. இரண்டு அமெரிக்க ஜனாதிபதிகளைத் தமதுமுன்னோர்களாகக் கொண்ட கென்னடஸ்ஹாரியட் ஆஸ்திரியாவில் ஓர் அற்புதமான ஹோட்டலை நிர்வகித்து நடத்தி வருகிறார். 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' அல்லவா?


பாலக்காட்டுக்கும் ஹோட்டல் தொழிலுக்கும் ஒரு நெருங்கிய உறவு இருக்கிறது. பாலக்காட்டில் ஆலத்தூரில் பிறந்த திரு பி. ஜி. எஸ். மணி பாலக்காடு நேடிவ் பள்ளியில் பயின்றார். அப்பொழுது அன்னிய அரசாட்சி நடந்து கொண்டிருந்த காலம்; சர்க்கார் உத்தியோகம் பெரிதாகப் போற்றப் பட்ட காலம். திரு மணியின் தந்தை ஓடு தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்தார். அவர் மணியிடம், ''நீ ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம். ஆனால் சர்க்கார் உத்தியோகத்துக்குமட்டும் ஆசைப்படாதே!'' என்று புத்திமதி கூறினார்.


இன்று ஹோட்டல் தொழிலதிபர்களில் ஒருவராகத் திகழும் திரு பி. ஜி. எஸ். மணி ஆந்திரப் பிரதேசத்தில் கடப்பாவில் மூன்று கிளைகளையும், கர்நூலில் ஒரு கிளையையும், சென்னையில் டூரிஸ்ட் ஹோமையும், 'வேகா' உணவு விடுதியையும் நிர்வகித்து நடத்தி வருகிறார்.

''ஸார்! நான் தொழில் கற்க வேண்டும் என்ற ஆசையில் சென்ட்ரல் லாட்ஜில் சிறிது காலம் சர்வராகக் கூடப் பணியாற்றியிருக்கிறேன்!'' என்று பெருமிதத்துடன் கூறினார் திரு மணி.

திரு மணி இங்கிலாந்து சென்று ஹோட்டல்நிர்வாக சம்பந்தமான பயிற்சியை லண்டன் 'ராபிட் ரிஸல்ட்' கல்லூரியில் பெற்றார். ஹோட்டல் நிர்வாகம், விற்பனைத் திறமைக்குரிய சான்றிதழ் இவருக்குக் கிடைத்தது. இவரது திறமையைக் கண்டு லண்டன் ஹோட்டல், காட்டரிங் இன்ஸ்டிட்யூட்டில் இவரை அங்கத்தினராக்கிக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல; சுகாதார ராயல் சொஸைட்டியில் துணை அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டார்கள். ஹோட்டல் தொழிலின் முன்னேற்றத்தைத் தெரிந்து கொள்வதற்காக ஸ்விட்ஸர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்.







''தாங்கள் சென்னையில் நிறுவியுள்ள தங்கள் உணவு விடுதிக்கு 'வேகா' என்ற பெயர் வைத்திருப்பதே புதுமையாயிருக்கிறது. இது தவிர வேறு புதுமைகள் ஏதாவது உண்டோ ?''

''வெஜிட்டேரியன் என்ற பொருளைக் குறிக்க 'வேகா' என்று சுருக்கி வைத்தேன். தரமான உணவைச் சுகாதார முறையில் சுத்தமாக வழங்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்'' என்று கூறிச் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றார். சமையல் அறையில் காஸ் அடுப்புக்கள் எரிய, நல்ல சுத்தமான உடையணிந்து, டாக்டர்கள் போல் கவுனைப் போட்டுக் கொண்டு, பணியாளர்கள் உணவுப்பொருள்கள் தயாரித்துக் கொண்டிருந்

தார்கள். உணவுப் பொருள்கள் வைக்கப்படும் தட்டுகள், கரண்டிகள், தம்ளர்கள் எல்லாம் விஞ்ஞான முறைப்படி சுத்தமாக, நன்றாகக் கழுவப்படுவதைக் கண்டேன். இதற்கென்று லண்டனிலிருந்து தயாரித்து வந்துள்ள (படம்) கழுவும் கருவிகளைக் காண்பித்தார். சுகாதார முறைப்படி சுத்தமான முறையில் அமைந்த சமையல் அறையைப் பார்த்த பிறகு யாருக்குத்தான் சாப்பிடத் தோன்றாது? ஸ்ரீ மணி ரொம்பக் கெட்டிக்காரர்! ஹோட்டல் என்றால் சுத்தமாக இருக்குமோ, என்னவோ என்று பயந்து நடுங்கிக் கொண்டு வரும் ஆசாமிகளுக்கு ஒரு தடவை இப்படிச் சமையல் அறையைச் சுற்றிக் காண்பித்து நிரந்தர வாடிக்கையாளராக்கிக் கொண்டு விடுகிறார்.

ஹோட்டல் தொழில் சம்பந்தமாக ஒரு பெரிய நூலகமே வைத்திருக்கிறார் மணி.


''ஸார்! உலகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்பவர்கள் மொத்தம் ஆயிரத்தைந்நூறு கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். அதில் நம் இந்தியாவுக்குக் கிடைப்பது இருபத்திரண்டு கோடியேதான். அயல்நாடுகளில் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்க முதல்தர ஹோட்டல்களை நடத்துகிறார்கள். ரயில் விமான சௌகரியங்களைப் பெருக்குகிறார்கள். கண்கவர் வனப்புப் பிரதேசங்களை உண்டாக்க எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறார்கள். நம் நாட்டில் அயல்நாட்டுப் பிரயாணிகளைக் கவர ஹோட்டல் தொழிலே உறுதுணையானது. ஹோட்டல் தொழிலுக்கு நல்ல தேர்ந்த பயிற்சியாளர்கள் தேவை. சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களில் மட்டுமே நான்கு ஹோட்டல் தொழில் கல்லூரிகள் இருக்கின்றன. இவை போதாது. இன்னும் இந்தத் தொழில் கல்லூரிகள் பல திறக்கப்பட வேண்டும்!'' என்றார் திரு மணி.

ஹோட்டல் தொழில் அபிவிருத்திக்குப் பாடுபடுவதில் கவனம் செலுத்துகிறார் மணி. இந்தத் தொழில் கற்கும் மாணவர்களுக்குப் பல 'ஸ்காலர்ஷிப்'புகள் வழங்கியுள்ளார். ராயலசீமைப் பகுதியில் பஞ்சம் வந்த காலத்தில் அரிசியோடு சில பயறுகளைச் சேர்த்து உணவுப் பொட்டலங்களைத் தயாரித்து உடனுக்குடன் அவற்றைக் கிராமங்களிலுள்ள இருநூறு உணவு விநியோகிக்கும் இடங்களுக்கு அனுப்பினார். இரண்டாவது உலக யுத்தத்தின்போது விறகுப் பஞ்சமும், அதற்கு ரேஷனும் ஏற்பட்டதல்லவா? அந்தச் சமயத்தில் இவர் 'உமி அடுப்பை'த் தயாரிக்கச் செய்து அதைப் பிரபலப்படுத்தியிருக்கிறார்.

'' 'வேகா'வில் வட இந்தியர், தென்னிந்தியர், அன்னிய நாட்டினர் யார் வந்தாலும் அவரவர் முறைக்கேற்ற உணவுகளை வழங்கி வருகிறோம். தேர்ந்த பணியாளர்கள் அளிக்கும் தரமான உணவுகள், சுத்தமாக அளிக்கப்படுவதற்குச் சிறிது கூடுதல் விலை கொடுக்க யாரும் தயங்க மாட்டார்களே? இருந்தாலும் மத்தியதர வகுப்பாருக்கும் தரமான உணவைக் குறைந்த விலையில் தரக்கூடிய ஹோட்டல்களை நடத்துவதற்கான திட்டங்களைப் போட்டு வருகிறேன்'' என்றார் திரு மணி.

அவரது இடையறாத ஊக்கமும், உழைப்புமே இத்தனை தூரம் அவர் தொழில் துறையில் சிறந்து விளங்கத் துணை புரிந்திருக்கின்றன.

—குண்டுமணி




சிக்கனத்திலேயே
சிங்காரம்
எந்நேரத்திலும்...
எவ்விடத்திலும்...
எச்சந்தர்ப்பத்திலும்...
உங்கள் எழில் மேம்படக் காண்கிறீர்கள்
கட்டாவ்
வாயில்களினுல்
தி கட்டாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கோ. லிட்.
216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1
SISTA'S Kms-328 R





பத்து வயதுதான் ஆகிறது. ஆனால் ஏழைக் குடும்பத்திலே பிறந்து விட்டான். உழைத்தால்தான் பிழைப்பு நடக்கும். எனவே ஒரு நூற்பு ஆலையில் கூலியாளாகப் போய்ச் சேர்ந்தான். காலை ஆறு மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை வேலை. காலையில் வீட்டை விட்டுப் புறப்படுகிறபோது, பகல் உணவு எடுத்துக் கொண்டு போக முடிகிறதோ இல்லையோ, கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு போவான். ஒரு நாளும் இதை மறந்ததே இல்லை. பகலில் சுமார் ஒரு மணி நேரம் ஓய்வு கிடைக்கும். அந்த நேரத்தில், காலை தான் எடுத்துக் கொண்டு வந்த புத்தகத்தைப் படிப்பான். வேலை செய்யும்போது, நூல் நூற்கும் யந்திரத்தின் ஓர் ஓரத்தில் அந்தப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு, அதன் மீது தன் பார்வையையும், மனத்தையும் செலுத்துவான்; கை மட்டும் தன்பாட்டுக்கு யந்திரம் போல் வேலையில் ஈடுபட்டிருக்கும். இவனுடைய அறிவுப் பசி, வயிற்றுப் பசியை விஞ்சியிருந்தது. அதனைத் தீர்த்துக் கொள்வதிலேயே இவன் நாட்டமெல்லாம் சென்றது. இதனால் உடல் நலிந்தவனாகி வந்தான். ஆயுள் முழுதும் இந்த உடல் நலிவினாலேயே அவதிப்பட்டான். ஆனால் இந்த நலிந்த உடலில் எத்தகைய திண்ணிய மனம் குடி கொண்டிருந்தது! திண்ணிய மனமாயிருந்தாலும் இதில் அன்பெனும் ஊற்று எப்பொழுதும் சுரந்து கொண்டிருந்தது; நன்னம்பிக்கையும் நிறைந்திருந்தது. இதனால்தான் இவனுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் சலிப்பில்லாமல் நடை பயணத்தை மேற்கொள்வதோ, மேற்கொண்டதன் விளைவாக, அதுகாறும் அறியப்படாதிருந்த தென்னாப்பிரிக்காவின் பெரும் பகுதியைக் கண்டுபிடித்து உலகறியச் செய்வதோ சாத்தியமாயிருந்தது; வழியில் ஏற்பட்ட ஆசாபங்கங்கள், சந்தித்த ஆபத்துகள் எல்லாவற்றையும் அலட்சியமாகச் சமாளிக்க முடிந்தது. ஆம்; தென்னாப்பிரிக்காவில், சுமார் ஆயிரத்து அறுநூறு மைல் நீளமுள்ள ஜாம்பெஸி நதி ஓடிக் கொண்டிருக்கிற வரையில், சுமார் முந்நூற்று நாற்பது அடி உயரத்திலிருந்து விழும் விக்டோரியா நீர்வீழ்ச்சித் திவலைகள் தெறித்துக் கொண்டிருக்கிற வரையில் நூற்றுக்கணக்கான சதுர மைல் பரப்புள்ள நாலைந்து ஏரிகளில் நீர் வற்றிப் போகாத வரையில், பூகோள சாஸ்திரிகள் இவன் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் இவைகளையெல்லாம் கண்டுபிடித்தவன் இவன்தான். இவன் பெயர் டேவிட் லிவிங்க்ஸ்டன்.

லிவிங்க்ஸ்டன் 1813ம் வருஷம் மார்ச்சு மாதம் பத்தொன்பதாம் தேதி ஸ்காட்லாந்திலுள்ள பிளாண்ட்டைர் என்ற ஊரில் பிறந்தான். சிறு வயதிலேயே இவனுக்கு ஊர் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தது. நூற்பு ஆலையில் வேலை செய்து வந்த பொழுது வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். அந்த ஒரு நாள் பொழுதையும் வீட்டில் கழிக்க மாட்டான். அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களுக்குக் கால் நடையாகச் சென்று, ஆங்காங்கு மண்டிக் கிடக்கும் செடி கொடிகளைக் கொண்டு வந்து பரிசோதனை செய்து பார்ப்பான்; கற்பாறை









லிவிங்ஸ்டன்

களைச் செதுக்கியெடுத்து வந்து, அவற்றின் காலம் தன்மை முதலியவைகளைப் பற்றி ஆராய முற்படுவான். இங்ஙனமே முன்பின் தெரியாதவர்களைப் பரிச்சயம் செய்து கொள்வதில் ஆவல் காட்டுவான். ஆகவே, புதுமையை நாடுவதிலேயே இவன் மனம் சென்றது.

பத்தாவது வயதிலிருந்து பதின்மூன்று வயது வரை நூற்பு ஆலையில் தொடர்ந்து வேலை செய்தான் லிவிங்ஸ்டன். தன் சம்பாத்தியத்தில் அவ்வப்போது சிறிது சிறிதாக மிச்சம் பிடித்து வந்தான். குறிப்பிட்ட ஒரு தொகை சேர்ந்தது. கிறிஸ்துவ மதப் பிரசாரகனாகவும் வைத்தியனாகவும் தகுதிப்படுத்திக் கொள்வதற்கான பயிற்சிகளைப் பெறுவதற்கு இந்தத் தொகை போதுமானதாயிருந்தது. ஆலை வேலையிலிருந்து விலகிக் கொண்டான். மேற்படி பயிற்சிகளைப் பெறவும், கூடவே கிரேக்க மொழியைக் கற்கவும் முற்பட்டான்.



நான்கு வருஷ காலம் பிடித்தது பயிற்சிகள் முடிய. அனைத்திலும் தேர்ச்சியடைந்தான். டாக்டர் லிவிங்க்ஸ்டனுனுன்.

கிறிஸ்துவ மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் லண்டனில், 'லண்டன் மிஷனரி சொஸைட்டி' என்ற ஒரு சங்கம் நடைபெற்று வந்தது. இந்தச் சங்கம் லிவிங்க்ஸ்டனை ஓர் அங்கத்தினனாகச் சேர்த்துக்கொண்டு தன் சார்பில் மதப்பிரசாரம் செய்யத் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்லும்படி சொல்லியது. இவனும் அப்படியே 1840ம் வருஷம் தன்னுடைய இருபத்தேழாவது வயதில் சில மருந்துகளுடனும், விவிலியம் சம்பந்தமான சில நூல்களுடனும் புறப்பட்டான்.

கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக் காலம் வரையில், தென்னாப்பிரிக்காவின் கடலோரமாகவும் அதற்குச் சிறிது உட்புறமாகவும் உள்ள சிலசில பிரதேசங்களுக்குத்தான் ஐரோப்பிய இனத்தவர் சிலர் வந்து போய்க் கொண்டிருந்தனரே தவிர, மையமாயுள்ள உட்பிரதேசங்களுக்கு அதிகமாக யாரும் துணிந்து சென்றதில்லை. மையத்தில் உள்ள அந்தப் பிரதேசங்கள் முழுதும் வெறும் மணற்காடென்றும், அங்கு புல்பூண்டுகளோ மனித சஞ்சாரமோ கிடையாது என்றும் இப்படி மேற்போக்கான சில எண்ணங்களே பெரும்பாலோரிடையே நிலவி வந்தன.


இந்த நிலைமையில் லிவிங்க்ஸ்டன், 1841ம் வருஷம் ஜுலை மாதம், தென்னாப்பிரிக்காவில் பெச்சுவானா லாண்ட் என்ற பகுதியிலுள்ள குருமான் என்ற ஒரு சிறு நகரத்துக்கு வந்து சேர்ந்தான். இது, தென்கோடியிலுள்ள கேப்டவுன் என்ற நகரத்துக்குச் சற்று வடகிழக்கே சுமார் எழுநூறு மைல் தொலைவில் உள்ளது. இங்கு டாக்டர் மாபெட் என்பவனுடைய தலைமையில் ஒரு கிறிஸ்துவ மடாலயம் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. லிவிங்க்ஸ்டன் வந்த சமயத்தில் டாக்டர் மாபெட் இங்கு இல்லை. இங்கிலாந்து சென்றிருந்தான்.

அவன் விடுமுறையிலிருந்து திரும்பி வந்து இவன் கடமை இன்னதென்று வரையறுத்துக் கொடுக்கிற வரையில் லிவிங்க்ஸ்டன் காத்திருக்கவில்லை. மடத்திலிருந்த ஒரு பாதிரியைத் துணை சேர்த்துக் கொண்டு உட்பகுதிகளுக்குச் சென்று சுதேசி மக்களுடன் தொடர்பு கொண்டான்; அவர்களுடைய பாஷையை இலேக இலேசாகக் கற்று வந்தான்; அவர்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் சம்பாதித்துக் கொண்டான். இப்படி நூற்றுக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து, மபோட்ஸா என்ற ஊரில் ஒரு மடாலயத்தை நிறுவி அங்கு தங்கிச் சுதேசிகளிடையே சமயப் பிரசாரம் செய்து வந்தான்.

மபோட்ஸாவும் அதையொட்டி சுமார் பத்துப் பன்னிரண்டு குக்கிராமங்களும் ஓர் அடர்த்தியான காட்டின் மத்தியில் இருந்தன. காட்டில் சிங்கங்கள் கூட்டம் கூட்டமாக வசித்துக் கொண்டிருந்தன. இவற்றுள் ஒன்றிரண்டு அடிக்கடி இந்தக் கிராமங்களுக்குள் நுழைந்து தொல்லை கொடுத்து வந்தன. கிராமவாசிகள் அச்சத்துடனேயே அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இவர்கள் மத்தியில் தங்கியிருந்த லிவிங்க்ஸ்டன் சும்மா யிருக்க முடியுமா? சிங்கங்களின் தொல்லையை ஒழிக்கத் தீர்மானித்தான். ஒரு நாள், சில சுதேசிகளை அழைத்துக் கொண்டு காட்டுப் பக்கமாகச் சென்றான். இவன் கையிலும் இன்னொரு சுதேசியின் கையிலும் துப்பாக்கிகள் இருந்தன. மற்றவர்கள் சூலாயுதம் தாங்கிக் கொண்டு ஆரவாரத்துடன் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும், எதிர்பாராத விதமாக ஒரு பெரிய சிங்கம் தென்பட்டது. லிவிங்க்ஸ்டன் அதனை நோக்கிச் சுட்டான். ஒரு குண்டு அதன் உடம்பில் பாய்ந்தது. அதுவும் உடனே இவன் மீது வேகமாகப் பாய்ந்து இவனுடைய இடது புஜத்தைக் கவ்விக் கொண்டது; ஒரு பூனை, ஓர் எலியைக் கவ்வி எப்படி உலுக்கி உலுக்கிக் கொடுக்குமோ அப்படியே இவனை உலுக்கி உலுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது. இவனுடைய தோள்பட்டையில் அதன் நகங்கள் பதிந்து, சுமார் பதினொரு இடங்களிலிருந்து ரத்தம் வடிந்த வண்ணமிருந்தது. இவனும் பிரக்ஞை இழந்து விட்டான். இந்த நிலையில், இவனோடு துப்பாக்கி சகிதம் வந்த சுதேசி, சிங்கத்தை நோக்கிச் சுட்டான். அது, லிவிங்க்ஸ்டனை விட்டு விட்டு, அவன் மீது பாய்ந்து அவன் தொடையை நன்றாகக் கடித்து விட்டது. அவன் பக்கத்திலிருந்த மற்றொரு சுதேசி தன் சூலாயுதத்தினால் அதனைத் தாக்கினான். இதற்குள் லிவிங்க்ஸ்டன் விடுத்த குண்டு அதன் வேலையைச் செய்யவே கீழே விழுந்து இறந்து விட்டது. சிங்கத்தினால் ஏற்பட்ட காயங்கள், லிவிங்க்ஸ்டனுக்கு அவன் ஆயுள் முழுதும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. கடைசி வரை, தனது இடது புஜத்தை நேராக நீட்டவோ உயர்த்தவோ முடியாமல் தவித்தான்.

இந்தக் காயங்களைப் பொருட்படுத்தாமல் லிவிங்க்ஸ்டன், மபோட்ஸாவைச் சுற்றிச் சமயப் பிரசாரம் செய்து வருகையில், டாக்டர் மாப்பெட் தன் குடும்பத்துடன் குருமானுக்குத் திரும்பி வந்து விட்டது தெரிந்து, அவனைச் சந்திக்க, அங்கு — குருமானுக்கு — சென்றான். அவனும் இவனைப் பார்த்ததுமே இவனிடத்தில் தனி அபிமானம் காட்டத் தொடங்கினான். தன் மூத்த மகளான மேரி என்பவளை இவனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். அவளும் இவனுக்கு மனமொத்த மனைவியாயிருந்து இவனுடைய சுக துக்கங்களில் சம பங்கெடுத்து வந்தான்.

லிவிங்க்ஸ்டன் எங்கு சென்றாலும் குடும்பத்துடனேயே சென்றான். கோலோபெங் என்ற ஓர் ஆற்றின் கரையில் சுயமாக ஒரு வீடு அமைத்துக் கொண்டு வசித்து வருகையில், வடக்குப் பக்கத்தில் நூற்றுக்கணக்கான மைல் பரப்புடைய ங்காமி (Ngami) என்ற பெரிய ஏரி இருப்பதைக் கேள்வியுற்று அதைக் கண்டுபிடிக்கச் சென்றான். இதற்காக சுமார் ஒன்றேகால் லட்சம் சதுர மைல் பரப்புடைய காலாஹாரி என்ற பாலைவனத்தின் ஒரு பகுதியைக் கடக்க வேண்டியிருந்தது. அது வரையில் எந்த ஒரு வெள்ளையனும் இந்தப் பகுதிக்குச் சென்றது கிடையாது. லிவிங்க்ஸ்டன்தான் துணிந்து சென்றான். சென்று மேற்படி ங்காமி ஏரியையும், அதற்


உஷா
விசிறிகளில்
மிக நம்பகமான
பெயர்
உலகத்தில் 40 நாடுகளில் வசிக்கும் லக்ஷக்கணக்கானவர்கள் திறமைக்கும் நுட்பமான எந்திர வேலைப்பாட்டுக்கும் உஷா விசிறிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்
நீங்கள் ஒரு விசிறி வாங்கும்போது நம்பிக்கையுடன உஷாவை வாங்கலாம்....அது தான் இன்று விற்பனையிலிருக்கும் விசிறிகளில் ஜனங்களால் மிக விரும்பப்படுவது
உங்கள் அருகாமையிலுள்ள உஷா டீலரை நாடுங்கள்.
தி ஜே எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31

மேல் சென்று ஜாம்பெஸி நதியின் போக்கையும் கண்டுபிடித்தான். இவைகளுக்கெல்லாம் சுமார் மூன்று வருஷ காலம் பிடித்தது. இந்தக் காலத்தில் இவன் குடும்பமும் பெருகியது. நீண்ட நடை பயணத்தின் விளைவாக, இவன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் உடல் நலிவு ஏற்பட்டது. எனவே அவர்களை 1852ம் வருஷம் இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டு, தான் மட்டும் சில சுதேசிகளை உதவியாட்களாக அமர்த்திக் கொண்டு, நாள் கணக்கிலும் மைல்கணக்கிலும் நடந்து சென்று டிலோலோ என்ற ஒரு பெரிய ஏரியையும் விக்டோரியா நீர்வீழ்ச்சியையும் கண்டு பிடித்தான். இந்தப் பயணத்தின் போது, கடுமையான காய்ச்சலினாலும், சீதபேதியினாலும் பெரிதும் துன்புற்றான். இந்த நிலைமையில் கூட, தான் சென்ற இடங்களின் நிலவளம், நீர் வளம், தட்ப வெப்ப நிலை, வானத்துக் கோள்களின் சஞ்சாரம் முதலியவைகளைப் பற்றி அவ்வப்பொழுது குறிப்புகள் எடுத்து வர இவன் தவறவில்லை.

இந்தப் பயணத்துக்குப் பிறகு இவன் சிறிது காலம் ஓய்வு பெற விரும்பினான். எனவே 1856ம் வருஷக் கடைசியில் இங்கிலாந்துக்குச் சென்றான். சென்றதும் முதன் முதலாகச் சொந்த ஊருக்குச் சென்று, தன் தாயாரைப் பார்த்து அவளுடைய நல்லாசியைப் பெற்றான். அறிஞர்கள் பலர், ஆப்பிரிக்காவில் இவன் செய்த சேவைகளுக்காக இவனைப் பாராட்டினார்கள். விக்டோரியா மகாராணி இவனை வரவேற்று உபசரித்தாள். தவிர, இவன் ஆப்பிரிக்கப் பயணத்தின் போது, எடுத்த குறிப்புக்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டான்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இவனுடைய சேவைகளைப் பாராட்டுகிற முறையில் இவனை, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடலோரமாக உள்ள பிரதேசங்களுக்குத் தன்னுடைய ஸ்தானிகனாக நியமித்து, கிழக்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய ஆப்பிரிக்காவிலும் பிரயாணம் செய்து தகவல்கள் சேகரிக்கும் பொறுப்பை அளித்தது. இதற்காக ஒரு பயண கோஷ்டியையும், ஒரு சிறிய கப்பலையும், மான்யமாக ஒரு தொகையையும் உதவியது.

இந்த வசதிகளுடன் லிவிங்ஸ்டன் இரண்டாவது தடவையாக, 1858ம் வருடக்கடைசியில் ஆப்பிரிக்காவுக்கு வந்தான். இந்தத் தடவை ஜாம்பெஸி நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடிக்கும் பயணத்தை மேற்கொண்டான். வழியில் சில ஆறுகளையும், சில ஏரிகளையும் கண்டுபிடித்தான். சில சுதேசிகளின் எதிர்ப்பும் இவனுக்கு ஏற்பட்டது. ஓரிடத்தில், தங்கள் அதிகார எல்லைக்குள் இவனை வரக் கூடாதபடி தடுத்து நிறுத்த இவன் மீது அம்புகள் தொடுக்க முற்பட்டனர். ஆனால் இவன் அவர்கள் அருகே தைரியமாகச் சென்று, அன்பான வார்த்தைகள் புகன்று, அவர்களுடைய விசுவாசத்தை மட்டுமல்ல, ஒத்துழைப்பையும் சம்பாதித்துக் கொண்டான். இந்த இரண்டாந் தடவை பயணத்தின் போது, இவன் மனைவி, பிரயாண அலுப்பு தாள முடியாமல் 1862ம் வருஷம்

இறந்து விட்டாள். ஈடு செய்ய முடியாத நஷ்டத்துக்குள்ளானான்.

போதாக் குறைக்கு, பிரிட்டிஷ் அரசாங்கம் இவனுக்கு உதவியாக அனுமதித்திருந்த பயணக் கோஷ்டியைத் திரும்ப வந்து விடுமாறு உத்தரவிட்டது. எனவே இவன் 1864ம் வருஷம் இங்கிலாந்து திரும்பினான்.

பிரிட்டிஷ் அரசாங்கம், இவனுடைய ஆராய்ச்சிக்காக ஒரு சிறிய கப்பலை உதவியதல்லவா. அந்தக் கப்பலோடு வேறு இரண்டு சிறிய கப்பல்களையும் இவன், சில நண்பர்களின் ஆதரவு பெற்று வாங்கியிருந்தான். தான் இங்கிலாந்துக்குத் திரும்பு முன்பு, இந்தக் கப்பல்களில் ஒன்றை விற்று முதலாக்கக் கருதி, பம்பாய்க்கு வந்தான். இதற்காக இவன் ஒன்றரை மாதக் கடற் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பம்பாயில் இவன் கப்பலை உடனே விற்று முதலாக்க முடியவில்லை. அதனை அங்கேயே விட்டு விட்டு, வழிச் செலவுக்காகச் சில அன்பர்களிடம் கடன் வாங்கிக் கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பினான். சிறிது காலத்துக்குப் பிறகு இவன் விட்டுச் சென்ற கப்பல், அப்பொழுதைய பம்பாய் கவர்னரின் உதவியால் விற்கப்பட்டது. சுமார் இரண்டாயிரத்து முந்நூறு பவுன் கிடைத்தது. இதனை பம்பாயிலேயே ஒரு பாங்கியில் போட்டு வைக்கும்படி ஏற்பாடு செய்தான் லிவிங்க்ஸ்டன். ஆனால் அந்தப் பாங்கி, சிறிது காலத்துக்குப் பிறகு முறிந்து போயிற்று. இவன் பணமும் போயிற்று.

1864ம் வருஷக் கடைசியில் இங்கிலாந்து திரும்பிய லிவிங்க்ஸ்டன், ஜாம்பெஸி நதியையும் அதன் உப நதிகள் சிலவற்றையும் கண்டு பிடிக்க, தான் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி, ஒரு நூல் வெளியிட்டான். இதைப் பார்த்ததும் பிரிட்டிஷ் அரசாங்கம், இவனை, மத்திய ஆப்பிரிக்காவில் தன்னுடைய ஸ்தானிகனாக நியமித்து மூன்றாவது தடவையாக இவனை ஆப்பிரிக்காவுக்குப் போகும்படி செய்தது. இவனும், தன் உடல் நலிவைப் பொருட்படுத்தாமல், 1865-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ஒரு சிறிய பயணக் கோஷ்டியுடன் ஆப்பிரிக்காவுக்கு வந்தான்.

எத்தனையோ இடையூறுகளைப் பொருட்படுத்தாமல், இவன் அது வரை வெள்ளையர் யாரும் சென்றிராத பிரதேசங்களுக்குச் சென்று அவற்றைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வந்தான். சென்ற இடங்களிலெல்லாம், அடிமை வியாபாரத்துக்கு எதிர்ப்புப் பிரசாரம் செய்தான். ''சுதேசிகளை அடிமைகளாகப் பிடித்துக் கொண்டு போவதைப் பார்க்கிறபோது நான் நரக வேதனையையே அனுபவிக்கிறேன்'' என்று ஓரிடத்தில் மனம் நொந்து கூறுகிறான். இவனுடைய முயற்சியின் விளைவாக, அடிமை வியாபாரத்தின் மும்முரம் சிறிது தணிய ஆரம்பித்தது.

கடைசியாக லிவிங்க்ஸ்டன், டாங்கனீகா ஏரிக்குக் கிழக்குக் கரையில் உள்ள உஜீஜி (Ujiji) என்ற ஊருக்கு 1869ம் வருஷம் மார்ச்சு மாதம் வந்து சேர்ந்தான். சிறிது தூரம் கூட நடக்க முடியாது. படுக்கையோடுதான் தூக்கிச் சென்றார்கள் இவனோடு வந்த ஆட்கள். இந்த நிலையில்கூட இவன், நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கினான்.

பங்க் வெயுலு என்ற ஓர் ஏரியை நோக்கிச் சென்றான். இவனிடம் விசுவாசம் கொண்டிருந்த சுதேசிகள் சிலர், ஒரு பல்லக்கைத் தயார் செய்து அதில் இவனைச் சிறிது நேரம் படுக்க வைத்தும், உட்கார வைத்தும் இப்படியாக நாள் கணக்கில் தூக்கிச் சென்றனர். கடைசியில் 1873ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபத்தொன்பதாந் தேதி, மேற்படி பங்க் வெயுலு என்ற ஏரியின் தெற்குப் பக்கமுள்ள இலாலா என்ற ஊரை அடைந்தனர். லிவிங்க்ஸ்டனுக்கு இதுவே கடைசிப் பயணமாகி விட்டது. வந்து சேர்ந்த மூன்றாவது நாள்—மே மாதம் முதல் தேதி — விடியற்காலை, படுக்கையின் மீது தலை சாய்த்தவண்ணம் உயிர் நீத்தான்.

லிவிங்க்ஸ்டன் ஆப்பிரிக்காவுக்கு வந்த ஆரம்ப காலத்திலிருந்து அவனுடைய கடைசி மூச்சு இருக்கிற வரை அவனிடம் மாறாத விசுவாசம் கொண்டு அவனுக்குச் சேவை செய்து வந்தவர் ஆறு பேரே. ஒருவனைத் தவிர மற்ற ஐவரும் ஆப்பிரிக்க சுதேசிகளே.

இவர்கள், லிவிங்க்ஸ்டனுடைய உடலை அவன் தாய்நாடாகிய இங்கிலாந்திலேயே அடக்கம் செய்யும்படி செய்வது தங்கள் கடமை என்று கருதினார்கள். எனவே அவன் உடலை நன்றாகப் பதனப்படுத்தினார்கள்; அவன் எழுதி வைத்திருந்த குறிப்புகள் உபயோகித்து வந்த பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் சேகரித்தார்கள். இவைகளையும் அவன் உடலையும் ஒரு பல்லக்கில் வைத்துக் கொண்டு, ஜான்ஸிபார் துறைமுகத்தை நாடி நடை பயணமாகப் புறப்பட்டனர். 1873ம் வருஷம் மே மாதம் புறப்பட்டவர்கள் 1874ம் வருஷம் பிப்ரவரி மாதம் எத்தனையோ இன்னல்களைக் கடந்து, ஜான்ஸிபார் துறைமுகத்தை அடைந்தார்கள். இறந்து போன ஓர் அந்நியனுடைய உடலைத் தூக்கிக் கொண்டு சுமார் ஒன்பது மாத காலம் ஏறத்தாழ ஆயிரத்தைந்நூறு மைல் நடந்த இந்த ஆப்பிரிக்க சுதேசிகளின் எஜமான விசுவாசத்தை மனித உள்ளம் படைத்தவர்கள் மறக்கவே மாட்டார்கள்.

லிவிங்க்ஸ்டனுடைய சடலம் 1874ம் வருஷம் ஏப்ரல் மாதம் பதினெட்டாம் தேதி வெஸ்ட்மினிஸ்டர் மாதா கோவிலில் தக்க மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

லிவிங்க்ஸ்டன் ஆப்பிரிக்காவில் பிரயாணம் செய்தது நிகரமாக முப்பது வருஷங்கள் என்று சொல்லலாம். இந்த முப்பது வருஷ காலத்தில் இவன் ஜாம்பெஸி நதியின் போக்கு, விக்டோரியா நீர்வீழ்ச்சி, நூற்றுக் கணக்கான சதுர மைல் பரப்புள்ள ஐந்து பெரிய ஏரிகள் ஆகியவைகளைக் கண்டுபிடித்தது போக, சுமார் பத்து லட்சம் சதுர மைல் பரப்புள்ள நிலப் பரப்பைக் கண்டு பிடித்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்குட்படுத்தினான். இதற்காக இவன் இருபத்தொன்பதினாயிரம் மைல் தூரம் கால் நடையாகவே சென்றிருக்கிறான். இவன் பெயரால் லிவிங்க்ஸ்டன் என்ற ஒரு நகரமும், இவன் பிறந்த ஊரின் பெயரால் பிளான்ட்டைர் என்ற ஊரும் மத்திய ஆப்பிரிக்காவில் ஏற்பட்டிருக்கின்றன.



நான் தனி மதிப்புக்குரிய ஒரு பெரிய மனிதன் என்ற உணர்ச்சியை அவர்கள் உண்டாக்கி யிருக்கிறார்கள். அதை நினைக்கும்போது அவர்கள் இருவரும்கூட எனக்குத் தனிச்சிறப்புள்ளவர்கள்தாம்.


அவள் என்மீது காட்டும் வாஞ்சையும் அன்பும் அளவில்லாதது. அவரோ மாலையில் வீடு வந்ததும் என்னைத் தூக்கிக் கொண்டு என்னிடம் கொஞ்சி விளையாடுகிறார். என்னைத் தூக்கிப் போட்டுப் பிடிக்கும்போது பயப்படாமல் நான் சிரிப்பதைப் பார்த்து அவர் மனம் பூரிப்படைகிறது.


ஒவ்வொரு சமயம் இருவரும் தொட்டில் அருகில் நின்று கொண்டு என்னிடம் கொஞ்சிப் பேசுவார்கள். அவர்களுடைய குழந்தைப் பேச்சு என்ன விசித்திரம். சில சமயம் என் வருங்காலத்தைப் பற்றி வாய்விட்டே பேசுவார்கள். நான் என்ஜினீயராக மலருவேனு, அல்லது ஒரு டாக்டராக, ஏன் ஒரு வழக்கறிஞராக, இல்லாவிட்டால் உடனே கன்கவர் வண்ணத்தில் ஒரு சிறிய புத்தகத்தை எடுக்கின்றனர். பாங்க் ஆப் இந்தியா சேமிப்புப் புத்தகம் என்கிறார்கள். அது என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் அது மட்டும் மிகவும் முக்கியமானதாக, எனக்கு நன்மை செய்வதாகத்தான் இருக்க வேண்டும். சந்தேகமில்லை. ஏனெனில் என்மீது அவர்களுக்கு அவ்வளவு அன்பு.

தி பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்

T. D. கன்ஸாரா, ஜெனரல் மானேஜர்

B/C/168


குப்பனைக் கட்டிப் பிடித்த இரும்புக்கவச உருவம் தன் முகமூடியை எடுத்த போது....
நீ... நீங்களா? ஜயசிம்மா..வந்து.. நான் உன் கிரீடத்தைப் பார்த்து ரசிக்கவே எடுத்தேன்...
ஆளப் பிறந்தவன் 7
கதை: ராஜீ
சித்திரம்: வினு
குப்பா, ஏன் பதறுகிறாய்? நீ அரண்மனையுள் நுழைவதை நான் பலகணி வழியே பார்த்தேன். ஆனால் நீ எல்லோருடனும் சகஜமாக விளையாடவரவில்லை.
எப்படி வருவான்? குற்றமுள்ள நெஞ்சாயிற்றே..!
மற்றொரு கவசத்திலிருந்து சேகரன் பேசினான்.
உனக்கு ஏனப்பா இந்தச் சின்னபுத்தி?
வீரசிம்மனின் கையாளப்பா இவன். புத்தி பின்னே எப்படிப் போகும்?
உன்னைத் தண்டிக்க என்னால் முடியும். அதை நான் விரும்பவில்லை. இனி என் விவகாரங்களில் தலையிடாதே. போய் விடு...ம்.
மணிமுடியை மீட்டு வந்த அன்றிரவு...
இளவரசர் தமது பதவிக்கு ஏற்றபடி பழகவில்லை. கிராமத்துப் பையன்களுக்கு அளவுக்கு மீறிச் சலுகை தருகிறார்.
பழகட்டும். அதனால் அடிக்கடி ஆபத்தில் சிக்கிக் கொள்ளுகிறாரே. அதற்கு என்ன செய்யலாம்?


நான் மெய்காப்பாளனாக இருப்பது இளவரசருக்குப் பிடிக்கவில்லை. என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. அதனால்...
சொல்லுங்கள் பிரபுவே! இளவரசரை ஆபத்து அணுகாமல் காக்கக் கூடிய எந்த யோசனையையும் வரவேற்கிறேன்.
நம் லீலாவை இளவரசருடன் இருக்கும்படி செய்தால்? அந்த வயது.. விளையாட்டுத் தோழியாக இருப்பதோடு...
அது சேவகப்பெண்ணின் மகள் தானே? லீலா ஒரு வீராங்கனை. இளவரசரை அபாயங்கள் அணுகாமல் பாதுகாக்கக் கூடியவள் தான்.
கேள்விப் பட்டேன். என்னுடன் கூட்டுக் கொள்ளச் செய்ய ஏற்பாடு அப்பட்டமாக உங்களுக்கு! தேவையாம்!
அரசே, நீங்கள் இந்த நாட்டின் சொத்து. உங்களைக் காக்க வேண்டியது எங்கள் பொறுப்பு. உங்களுக்குப் பிடிக்காத சில விஷயங்களுக்கும் கடமைக் காகக் கட்டுப்பட்டே யாக வேண்டும்.
இதோ இவள்தான் லீலா. இனி உங்களுடன் எப்போதும் இருப்பாள்.
லீலா, இளவரசரை நிழல் போலப் பின் தொடர்ந்து காப்பது உன் கடமை.
லீலாவாம் லீலா பெயரைப் பார் பெயரை..
அன்று மாலை
நான் குதிரை மீதேறிக் கொஞ்ச தூரம் போய்வரப் போகிறேன்.
போகிறோம் என்று சொல்லுங்கள் இளவரசே. நான் உங்கள் நிழலல்லவா?
புரிந்தது. அதோ அந்தக் கருப்புக் குதிரையில் என்னைத் தொடர்ந்து வா!
அது ஒரு முரட்டுக் குதிரை. அதைச் சமாளித்துச் சவாரி செய்ய யாராலும் முடியாது. ஆனால் இவள் எப்படியோ அதை விரட்டியபடி என்னோடு வருகிறாளே. நாம் நினைத்தபடி இந்த லீலா லேசானவளல்ல.



ஜயசிம்மன் திலகவதைக் காத்திருக்கும் கிராமத்து நண்பர்களிடம் வருகிறான்.
நண்பா, இது என்ன புதிய சிநேகம்?
இவள் லேகா. என் அரண்மனைத் தோழி. என்னுடனேயே எப்போதும் இருப்பாள்.
தோழர்கள் அலுத்து விட்டது போலும். தோழியைத் தேடிப் பிடித்து விட்டாயா?
சோமு, இவளைத் தவிர்க்க முடிய வில்லை. அதனால் ஏதாவது கடின மான விளையாட்டாக விளை யாடுவோம். அவள் தோற்று அவ மானமடைந்தால் நாளை முதல் என்னுடன் வரமாட்டாள். அப் படி ஏதாவது ஏற்பாடு செய்.
தோழர்களே! உங்களிடம் உள்ள கயிற்றை மரக் கிளையில் கட்டி அதைப் பற்றி ஊசலாடியபடியே அந்தக் கயிற்றைப் பற்றி மறு கிளைக்குப் போக வேண்டும்.
சோமு எதிர்பார்த்தபடி லேகா இதில் தோற்கவில்லை. அநாயாசமாக அடுத்த கிளை -க்குச் சென்றாள்
இவளை எந்த விதத்திலும் விரட்டியடிக்க முடியாது போலிருக்கிறதே....
நாளை காலையும் இங்கே சந்திப்போம். இக் கயிறுகள் இப்படியே இருக்கட்டும். நாளை விளையாட்டுக்குப் பயன்படும்.
தொடரும்





மன்னிப்பு

நாவலாசிரியை அந்தக் குற்றம் நடந்ததைப் பார்க்கவில்லை; அந்தக் கொலை சம்பந்தப்பட்ட நீதி விசாரணையை நேரில் சென்று காணவில்லை. அவள் பத்திரிகையில் அதைப் பற்றிப் படித்ததோடு சரி. ஆனால் அவள் இரண்டு ஜூரிகளும், இரண்டு நீதிபதிகளும் அளித்த கடுமையான தண்டனையிலிருந்து நிரபராதியான அவனைக் காப்பாற்றினாள். அவனுக்காக அமெரிக்க ஜனாதிபதியின் மன்னிப்பைக் கோரிப் பெற்றாள்!

இந்தக் கதை 1896ம் வருஷம் ஜூலை மாலை 13ந் தேதி இரவு பாஸ்டனிலிருந்து அர்ஜென்டைனா செல்லும் 'ஹிர்பர்ட் புல்லர்' என்னும் கப்பலில் ஆரம்பமாயிற்று. லெஸ்டர் ஹார்பர்ட் கல்லூரி மாணவன். வயது இருபது. தூக்கத்தில் கனவு கண்டவன் திடீரென்று குதித்தெழுந்தான். கனவில் அவன் கேட்ட சத்தம்தான் அவனைக் கிலி கொள்ளச் செய்ததோ, அல்லது நிஜமாகவே அந்தச் சத்தத்தைக் கேட்டானோ, தெரியவில்லை.

லெஸ்டர் தன் அறைக் கதவை திறந்துகொண்டு வெளியே வந்தான். எல்லாம் அமைதியாகத்தான் இருந்தன. ஒரு கொக்கியில் தொங்கிய எண்ணெய் விளக்கு ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. காப்டனும் அவன் மனைவியும், உதவிக் காப்டனும் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் அறைகளின் கதவுகள் மூடிக் கிடந்தன.

கனவில்தான் நாம் அந்தச் சத்தத்தைக் கேட்டிருக்கிறோம் என்று தீர்மானித்த லெஸ்டர் தன் அறைக்குத் திரும்பித் தூங்குவதற்குப் பிரயத்தனப்பட்டான். ஆனால் மறுபடியும் அந்தக் குரல் கேட்டது. இந்தத் தடவை மனிதக் குரல் — ஓலக் குரல் அவன் செவிகளுக்கு எட்டியது. இது நிச்சயம் கனவு அல்ல!

படுக்கையிலிருந்து லெஸ்டர் துள்ளி எழுந்து, "காப்டன் நாஷ்! நீங்களா?" என்று உரக்கக் கேட்டான்.

பதில் இல்லை. நடுக்கத்தோடு லெஸ்டர் தன் ரிவால்வரை எடுத்து அதில் குண்டுகளைப் பொருத்தினான். கதவைத் திறந்துகொண்டு பக்கத்து அறைக்கு வந்து சேர்ந்தான்.

காப்டன் நாஷ் இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்தான். அவன் தலை பிளக்கப் பட்டிருந்தது.

லெஸ்டர் ஸ்ரீமதி நாஷின் அறையில் அடியெடுத்து வைத்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனை அலற வைத்தது. ஸ்ரீமதி நாஷும் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். பலத்த போராட்டத்துக்குப் பிறகுதான் அவள் இறந்து விழுந்திருக்க வேண்டும் என்பது அவள் அடைந்திருந்த வெட்டுக் காயங்களிலிருந்து தெரிந்தது.

மேல் தளத்தில் யாரோ ஒரு மனிதன் குறுக்கும் நெடுக்குமாக நடக்கும் ஓசை கேட்டது. லெஸ்டர் அவனை அடையாளம் கண்டுகொண்டு விட்டான். அவன் பெயர் பிராம். கப்பல் அதிகாரிகளுள் ஒருவன். மேல் தளத்தில் காவலிருக்கிறான். மேல் தளத்தையும் கீழ்த் தளத்தையும் இணைக்கும் படிக்கட்டின் அருகில் நின்று கீழே குனிந்து பார்த்த பிராம், லெஸ்டரின் கையில் ரிவால்வர் இருப்பதைக் கண்டான். உடனே பக்கத்தில் கிடந்த ஒரு மரப் பலகையை எடுத்து லெஸ்டர் மீது வீசி எறிந்தான்.

"ஏன் அப்படிச் செய்தாய்?" பிராமைப் பின்னால் ஒரு நாள் நீதிமன்றத்தில் இப்படிக் கேட்டார்கள்.

"யார்தான் கைக்கு அகப்பட்டதை அவன் மீது விட்டெறிய மாட்டார்கள்? அவன் என்னை நோக்கி ரிவால்வரை நீட்டிக் கொண்டிருந்தானே?" இந்த நியாயமான பதிலைக் கேட்ட பிறகு யாரேனும் பிராமிடம் சண்டைக்கு வர முடியுமா?

பிராம் அந்தப் பலகையை வீசியபோது சட்டென்று குனிந்து தப்பித்துக்கொண்டான் லெஸ்டர். பின்னர் பிராமை அழைத்துத் தான் கண்ட காட்சியை விவரித்தான். பிராம் கீழ்த் தளத்துக்கு இறங்கி வந்து அந்தக் காட்சியைக் கண்டு நடுங்கினான்.

மாலுமிகள் புரட்சி செய்திருக்கிறார்கள் என்று நம்பினான் பிராம். "துணைக் காப்டன் தலைமைப் பதவியை ஏற்றிருப்பான்" என்று சொன்னான். அவர்கள் துணைக் காப்டனின் அறைக்குள் நுழைந்து பார்க்கத் தயங்கினார்கள். "விடியும்வரை நாம் காத்திருப்பதே நல்லது" என்றான் பிராம்.

இரண்டு மனிதர்களும் எப்பொழுது விடியும் என்று காத்திருக்கும் தருணத்தில் பிராம் திடீரென்று அழத் தொடங்கினான். "அவர்கள் அடுத்தபடியாக என்னையும்

தீர்த்துக் கட்டி விடுவார்கள். ஏனெனில் ஓர் அதிகாரி என்ற முறையில் மாலுமிகளிடம் நானும் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறேன். நான் இன்றைய கொலைகளைப் பற்றி அறிந்துகொள்ள முடியாதபடி எனக்கு மதுவில் மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள் போலும்!'' என்றான்.


பிராம் மேல்தளத்தில் இங்கும் அங்குமாய் நடந்து காவல் பணி புரிய முடிந்ததை லெஸ்டர் நினைவு கூர்ந்தான். அவன் தூங்கவில்லை, நடந்தானென்றால், தான் செவியுற்ற சத்தத்தை அவன் எப்படிக் கேட்காதிருந்தான்? இந்தக் கேள்வியை லெஸ்டர் தன் உள்ளத்துக்குள் அசை போட்டான்.

விடிந்த பிறகு பிராமும் லெஸ்டரும் தங்கள் ரிவால்வர்களோடு மாலுமிகளின் இருப்பிடங்களுக்கு விரைந்தார்கள். அங்கு எந்த விதமான கலகமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. மாலுமிகள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

முதலில் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டவன் மேற்கிந்தியனான ஸ்பென்ஸர். இவன் கப்பலில் ஸ்டூவர்டு. முதலில் இவன் இந்தக் கதையை நம்பத் தயாராயில்லை. ஆனால் அவன் அவர்களைப் பின்தொடர்ந்து காப்டன் நாஷும், அவர் மனைவி லாரா நாஷும் கிடக்கும் அலங்கோல நிலையைக் கண்டதும் திகிலடைந்தான். பிறகு துணைக் காப்டன் அறையைத் திறந்ததும் ஸ்பென்ஸர் பலமாக அலறி விட்டான். ஆம்! துணைக் காப்டனும் கொலையுண்டு கிடந்தான்.

மேல் தளத்துக்கு மூன்று பேர்களும் விரைந்து சென்றனர். கொலையாளியின் ஆயுதத்தைத் தேடுவதில் முனைந்த பிராம் திடீரென்று கூச்சலிட்டான். ''இதுதான் அந்தக் கொடுமையைச் செய்திருக்கிறது!'' இப்படிக் கூறிவிட்டு ஒரு பலகையின் அடியிலிருந்து நீண்ட கைப்பிடியுள்ள கோடரியை எடுத்தான். அதன் கூர் முனை ரத்தத்தில் நனைந்திருந்தது. யாரும் அவனைத் தடுப்பதற்குள் அந்தக் கோடரியைத் தூக்கிக் கடலுக்குள் எறிந்துவிட்டான்பிராம்.

''நீ ஏன் அந்தக் கோடரியைத் தூக்கி எறிந்தாய்?'' என்ற மற்றொரு கேள்விக்கு, பிராம் நீதிமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியதிருந்தது. அதைக் கேட்டு அவன் திகைக்கவில்லை.



''மீதமுள்ள எங்களில் யாரையேனும் கொல்ல அந்த ஆயுதம் உபயோகப்படுத்தப் படுமோ என்று பயந்துதான் அப்படிச் செய்தேன்!'' என்றான் அவன்.

இந்த நியாயமான பதிலில் யார் என்ன தப்பு கண்டு பிடிக்க முடியும்?

கடலில் அந்த மூன்று சடலங்களையுமே தூக்கி எறிந்துவிடத் தான் விரும்பியதாகவும் நீதி மன்றத்தில் ஒப்புக் கொண்டான் பிராம்.

ஸ்பென்ஸர்தான் பிராமுக்கு நல்லறிவு புகட்டி அவ்வாறு செய்யக் கூடாதெனத் தடுத்தான்.

காப்டன் நாஷும் துணைக் காப்டனும் சண்டையிட்டுக் கொண்டு ஒருவரையொருவர் கொன்று விட்டார்கள் என்று அநுமானித்தான் பிராம். துணைக் காப்டனுக்கு அழகி லாரா நாஷ் மீது எப்போதும் ஒரு கண் உண்டு. அவளைப் பற்றித்தான் இருவரும் சண்டை போட்டிருக்க வேண்டும். வாய்ச் சண்டை முற்றிக் கைகலந்தபோது அந்த ஆத்திரத்துக்கு மூவரின் உயிர்களும் இரையாகி விட்டன.

ஸ்வீடன் தேசத்து மாலுமி சார்லி பிரௌனின் உடையில் சில இரத்தக் கறைகள் இருந்தன வென்றும், அவன்தான் கொலை நடந்த நேரத்தில் கப்பலின் திசை திருப்பும் சக்கரத்தை இயக்கி வந்தான் என்றும் சிலர் பேசிக் கொண்டனர். ஆனால் யாராலும் எந்த நிச்சயமான முடிவுக்கும் வர முடியவில்லை.

அந்தச் சடலங்களைப் போலீஸாரின் பார்வைக்காகப் பத்திரமாக மூட்டை கட்டி வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

லெஸ்டர் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விவரமாக எழுதினான். அந்தக் கப்பலிலிருந்த அனைவரும் அதில் கையெழுத்திட்டனர். சமீபத் துறைமுகமொன்றில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணலாம் என்று முடிவு செய்யப்பட்டது. கப்பலில் ஒருவித மரண அமைதி நிலவியது. அதில் உலவி வந்த ஒன்பது பேர்களில் யாரோ ஒருவன் கொலையாளியாக இருக்க வேண்டும். அது யார் என்று தெரிகிறவரையில் யாரால் நிம்மதியாக இருக்க முடியும்?

ஒரு நாள் கப்பல் பணியாளர்களில் ஒருவன் கொலை நடந்த இரவன்று மாலுமி சார்லி பிரௌன் உடை மாற்றிக் கொண்டதைத் தான் கண்டதாகக் கூறினான். 'ஏன் மாற்றிக் கொள்ளக் கூடாது?' என்று பதில் கேள்வி போட்டான் சார்லி பிரௌன். தான் மழையில் நனைந்து குளிரால் நடுங்கியதாகவும் அதனால் மாற்றுடைகள் தரித்ததாயும் கூறினான். மற்றொரு மாலுமி, சார்லி மாற்றுப் பெயரில் உலவுவதாகவும் அவனது நிஜப் பெயர் ஜூலியஸ் லியோபோல்ட் என்பதாகவும் நினைவுகூர்ந்தான்.

கப்பல் செல்லும் திசையைக் கட்டுப்படுத்தும் சக்கரத்தை இயக்கிய சார்லி அந்தச் சக்கரத்தை இயக்குவதை விட்டு விட்டுச் சென்று மூன்று பேர்களை எப்படித் தீர்த்துக் கட்டியிருக்க முடியும்? அநுபவம் மிகுந்த மாலுமிகள், சக்கரத்தை அசையாதவாறு கயிற்றால் இழுத்துக் கட்டிக் கப்பல் ஒரே நேர் வழியில் முன்னேறும்படி செய்து விட்டுச் சற்று நேரம் எங்காவது போய் வருவது சாத்தியம்தான் என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். வேறு சில நிபுணர்களோ, அம்மாதிரி சில ரகக் கப்பல்களில் செய்யலாம், ஆனால் அதிக கனமுள்ள 'ஹெர்பர்ட் புல்லரி'ல் அவ்வாறு செய்ய இயலாது என்று கூறி விட்டார்கள்.

பிராமும், லெஸ்டரும், ஸ்பென்ஸரும் சேர்ந்து சார்லி பிரௌனைச் சிறை வைத்தார்கள்.

''நீங்கள் தவறு செய்கிறீர்கள்'' என்று மட்டும் கூறினான் சார்லி பிரௌன்.

''நாம் இப்பொழுது கொலையாளியைப் பிடித்துவிட்டதால் நாம் எழுதித் தயாரித்துக் கையெழுத்திட்ட காகிதத்தைக் கிழித்துவிடுவோம்'' என்று பிராம் யோசனை கூறினான். ஆனால், லெஸ்டர், சார்லிதான் குற்றவாளி என்று அறுதியிட்டுக் கூற முடியாது என்றான். காகிதங்களைக் கிழிக்க அவன் சம்மதிக்கவில்லை.

சார்லி பிரௌன் கைதான பிறகு அவர்களுக்குள் நிலவிய மனக் குழப்பம் சில மணி நேரங்களுக்குச் சற்றே அகன்றது. ஆனால் சார்லி பிரௌனிடம் உரையாடி விட்டு வந்த மாலுமிகள் மீண்டும் சந்தேகங்களை எழுப்பினர்.

''சார்லி அன்று இரவு நடந்தவற்றை எவ்வாறு விவரிக்கிறான் தெரியுமா? கொலையுண்டபோது எழுந்த ஓலத்தை அவனும் கேட்டானும். மேலும் கோடரி உயரே எழும்புவதையும், விழுந்ததையும் காப்டனின் அறையில் உள்ள ஒரு ஜன்னல் வழியாகப் பார்த்தானாம். ஆனால் கோடரியைப் பிடித்திருந்தது யார் என்பதை அவனால் பார்க்க முடியவில்லையாம்!'' என்றனர்.

சக்கரத்தினருகில் இருக்கும் ஒருவன் அந்த ஜன்னல் வழியாக எதையாவது பார்க்க முடியுமா? பின்னால் வழக்கு நடந்தபோது ஜூரிகள் அந்தக் கப்பலில் ஏறிச் சென்று சக்கரத்தின் அருகில் அமர்ந்து பார்த்தார்கள். அங்கிருந்தபடி அந்த ஜன்னல் வழியாகக் காப்டனின் அறையில் நடக்கும் பல விஷயங்களைக் காணலாம் என்று தீர்மானித்தார்கள்.

குறிப்பிட்ட இரவு பிராம் காப்டனின் அறைக்குப் பக்கத்தில் நடமாடியதைத் தான் கண்டதாயும் கைதியாகியிருந்த சார்லி கூறினான். பிராமுக்குக் காப்டன் நாஷிடம் மதிப்புக் கிடையாது. ஒருவரையொருவர் வெறுத்தார்கள். கிழடு தட்டுகிற சமயத்தில் காப்டன் நாஷ், இளமை எழில் பொங்கத் தோற்றமளிக்கும் லாராவை மணம் புரிந்து கொண்டதற்காக பிராம் காப்டனைக் கேலி செய்திருக்கிறான்.

இதை யெல்லாம் எண்ணிப் பார்த்த மாலுமிகள் சிலர் ஸ்பென்ஸரின் தலைமையில் சென்று பிராமைக் கைப்பற்றி, அவனைப் பாய்மரத்துடன் சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டனர்.

''நான் நிரபராதி!'' என்று அலறினான் பிராம்.

பிராமோ, சார்லியோ இருவரில் ஒருவர் தான் இந்தக் கொடுமையைச் செய்திருக்க

வேண்டும் என்று மற்ற ஏழு பேரும் அபிப்பிராயப்பட்டனர். பிராம்தான் காப்டனையும், அவன் மனைவியையும், துணைக் காப்டனையும் கோடரியால் தாக்கிக் கொன்றுனென்றும் தன் உடையில் சிறிய இரத்தக் கறைகூட இல்லாமல் வெளியே வந்தானே, அது எப்படிச் சாத்தியமாயிற்று!

கடலில் பதினெட்டு நாட்கள் இப்படி அல்லலுற்ற பிறகு துறைமுகம் வந்தடைந்தார்கள். பாஸ்டன் கிராண்ட் ஜூரியின் முன்னிலையில் நடந்த கதையை அப்படியே விவரித்தார்கள். ஜூரி கொலை நடந்ததற்கான சான்றுகள், அந்த முடிவுக்கான காரணங்கள், மேலும் பலவித கதைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். பிராம் முன்பு வேறொரு கப்பலில் பணியாற்றிய போது ஒரு மாலுமியுடன் கூட்டுச் சேர்ந்து கலகம் விளைவித்ததாகக் கூறப்பட்டது. அதிலிருந்து அவன் கொலை செய்ததற்கான காரணமும் வெளியாயிற்று. பழங் காலத்திய கடல் கொள்ளைக்காரனைப் போல் இருக்க அவன் ஆசைப்பட்டான். நாவல்களில் வருவது போல் இவனும் ஒரு கப்பலைத் தாக்க விரும்பினன். பிறகு தன் சகாக்களையும் கொன்று விட்டு அளவற்ற செல்வத்தோடு தப்பி ஓடி என்றும் சுகமாக இருக்க நினைத்தான். இவை பிராமைப் பற்றி நீதிமன்றத்தில் கூறப்பட்ட கதைகள். சார்லி பிரௌனைப் பற்றியும் சில கதைகளைச் சொன்னார்கள். அவன் ஏற்கனவே கொலைக் குற்றம் செய்தவன் என்றார்கள்.

ஜூரிகள் பிராமைத்தான் குற்றவாளி என்று முடிவு செய்தனர். 1898ம் வருஷம் பிராம் ஆயுள் தண்டனை அடைந்தான்.

பதினைந்து வருஷங்களுக்கு அவனைப் பற்றி எந்த விதமான தகவலும் இல்லை. 1913ம் வருஷம் ஆகஸ்டு 27ந் தேதி பரோலில் அவனை வெளியே போக அனுமதித்தார்கள்

மேரி ராபர்ட்ஸ் ரெயின்ஹார்ட் தனது புதிய துப்பறியும் கதைக்குக் கரு தேடும் போது அவளது நண்பர்களில் ஒருவரிடமிருந்து 'ஹெர்பர்ட் புல்லர்' கப்பலில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களைப் பற்றிக் கேள்வியுற்றாள். நீதி விசாரணை பற்றிய விவரங்களைப் படித்த அவள் தன் போக்கில் இந்த வழக்கை ஆராயத் தொடங்கினாள். அதன் விளைவாக பிராமுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தீர்மானமாக நம்பிய அவள் பிராமின் பேரிலுள்ள களங்கத்தை நீக்க வேண்டும் என்று எண்ணினாள். அவள் இந்த அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய பாணியில் தன் நாவலை உருவாக்கினாள். அந்நாவலில் கொலைக் குற்றம் புரிந்த வில்லன் பிராம் அல்ல; சார்லியே. 'தி ஆப்டர் ஹவுஸ்' (The After House) என்ற அவளது புத்தகம் 1914ம் வருஷம் வெளி வந்தது. இதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு முன்னாள் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் இந்தக் கதையைப் படித்து அதிசயமடைந்து, ஸ்ரீமதி ரெயின்ஹார்ட்டை அணுகி, அந்த வழக்கைப் பற்றி அவள் ஆராய்ந்து அறிந்து கொண்ட விஷயங்களைக் கேட்டறிந்தார்.



''இது என்னப்பா? கடையிலேயிருந்து பணம் எண்ணுகிற மிஷினையும் திருடிக்கிட்டு வந்திருக்கே?''

''பணம் எவ்வளவு திருடியிருக்கோம்னு கணக்கு தெரிஞ்சுக் கிடத்தான்.''

பிறகு ரூஸ்வெல்ட் இதற்கு ஏதாவது பரிகாரம் தேடுவதாகக் கூறி விடைபெற்றார்.

அப்புறம் என்ன நடந்ததென்று ஸ்ரீமதி ரெயின் ஹார்ட்டுக்குத் தெரியாது. அன்றைய ஜனாதிபதி வில்ஸனும் அவளது உற்சாகமான வாசகர்களில் ஒருவர். அவர் 'தி ஆப்டர் ஹவுஸ்' என்ற நாவலைப் படித்ததன்விளைவோ அல்லது ரூஸ்வெல்டின் கடிதங்கள், பல முக்கியஸ்தர்களுக்குச் சென்று நல்ல பலன்களைத் தோற்றுவித்ததோ சொல்ல முடியாது. 1919ம் வருஷம் ஜனாதிபதி உட்ரோ வில்ஸன் பிராமை மன்னித்து விடுதலை உத்தரவில் கையெழுத்திட்டார்.

தமது சுய சரித்திரமான 'எனது கதை'யில் ஸ்ரீமதி ரெயின் ஹார்ட் குறிப்பிடுகிறார்: ''பிராம் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். 'கடவுள் மேல் ஆணையாக நான் உண்மையாகச் சொல்கிறேன், நான் அந்தக் குற்றத்தைச் செய்யவேயில்லை. ஆனால் நான் செய்யாத குற்றத்துக்கு அநியாயமாகச் சிறையில் வாட நேர்ந்தது' என்று அதில் குறிப்பிட்டிருந்தான். நான் அவன் குற்றம் செய்ததாகவே கணப் பொழுதும் நம்ப வில்லை. அவன் அதைச் செய்ய வில்லை என்பதை நிரூபிக்கப் பல தகவல்களைச் சேகரித்தேன்.

அவை யெல்லாவற்றிலும் மிக முக்கியமான தகவல் இதுதான்: சந்தேகத்துக்குள்ளான மற்றொரு பேர்வழியான சார்லி பிரௌன் கப்பலில் கொலைகள் நடந்த சில வருஷங்களுக்குப் பிறகு ஸ்டாக்ஹோம் ஆஸ்பத்திரி ஒன்றில் மூளைக் கோளாறுடன் படுத்திருந்தான். கொலைவெறி தலைக்கேறியவனாகத் தனக்குப் பணிவிடைகள் புரிந்த ஒரு நர்ஸைக் கத்தியால் குத்திக் கொல்ல முயன்றான்!''

(ஆதாரம்: ரீடர்ஸ் டைஜெஸ்ட் டிசம்பர் '52)



நிச்சயமாகத் தெரியுமா?

ஆம், கவர்ச்சி மிக்கவள்தான். அழகான ஆடை அணிந்திருக்கிறாள்; படிப்பிலும் சுறுசுறுப்பானவள்தான். ஆனால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவள்தானா என்பது நிச்சயமாகத் தெரியுமா?

உடலில் துர்நாற்றம் வீசும் கிருமிகளை உன்னால் தவிர்க்க முடியாது. ஆனால் வழக்கமாக **சிந்தால்** உபயோகித்து அவைகளை அழித்து விடலாம். இந்தியாவில் அற்புதக் கிருமிநாசினி ஜி-11* கொண்ட ஒரே சோப் இதுதான். லட்சக்கணக்கான மக்கள் உபயோகித்துப் பரிசீலனை செய்யப்பட்டது. உன்னுடைய பிரபல்யம் பெரிதும் அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

மகிழ்ச்சியூட்டும், நறுமணம் பொருந்திய சிந்தால் சருமத்தைக் கறைப்படுத்தும் கிருமிகளைக் கூட அழித்து விடும். அதனால் மேனி மாசற்று விளங்கும்.



நிச்சயமான பாதுகாப்பிற்கு
குழந்தையை **சிந்தால்** சோப் கொண்டு நீராட்டி, துர்நாற்றம் போக்கும் இனிய மணம் கமழும், இதமான ஜி-11 அடங்கிய **சிந்தால்** டால்கம் பவுடரைத் தூவித் தடவுங்கள்

* எல். கிவாடன் அண்டு கம்பெனியின் ட்ரேட் மார்க்

* விவரமான **"ஜி-11 என்பது என்ன?"** என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12", என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

வியர்வை நாற்றத்தைப் போக்கி எழிலுடன் விளங்கச் செய்யும் சோப்



Godrej கோத்ரெஜ் சோப்புகளில் முதன்மையான பெயர்

CT. IOA. TAM.



படம் பிடிக்கும் போதினிலே

''உலகமே ஒரு மாயை. அந்த மாயைக்குள் இன்னொரு மாயையாக விளங்குகிறது சினிமா. படம்தான் வேகமாக ஓடுகிறது. அதைப் பார்ப்பவர்கள் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இரண்டரை மணி நேரத்தில், அகில உலகையும் சுற்றி வந்து, எத்தனையோ பாத்திரங்களையும், அவர்கள் விசித்திர உள்ளங்களின் பிரதிபலிப்பையும் உணர முடிகிறது. அத்தகைய சக்தி வாய்ந்த சாதனத்தை இன்னும் தகுந்த முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை.....''

இப்படிச் சொன்னது யார் என்று நினைக்கிறீர்கள், சினிமாத் துறையில் பழுத்த அநுபவம் பெற்ற ஜாவர் சீதாராமன் அவர்கள். மூலக் கதை, திரைக்கதை வசனம், டைரக்ஷன் ஆகிய எல்லாப் பொறுப்புக்களையும் வகிக்கக் கூடியவர் அவர். அத்துடன் அவரே ஒரு நடிகரும்கூட. ''ஏழை படும்பாடு'' படத்தில் இன்ஸ்பெக்டர் ஜாவர் என்னும் மறக்க முடியாத பாத்திரத்தை ஏற்று அபாரமாக நடித்துத் தம்மையும் ஒரு மறக்க முடியாத நடிகராகச் செய்து கொண்டார் ஜாவர் சீதாராமன். எம். ஏ., பி. எல். பாஸ் செய்து அநுபவம் பெற்றவரான இவர் ஜெமினியின் ''மிஸ் மாலினி'' படத்தில்தான் முதன் முதலில் நடித்தார். ''ஏழை படும்பாடு'' படத்தில் காதல் காட்சிகளேயில்லை. ஸ்ரீ நாகையாவும், ஜாவர் சீதாராமனும்தான் முக்கிய பாத்திரங்கள். எவ்வளவு உன்னதக் கருத்தைக் கொண்ட கதையாயிருந்தாலும் சாதாரண மக்களும், இளைஞர்களும் பார்த்து ரஸிக்கும்படி சுவையான காட்சி எதுவும் இல்லையே என்று படத் தயாரிப்பாளர் யோசனையில் ஆழ்ந்து விட்டாராம். படம் வெளி வந்து வெற்றி விழாக் கொண்டாடிய பிறகுதான் அவருக்கு நம்பிக்கை பிறந்ததாம்.

இதைக் கூறிய திரு சீதாராமன், ''கதை சரியாயிருந்தால் படத்தின் வெற்றியை ஒருவாறு நிர்ணயித்துக் கொள்ளலாம். படத் தயாரிப்பு எவ்வளவு சிறப்பாயிருந்தாலும், அழுத்தமான கதை இல்லாவிட்டால், படம் வெற்றியடையும் என்று எதிர்பார்க்க முடியாது'' என்றார்.

''கதையே இல்லாமல் சில படங்கள் சக்கைப் போடு போடுகின்றனவே, அது எப்படி?'' என்று கேட்டு வைத்தேன்.

''அது படம் வெளியாகும் சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. அடுத்தடுத்து இரண்டு பெரிய நடிகர்களின் படங்கள் வெளி வந்து ஓடி ஓய்ந்து போயிருக்கிற சமயத்தில் 'லைட் தீம்' (Light Theme) கொண்ட படங்கள் வந்தால் நன்றாய் ஓடும். பொதுவாகப் படங்கள் எப்படி இருக்க வேண்டும் என்றால், பார்ப்பவர்களுக்கு அலுப்பு ஏற்படாத விதத்தில் இருக்க வேண்டும். ஒரு படம் வெற்றியடையுமா தோல்வியடையுமா என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. பாமரர்கள் புரிந்து கொண்டு ரஸிக்கும்படியாகவும்படித்தவர்கள் விரும்பும்படியாகவும் படம் அமைய வேண்டும் என்று சொல்லலாம்.''

''ஆடல் பாடல்கள் இல்லாமல் படம் தயாரிக்க முடியுமா?''

''ஏவி. எம்.மின் 'அந்த நாள்' படத்தில் ஆடலும் இல்லை, பாடலும் இல்லை. படத்தின் திரைக் கதை, வசனம் இரண்டையும் நான் எழுதினேன். இந்தப் படம் தயாரிக்கப்பட்ட போது திரு மெய்யப்பன் அவர்கள், 'வருவாயை நினைத்துக் கொண்டு இப்படத்தைத் தயாரிக்கவில்லை. 'நல்ல படம் தயாரித்திருக்கிறார்கள்' என்ற பெயர் வந்தால் போதும். சோதனை செய்வோம். அதற்காக நஷ்டப்படுவோம்' என்று சொன்னார்கள். அந்தப் படத்துக்கு நல்ல பெயர்.''

''பொதுவாகச் சினிமாத் தொழிலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''பலரை வாழ வைக்கும் ஒரு சிறந்த தொழில். அதில் ஈடுபட்டவர் எவரையும் அது கைவிடுவதில்லை. இத்தொழிலில் ஈடுபட்டுக் கிடைக்கும் செல்வத்தைத் தாறுமாறாகச் செலவழித்துத் தொலைத்துவிட்டுப் பின்னால் அதனைக் குறை கூறுவோர் இருக்கிறார்கள். வாழ்வளித்த தொழிலை இகழ்வது சரியல்ல.''

''சினிமாக்களுக்குக் கதைகள் எப்படித் பொறுக்கப்படுகின்றன?''

''பெரும்பாலும் மூலக் கதை என்று சொல்லி மூன்று தாள்களில் எதையாவது எழுதிக் கொடுப்பார்கள். திரைக் கதை வசனம் எழுதுபவர் அதை மூன்று மணி நேரப் படத்திற்கு ஏற்பத் தேவையானபடி மாற்றிச் சரி செய்ய வேண்டியதுதான்.''

''வெற்றிகரமான தமிழ்ப் படங்கள் ஹிந்தியில் எடுக்கப்படும்போது அதற்கு வசனங்கள் மீண்டும் எழுதப்படுமா?''

''வட நாட்டுக்கு ஏற்ற சம்பாஷணைப் பாணியைப் புகுத்துவார்கள். என்றாலும் அநேகமாக நாம் எழுதிக் கொடுப்பதை மொழிபெயர்ப்பதுதான் நடக்கிறது. ஆனாலும் வசனத்தை வடநாட்டவர் எழுதியதாகவே கூறி விடுவோம்!

''வக்கீல் பரீட்சையில் தேறி, ஐ. ஸி. எஸ். அதிகாரியாக முயன்று, பத்திரிகை எழுத்தாளனாக விரும்பிக் கடைசியில் எப்படியோ இந்தத் துறையில் இறங்கிவிட்டேன். இந்தத் தொழிலில் இன்னும்சிறப்பாகச் சேவைசெய்ய ஆசை'' என்றார் திரு சீதாராமன். —விஜயம்

வட்டமேஜை



அறிவுக் கனலே, அருட்புனலே!



இந்த இதழுடன் முற்றுப்பெற்ற தொடர் கட்டுரை 'அறிவுக் கனலே, அருட்புனலே' என் நெஞ்சத்தில் அழியா இடம் பெற்று விட்டது. இதைப் படிக்கும்போது நான் உணர்ச்சிவசப் பட்டுக் கண்ணீர் சிந்திய கட்டங்கள் ஏராளம்.

மாதுங்கா, பம்பாய்
2-7-64 எஸ். மீனாட்சி

கல்கியில் இத்தனை காலம் வெளிவந்த 'அறிவுக் கனலே, அருட்புனலே' என்ற அமர காவியத்தைக் கல்நெஞ்சையும் உருக்கும் வண்ணம் கணபதி அவர்கள் வடித்தெடுத்துத் தமிழ்த் தாய்க்குத் தந்தருளினார்கள். ராமகிருஷ்ணர், விவேகானந்தரின் சரிதையைப் படிக்கும்காலை யான் என்னையே மறந்து விட்டேன். படிக்கப் படிக்கத் தெவிட்டாத பல அதிசயங்களை ஆசிரியர் அவர்கள் அக்கட்டுரைத் தொடர் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டி விட்டார்.

ஹைதராபாத்
3-7-64 டி.எம். சந்தானம்

'அறிவுக் கனலை'யும் 'அருட் புனலை'யும் குழைத்து ரஸவாதம் செய்தவர், விவேகானந்தர் மட்டுமல்ல; ஸ்ரீமத் ஸ்வாமிஜியின் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதி முடித்திருக்கும் திரு ரா. கணபதியவர்களும் கூடத்தான்.

கோயமுத்தூர்-1
4-7-64 எஸ். டி. போஸ்கோ

அறிவுக் கனலே, அருட்புனலே என்ற தெய்வீகக் கட்டுரையில் ஸ்வாமி விவேகானந்தரின் அமர யாத்திரை பற்றி வாசித்தபோது நாமும் அவருடன் உறைந்த பனி லிங்கத்தைத் தரிசிப்பது போல் இருந்தது.

தெய்வீக மனிதர்களின் புனித பாதம் பட்ட தலங்களாகிய தக்ஷிணேச்வரத்தையும் பேலூர் மடத்தையும் காணும் ஆவல் இக் கட்டுரையை வாசித்ததிலிருந்து எழுந்துள்ளது.

இந்தக் கட்டுரைக்கு அழகோவியங்கள் சிறப்பாக இருந்தன. அறிவுக்கனலையும் அருட்புனலையும் ஒன்றாய் அட்டைப் படம் தீட்டியிருந்த 'கல்பனா'வுக்குப் பாராட்டுக்கள்.

பெங்களூர்
6-7-64 சித்ரா

அறிவுக்கனலிலும் அருட்புனலிலும் மூழ்கி எழுந்து ஆத்ம ஸ்நானம் செய்வித்துப் பேரானந்தமடையச் செய்துவிட்டார் ஆசிரியர். ஒரு நாள் படித்ததை அந்த வாரம் முழுதும் நினைத்து நினைத்து சந்தோஷப்படுவேன். படிக்கப் படிக்க இனிக்கச் செய்தது. நினைக்குந்தோறும் இனிக்கும் இவ்வரிய பொக்கிஷத்தை எம் போன்ற நேயர்களுக்கு அளித்த ஆசிரியருக்கு உளங் கனிந்த பாராட்டுக்கள்.

மேட்டூர் அணை
7-7-64 செண்பகலெக்ஷ்மி

சமீபத்தில் முடிவடைந்துள்ள "அறிவுக் கனலே, அருட்புனலே" என்ற காவியம் ஓர் அதி அற்புதமான படைப்பு. திரு ரா. கணபதி அவர்களுக்கு என் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெங்களூர்-3
3-7-64 த. ஸ்ரீராம்

ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் எழுதிய "அறிவுக் கனலே, அருட்புனலே" உண்மையிலேயே ஓர் உயர்ந்த தத்துவக் காவியம்.

சென்னை-5 பி. ஜி. தியாகராஜன்,
3-7-64 என். சுப்ரமண்யம்,
எஸ். ஏ. ஜோசப்

5-7-'64 அட்டைப்படத்தில் அருட்புனலின் மத்தியில் அருளொழுகத் தோன்றிய ராமகிருஷ்ணரையும் அறிவுக்கனலின் நடுவிலுள்ள விவேகானந்தரையும் கண்டபோதே மனத்திலுள்ள மாசுகள் நீங்கி, சிந்தனையெனும் சிக்கல்களை நினைந்து, எண்ணம், சொல், செயல் என்ற வெள்ளத்தில் நீந்த வேண்டுமென்று தோன்றுகிறது. இவ்வரிய காட்சியை வனப்பு மிக அமைத்த ஓவியர் 'கல்பனா'வைப் பாராட்டுகிறேன்.

குடும்பச் சூழல்களின் மத்தியில் ஆவலுடன் படித்து, மனத்துக்குச் சாந்தியளித்த 'அறிவுக் கனலே, அருட்புனலே' முடிந்து விட்டதே என்றிருக்கிறது.

காரைக்குடி
3-7-64 பத்மாமணி

நளபாகம்

ஸ்ரீ ஜி. எஸ். பாலகிருஷ்ணனின் கைவண்ணமான "நள பாகம்" நளினமான பாகம்தான். கேலியும், கிண்டலும் கைகோத்துக்கொண்டு உலாவும் தோழமை ரஸமாக இருக்கிறது.

'ஜீலம், சினாப் நதிகளில் பிறந்து வளர்ந்த உன் நாட்டுப்பெண்ணுக்கு, அடுத்த தபாலில் உன் ஆசிகளை அனுப்புவாயா?' என்கிற கடைசிக் கடிதத்தின், கடைசி வரிகளைப் படிக்கும்போது பாட்டி அப்படியே மடேரென்று கீழே விழுந்து —மூர்ச்சை அடைவது போல் ஏன் படம் போடவில்லை?

அதே இதழில் வாசக நேயர்கள் பலர் 'நீரோட்ட'த்துக்குப் புகழ்மாலை சூட்டியிருந்தார்கள். எல்லோருடைய ருசியும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை அல்லவா? என்னைப் பொறுத்தவரை நீரோட்டம் முதலில் அழகிய நீரோட்டமாகத் தெளிவாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. குண்டு, குழி, மேடு, பள்ளம் எல்லாவற்றிலும் ஏறி இறங்கி, ஸ்ரீமதி ரங்கநாயகிக்கே உரித்தான பாணியில் சென்றது. ஆனால் முடிவுமட்டும்....

காந்திகிராமம்
3-7-64 வி. ரா. செல்லம்



ஹார்வி

டுவின் டஸ்கர்

டிரில், லாங்கிளாத்

ஹார்வி டுவின் டஸ்கர் டிரில்லும் லாங்கிளாத்தும் உங்களுக்கும், உங்கள் வீட்டுத் தேவைகளுக்கும் உகந்தவை. நிஜார்களுக்கு டிரில், ரவிக்கை, பாவாடை, பைஜாமா, விரிப்புகள், தலையணை உறைகளுக்கு லாங்கிளாத். ஹார்வி டிரில்லும் லாங்கிளாத்தும் நீடித்த உழைப்பும் உறுதியும் கொண்டதால், எவ்வளவுதரம் சலவை செய்தாலும் அவைகளின் வழவழப்பான நெசவின் தன்மை கெடுவதில்லை. இவ்வளவு குறைந்த விலையில், இவ்வளவு உயர்ந்த தரத்தை மற்றெந்த துணிகளும் அளிக்க முடியாது.

நீங்கள் மறுபடி டிரில்லும் லாங்கிளாத்தும் வாங்கும் பொழுது டுவின் டஸ்கர் சின்னத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சின்னம் நீங்கள் நம்பும் தரத்திற்கு அத்தாட்சி.

மதுரை மில்ஸ் தயாரிப்பு

உயர்ந்த ரக நூல்களுக்கு பிரக்யாதி பெற்றது.

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை.

மானேஜிங் ஏஜண்டுகள் : ஏ & எப் ஹார்வி லிமிடெட்.

மிக உயர்ந்த ரக துணிகள்

***பகட்டான தோற்றம்**

***நீடித்த உழைப்பு**

மதுரையைச் சேர்ந்த ஹார்வீஸ்

83-MHC-13A TAM

சிரிக்கவும் சிந்திக்கவும்

'ஒரு பையனைக் கல்லூரிக்கு இழுத்துக் கொண்டு போய் விடலாம். ஆனால் அவன் சிந்தனை செய்யும்படி செய்துவிட முடியாது.'

— எல்பர்ட் ஹப்பர்டு

ஃ ஃ ஃ

சென்னையில் பாங்குகள் சிந்திக் கிடக்கும் பகுதி ஒன்றிருக்கிறது. அதில் சுமார் 200 மீட்டர் தூரத்துக்குள் 12 பாங்குகள் இருக்கின்றன. மாம்பலம் என்ற தியாகராய நகரில் உள்ள பாண்டிபஜார் பகுதியில் ஆண் வாடையே அடிக்காத பாங்கு ஒன்று இருக்கிறது. பெண் வாடையே அடிக்காத பாங்கு ஒன்றும் கூட இருக்கிறது. மற்றப் பகுதிகளிலும் அவை குட்டி போட்டு வந்து கொண்டிருக்கின்றன.

நாம் இரவு தூங்கப் போகிறோம். காலையில் கண் விழித்துக் கொண்டு பார்க்கும் போது நாம் வசிக்கும் வீட்டின் ஒரு பகுதியில் ஒரு பாங்கின் கிளை ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அதைப் பற்றி நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஒரு பெரிய மோட்டார் ஷெட், ஒரு 'கௌண்டர்' இரண்டு இரும்பு அலமாரிகள், பாங்கு டைரக்டரின் உறவினர் ஒருவர் — இவை இருந்தால் போதும். ஒரு கிளை ஆரம்பித்து விடலாம்!

பாங்குகள் போட்டி போட்டுக்கொண்டு மூலைக்கு மூலை கிளைகளைத் திறந்து வைத்து வருகின்றன. இதில் மிகவும் மும்முரமாக இருப்பது ஸ்டேட் பாங்க். அது அரசாங்க ஸ்தாபனமா யிருந்தாலும் கூட, ஆரம்ப விழாவை 'சாஸ்திரோக்தமாக' நடத்துகிறது. ஆனால், அன்று விழாவுக்கு வருபவர்களுக்கு வெற்றிலை பாக்குடன் ஒரு பழைய ஒரு ரூபாய் நோட்டுக்கூட வைத்துக் கொடுப்பதில்லை!

சில பாங்குகளில் தினமும் காரிய ஆரம்ப விழா நடப்பது வேடிக்கையாக இருக்கும். பணம் வாங்குவதற்கும், கட்டுவதற்கும் வருபவர்கள் பாங்கு திறக்கச் சில நிமிடங்கள் முன்னாலேயே வந்து விடுவார்கள். காரியாலயக் கதவுகள் முக்காலே மூன்று வீசம் மூடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட மணி நேரத்துக்கு (காரியாலயத்தில் உள்ள கடிகாரம் காண்பிக்கும் மணிப்படி) கதவுகளை ஏகாதசி யன்று சொர்க்க வாசல் கதவுகளைத் திறப்பதைப் போலத் திறப்பார்கள். உள்ளே போனால் பீடங்களில் சம்பந்தப்பட்ட தேவர்கள் சிலர் இருக்க மாட்டார்கள்!

குமாஸ்தா ஐந்து நிமிடமோ, பத்து நிமிடமோ தாமதமாக வருவார். ஆனால் மிக வேகமாக வருவார். தமது ஆசனத்தில் உட்கார்ந்து, லெட்ஜர், பேனா, காகிதம் பறக்காமலிருக்கும் கட்டை, ரசீது கோத்துக் கொள்ளும் ஊசி பொருத்திய கட்டை முதலியவற்றை அதனதன் இடத்தில் எடுத்து வைப்பார். பக்கத்தில் உள்ள சகாவினிடம் இரகசியமாக ஏதோ கூறிச் சிரிப்பார்.

பிறகு கௌண்டர் பக்கம் அவர் கை வரும். அங்கே பலப் பல கைகள் செக்குகளுடன் காட்சி அளிக்கும். ஒரு செக்கைப் பிடித்திழுத்துக் கொண்டு, அதைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பார். அவரது இடது கை எதிரில் துழாவும். டோக்கன் இராது. 'குபேரசாமி! டோக்கன் கொண்டு வா!' என்பார். அப்புறம் குபேரசாமி வந்தாக வேண்டும். ஐந்து ரூபாய் முதல் ஐந்தைத் தொடர்ந்து பல சைபர்கள் வரை பணம் போட்டவர்கள் எல்லாம் கூட ஏதோ தர்மம் பெற வந்தவர்கள் போல் கிளார்க்கின் மனமிரங்காதா என்று ஏங்கி அங்கே காத்துக் கொண்டு நிற்க வேண்டும். தங்களுக்கு உரிமையான சொந்தப் பணத்தை வாங்க வந்தது போலவே இராது. அவர்களுக்கு மின்சார விசிறி கிடையாது. பணம் போட்டிருப்பவர்கள் மீது தவறிப் போய்க் காற்றுப் படாமலிருக்கும்படி சாமர்த்தியமாகக் குமாஸ்தாக்கள் மேலே மட்டும் விசிறி சுழலும். சென்னையில் 'தண்ணீர்ப் பந்தல்' என்று சொல்கிறார்களே, அந்த ஹோட்டலில் போட்டிருப்பது போன்ற பெஞ்சுகள் போட்டிருப்பார்கள். கால் வலித்தால் அதில் உட்கார்ந்து கொண்டு உடைகளைக் கறைப்படுத்திக் கொள்ளலாம்.

இப்படி யெல்லாம் நடப்பது சில கிளை பாங்குகளில்தான். நாம் நமது சட்டைப் பையில் ஒரு செக்கை வைத்துக் கொண்டு தெருவில் போய்க் கொண்டிருக்கும்போதே கூட, அதைக் கண்டுபிடித்து அந்த இடத்திலேயே செக்கை எடுத்துக் கொண்டு பணத்தைக் கொடுத்துவிடுகிற அளவுக்கு நம் தேவைகளை உடனுக்குடன் அக்கறையாகக் கவனித்து ஆவன செய்வதாகக் கூட சில பாங்கு விளம்பரம் செய்யலாம். இப்போதெல்லாம் பாங்கு முறைகளில் அத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பணம் போடுகிறவர்களைப் பண்புடன் நடத்தி உபசரிக்கும் வழக்கத்தை எல்லாப் பாங்கு நிறுவனங்களுமே மேற்கொள்ள வேண்டும்.

ஃ ஃ ஃ

'நாம் நம்முடைய 'கண்களை மூடித் திறப்பது போலக் காதுகளையும் மூடித் திறக்க முடியுமானால் எவ்வளவு நன்மையுள்ளதாக இருக்கும்?'

— லிக்டென்பர்க்

ஃ ஃ ஃ

வின்ஸ்டன் சர்ச்சிலின் 79வது பிறந்த தினமன்று நூற்றுக் கணக்கான பத்திரிகைப் பிரதிநிதிகள் அவரைப் பேட்டி கண்டு வாழ்த்துக் கூற வந்தனர். ஓர் அமெரிக்க நிருபர் ''அடுத்த ஆண்டு தாங்கள் என்னைக் கைகுலுக்கக் கூடிய அளவு பலமுள்ளவர்களாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்றார்.

சர்ச்சில் அதற்குப் பதில் அளித்தார்: ''வாலிபனே! எனது அடுத்த பிறந்த நாள் அன்று நீ என் போட்டோவை எடுக்க வர

வேண்டும். ஆகவே நீ நீண்ட ஆயுளைப் பெற வேண்டுமென ஆசீர்வதிக்கிறேன்.''

ஃ ஃ ஃ

'குற்றங்களினால் லாபமேற்படாது!' என்பது பாடப் புத்தக வாக்கு. ஆனால் அகப்பட்டுக்கொண்டுவிடும் சில அப்பாவிகளைத் தவிர மற்றவர்கள் அதனால் லாபமடைந்து கொண்டுதான் வருகிறார்கள். அதிலும் 'கற்பனைக் குற்றங்கள்' இழைப்பவர்களுக்குக் கொள்ளை லாபம். துப்பறியும் கதைகள் எழுதுபவர்களைச் சொல்கிறேன். கால் நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே எட்கார் வாலஸ் துப்பறியும் புத்தகங்கள் விற்று வருஷத்துக்குப் பதினைந்து லட்சம் ரூபாய் சம்பாதித்து வந்தார். இன்று மைக் ஸ்பில்லானியின் புத்தகங்கள் சில கோடிகள் விற்றிருக்கின்றன. கார்ட்டர் பிரௌனின் புத்தகங்களின் விற்பனைக் கணக்கு சுமார் 33 கோடி. இறுதியில் கூறப்பட்ட இரு ஆசிரியர்களின் ஆபாசத்துக்கு இடமளிக்கும் துப்பறியும் நவீனங்கள் நிறைய விற்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஆனால், காமம், காதல் முதலிய எதுவுமே இல்லாத ஒரு புத்தகம், ஒரே வாரத்தில் சில ஆயிரக் கணக்கில் அதுவும் இந்தியாவில் அதுவும் ரொக்கத்துக்கு விற்றுப்போய் விடுவதென்றால் நம்ப முடியாதுதான். அது என்ன புத்தகமோ; அதிலுள்ள கதை என்னவோ? சொல்கிறேன்.

ஒரே ஒரு ராஜ்யத்தில் பிரதாப் சிங் கெய்ரான் என்று ஒரு முதன் மந்திரி இருந்தார். அவர் மனைவியின் பெயர் ராம்கார். அவர்கள் இருவரும் சுந்தர்சிங் என்ற பிள்ளையைத் தவம் செய்து பெற்றெடுத்தனர். சுரீந்தர் என்ற இன்னொரு பிள்ளையும் ஸதீரதர் என்ற ஒரு பெண்ணும் உண்டு. சுரீந்தர் பவிந்தர்காரின் பெண் கட்டைக்குட்டி குஸும் லதாவை மணந்து கொண்டார். அவளுக்குப் புஷ்பீந்தர்கார், கமால் லதா என்ற இரண்டு சகோதரிகள் உண்டு. இவர்கள் முறையே ரஞ்சித் சிங், சூர்தீப் சிங் என்பவர்களை மணந்து கொண்டனர். பிரதாப் சிங் கெய்ரானுக்கு ஜஸ்வந்த் சிங், என்ற சகோதரரும், பிரேம் பிரகாஷ் என்ற சகோதரியும் இன்னொரு சகோதரியும் உண்டு. ஜஸ்வந்த் சிங்கின் மனைவி நிர்மன்கார். இவர்களுக்கு ஜஸ்விந்தர் சிங் என்ற பிள்ளையும் ராஜேஷ் என்ற பெண்ணும் இருந்தனர். ராஜேஷ் ஹர்சரன் சிங்கை மணந்தாள். சுரீந்தர் சிங்கின் வேட்டகத்து மாமன் மோஹிந்தர் சிங். அவருக்குக் குர்தீப் சிங், ஹர்பஜான் சிங் என்று இரண்டு பிள்ளைகள். சுரீந்தர சிங்கின் இளைய மாமியார்....

முதன் மந்திரி கெய்ரான், தெனாலிராமன் கதை ஒன்றைப் படித்திருந்தார். ராஜா வீட்டில் சர்க்கரை உலர்த்தியிருந்தது. அவர் அவனிடம் 'இது சீமை மண், தின்றுவிடாதே'



என்று சொல்லியிருந்தார். தெனாலிராமன் உடனே தன் மகனிடம் ரகசியமாக, ஏதோ சொல்லி அனுப்பினான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் வந்து ''அப்பா! எருமை மாடு செத்துவிட்டது'' என்றான். ''போய்விட்டதா, வாயில் மண்ணைப் போட்டு விட்டுப், போய்விட்டதா? இந்தா நீயும் கொஞ்சம் போட்டுக்கொள். இந்தா அம்மாவையும் போட்டுக் கொள்ளச் சொல்'' என்று சீமை மண்ணைப் பங்கீடு செய்தான்.

கெய்ரான் முதன் மந்திரியான உடனேயே சில விரோதிகள் அவர் தமது அதிகாரத்தைச் சொந்தத்துக்குச் சொத்து சேர்க்கத் துஷ்பிரயோகப்படுத்துகிறார் என்று புரளி செய்தார்கள். கெய்ரான் இதைக் கேட்டு மனமுடைந்தார். அவர் பொதுஜன சொத்தை விஷமாகக் கருதுபவர். அவர் உடனே உறவினர்களைக் கூப்பிட்டார். ''நான் விஷம் தின்னப் போகிறேன். ராம்கார் நீயும் கொஞ்சம் தின்னு! அண்ணி நிர்மன்கார் நீயும் போட்டுக்கொள். என் அருமை மைந்த! நீ நிறையத் தின்னு. தம்பி மாப்பிள்ளை ஹர்ச்சரன், நீயும் போட்டுக்கொள். உன் தந்தை எங்கே அவரையும் கூப்பிடு. குகம், இங்கே வா! உன்னையும் தப்ப விடப் போவதில்லை. உன் ஒன்று விட்ட தம்பிகளையும் வரச் சொல்.''

இப்படியாக அவர் எல்லாரையும் விஷத்தைத் தின்னச் சொன்னார். ஆனால் அந்த விஷம், ஸினிமாக்கள், பங்களாக்கள், செங்கற் சூளைகள், மோட்டார் கம்பெனிகள், பஸ் ஸர்விஸ்கள், நெசவு ஆலைகள் முதலியவையாக இருந்தன!

பஞ்சாப் முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரான் மீதேற்பட்ட லஞ்சப் புகார்களை விசாரித்த தாஸ் கமிஷன் அறிக்கையின் முக்கிய கதை இதுதான். அறிக்கையில், சரித்திரப் புத்தகங்களில் இருப்பதுபோல் கெய்ரானின் வம்சாவளி விவரம் தரப்பட்டிருக்கிறது. அத்தனை பேரும் அவரால் நேர்முகமாகவோ அல்லது அவர் பெயரை உபயோகித்தோ பணம் சேர்த்தார்கள். இந்த அறிக்கையின் விலை ரூ. 4.00. இது வெளியான தினமே ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி விட்டதாம். முதலில் அச்சடித்த ஐயாயிரம் பிரதிகள் போதாமல் இன்னொரு ஐயாயிரம் பிரதிகள் அச்சடிக்க இந்திய அரசாங்க 'பப்ளிகேஷன் டிவிஷன்' ஏற்பாடு செய்திருக்கிறதாம்.

அந்தப் புத்தக இலாகாவுக்கு யோகம் அடித்திருக்கிறது. அந்த இலாகா அதிகாரி இது மாதிரி அறிக்கைகள் நிறைய வெளிவர வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கக் கூடும்.

''அப்படியே ஆகுக! மந்திரிகளைப் பற்றிய உண்மைக் கதைகளை எழுதி வெளியிட்டு நிறையப் புத்தகங்கள் விற்பனை செய்வீர்களாக!'' என்று ஆண்டவன் சொல்லக்கூடும்.







அன்று வந்த கடிதத்தைக் கிஷோர் மறுமுறையும் படித்தான்.

"'ஸ்ரீ ஆர். கிஷோர்குமார் அவர்களுக்கு, உங்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு எங்களுடைய தொழிற்சாலையில் உங்களைத் தலைமைக் கணக்கராக நியமிக்கிறோம். தாங்கள் கோரியபடியே அடிப்படைச் சம்பளம் ரூ. ஐந்நூறும், அதற்குமேல் வழக்கப்படி இதர படிகளும் அளிக்க ஒப்புக் கொள்ளுகிறோம். ஜுன் 15ம் தேதிக்குள் வந்து வேலையை ஒப்புக் கொள்ளவும். நீங்கள் வந்து சேரும் தேதியைக் குறித்து முன்கூட்டியே தெரிவித்தால் நலமாயிருக்கும்.

இப்படிக்கு,

கே. வரதாச்சார்''

(பொது நிர்வாகி. காளிமாதா கிளாஸ் வொர்க்ஸ், பாரக்பூர்)

இரண்டு வாரங்களுக்கு முன்பு அவன் தினப் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தைப் பார்த்து, பதில் எழுதியபோது தனக்கு அப்படி வேலை உடனே கிடைக்கும் என்று எதிர்பார்க்க வில்லை. ''தொழிற்சாலையின் தலைமைக் காரியாலயத்துக்கு ஒரு பி.காம். ஆனர்ஸ் தேவை'' என்றுதான் விளம்பரம் கூறிற்று. இந்தியா முழுவதிலும் தன்னைப் போல் எத்தனையோ தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பார்கள்; தனக்கு எப்படிக் கிடைக்கப் போகிறது என்றுதான் எண்ணினான். அதுவும் படிப்பில் தேர்வு பெற்று ஒரு வருஷத்துக்குள் எத்தனை விண்ணப்பங்களை அனுப்பிவிட்டான்? அவைகளைப் போல்தான் இதுவும் என்று எண்ணியதற்கு நேர்மாறாக, ஒரு பெரிய தொழிற்சாலையில் தலைமைக் கணக்கராகப் பணியாற்றும் பொறுப்பு கிடைப்பது என்றால் அதை ஒரு பெரிய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவனுக்குத் தாய் தந்தையர் இல்லை. அவனுடைய தாய் மாமன்தான் அவனையும் அவனுடைய அண்ணனையும் எடுத்து வளர்த்து ஆளாக்கியது. மதுரையில் அவர் ஒரு செல்வாக்குள்ள வக்கீலாகப் பணியாற்றினார்; தகப்பனார் விட்டுச் சென்ற சொத்தில் ஒரு பகுதியை விற்றுக் கல்லூரிப் படிப்பை முடித்தான். அண்ணன் குடும்பத்துடன் திருநெல்வேலியில் இருந்தான். திருமணம் ஆனதும் மனைவி வீட்டுடன் போய்விட்டான். மாமனார் விட்டுச் சென்ற ஒரு மருந்துக் கடையை வைத்து வியாபாரம் செய்து வந்தான்.

கிஷோர் எப்போதும் மாமன் வீட்டுடனே இருந்ததால் அண்ணனுக்கும் அவனுக்கும்



எஜமானி

கி.ரா.



அதிகத் தொடர்பு இல்லை. ஆகையால் தனக்கு வந்த கடிதத்தை மாமனிடம் அன்றே காட்டி அனுமதி பெற்று விட்டான். அவனுக்குப் புது ஆடைகள் வாங்கிக்கொள்ளவும், பிரயாணச் செலவுக்குமாகச் சேர்த்து மாமன் முந்நூறு ரூபாய் கொடுத்தனுப்பினார்.

சென்னைக்கு வந்த கிஷோர் தன்னுடைய நண்பன் சுந்தரத்தின் இல்லத்தில் தங்கி, தனக்கு வேண்டிய ஆடைகளைத் தயார் செய்து கொண்டான். சுந்தரம் அவனுடைய கல்லூரித் தோழன். ஜூன் பத்தாம் தேதியே ஹெளரா எக்ஸ்பிரஸில் கல்கத்தா புறப்பட்டான். புறப்படுமுன் எச்சரிக்கையாகக் காளிமாதா தொழிற்சாலைக்குத் தான் புறப்படும் தேதியையும், ரயிலையும் குறித்து ஒரு தந்தி கொடுத்தான்.

புறப்பட்ட மூன்றாம் நாள் காலையில் வண்டி ஹெளரா போய்ச் சேர்ந்தது. அங்கிருந்து வேறு ரயில் மாறி இரண்டு மணிநேரம் பிரயாணம் செய்து பாரக்பூரை அடைய வேண்டும். மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் பிரயாணம் செய்தும்கூட அவனுக்கு அலுப்பாக இல்லை. அந்த இரண்டுமணி நேரப் பிரயாணம்தான் தாங்க முடியவில்லை. கொளுத்தும் வெய்யில். ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்லும் ரயில் வண்டி. தாங்க முடியாத கூட்டம். அநாகரிகக் கூட்டம்: ஆள் தலையில்கூட ஏறி உட்கார்ந்துவிடும் போல் இருந்தது அந்தக் கும்பல்.

சரியாகப் பகல் பதினொரு மணிக்கு ரயில் பாரக்பூர் சென்றது. வண்டி நின்றதும் கிஷோர் கீழே இறங்கி ஒரு கூலியின் தலையில் பெட்டி படுக்கைகளை ஏற்றிக் கொண்டு வெளியில் வந்தான்.

வெளியில் ஒரு கார்கூட இல்லை. ஆனால் ஏராளமான சைக்கிள் ரிக்‌ஷாக்கள் இருந்தன. எல்லா ரிக்‌ஷாக்களும், ''பூம்!'' ''பூம்!'' என்று காரைப் போல் குழல் ஊதிக் கொண்டு நின்றன. அதற்குள் சுமையுடன் வந்த போர்ட்டர், பிஹாரியிலோ, ஹிந்தியிலோ, வங்காளியிலோ அல்லது மூன்றும் கலந்த கதம்பமான ஒரு மொழியிலோ, ''பாபூ! பாபூ!'' என்று ஏதோ சொன்னான். அவனுடைய அங்க சேஷ்டைகளைக் கொண்டு அவன் சைக்கிள் ரிக்‌ஷாவில் செல்லலாம் என்று சொல்வதாகக் கிஷோர் உணர்ந்தான்.

அவன் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் ஒரு பெரிய பழைய மாடல் செவர்லே கார், துணியால் மூடியது, வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வங்காளி இளைஞன் இறங்கி வந்து அவனுக்கு ''நமஸ்தே'' என்று வணக்கம் செலுத்திவிட்டு, வங்காளி கலந்த ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினான். சேலையைப் போல் சுற்றியிருந்த அவனுடைய பன்னிரண்டு முழ



வேஷ்டியையும், காவியேறிக் கறுத்துப் போயிருந்த அவனுடைய பல் வரிசையையும் பார்த்துக் கொண்டு நின்றான் கிஷோர்.

தன்னைக் கிரீஷ் கோஷ் என்றும், தான் காளிமாதா தொழிற்சாலையில் உதவி மானேஜர் என்றும் அறிமுகப் படுத்திக் கொண்டான், அந்த வங்க இளைஞன். பிறகு கார் சற்று ரிப்பேர் ஆகி விட்டதால் தாமதம் ஆகிவிட்டது என்றும், உடனே அவனைத் தொழிற்சாலைக்கு அழைத்துப் போக வந்திருப்பதாகவும் கூறினான்.

போர்ட்டருக்குக் கூலியைக் கொடுத்து விட்டுக் கிஷோர் வண்டியில் ஏறினான். கார் ஒரு தடவை உறுமி விட்டுப் புறப்பட்டது.

தொழிற்சாலை ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல் கிழக்கே இருந்தது. பன்னிரண்டுக்குள் தொழிற்சாலையை அடைந்து, அங்கே இருந்த விருந்தினர் விடுதியில் இறங்கினான். அவனுக்காக ஒரு தூக்குப் பாத்திரத்தில் சாப்பாடு கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. குளித்து விட்டுச் சாப்பிட்டான். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி கூறி விட்டுக் கோஷ் சென்று விட்டான்.

சாப்பிட்டுப் படுத்த கிஷோர் மீண்டும் கண் விழிக்கும் போது மாலை ஐந்து மணி ஆகிவிட்டது. கண்ணை விழித்ததும் அவனுடைய பார்வையில் பட்டது பலகாரமும் காப்பியும் தான். அவனுக்காகத் தயாராய்க் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தன. வங்காளிகளின் உபசரணைப் பண்பை எண்ணி வியந்த கிஷோர் காப்பியை எடுத்துப் பருகினான்.

''அந்த டிபனும் உங்களுக்காகத்தான்'' என்று கூறி உள்ளே நுழைந்தான் கோஷ்.

''டிபன் சாப்பிட வயிற்றில் இடமில்லை.''

''இன்று நேரம் ஆகி விட்டது. நாளைக் காலையில் பத்து மணிக்கு உத்தியோகத்தைத் தொடங்கலாம் என்று மானேஜர் கூறச் சொன்னார். ஆனால் இப்போது வேணுமானால் தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டச் சொன்னார், நீங்கள் விரும்பினால்தான்.''

''ஓ! பார்க்கலாமே!'' என்று எழுந்த கிஷோர் ஐந்து நிமிடங்களில் முகம் கழுவி ஆடை தரித்துக் கொண்டு கிளம்பினான்.

அந்தத் தொழிற்சாலை விஸ்தாரமாய் இருந்தது. பத்து ஏகரா நிலத்தில் பரவியிருந்தது. சுமார் ஆயிரம் தொழிலாளிகள் வேலை செய்தனர். தினமும் மூன்று நேரம் வேலை நடந்தது. லட்சக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள பல யந்திரங்கள் வேலை செய்தன. கண்ணாடியில் தயாராகும் எல்லா விதப் பொருள்களும் அங்கு தயாராயின. இவ்வளவு பெரிய தொழிற்சாலையில் தனக்குப் பொறுப்பான வேலை கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம்தான் என்று எண்ணி அவன் சந்தோஷப் பட்டான். அந்தத் திருப்தியுடனேயே அன்றிரவு நன்றாகத் தூங்கினான்.

கா! லையில் சரியாகப் பத்து மணிக்குக் கோஷ்தான் அவனை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றான். பொது நிர்வாகியின் அறைக்குள் அழைத்துச் சென்று அவனை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

''இவர்தான் மிஸ்டர் கிஷோர்.''

''ஓ, அப்படியா? உட்காருங்கள்.''

அவன் உட்கார்ந்தான். சுற்றிலும் நோட்டம் விட்டான். அலுவலகம் ரொம்பவும் நேர்த்தியாயிருந்தது. பொது நிர்வாகியைக் கவனித்தான். அவரைப் பார்த்தால் வங்காளியாகத் தோன்றவில்லை. வயது ஐம்பது இருக்கும். நெடிய உருவமும், நேர்த்தியான ஐரோப்பிய உடையும், பார்ப்பதற்குப் பத்து வயது குறைவாகத் தோன்றினார்.

அவர் ஒரு நிமிஷம்கூடத் தாமதியாமல் அவனிடம் அலுவல் அதிகாரத்தாளை எடுத்து நீட்டினார். ''இதுதான் உத்தியோக ஆர்டர். இதன்படி ஒரு மாதம் கழித்து, இரு தரப்பினருக்கும் திருப்தியாக இருந்தால் மூன்று வருஷ ஒப்பந்தம் செய்ய விரும்புகிறோம்.''

அதை வாங்கிப் படித்துப் பார்த்துக் கையொப்பமிட்டுக் கொடுத்தான் கிஷோர். அதை வாங்கி வைத்துக் கொண்ட பின்னர் திரு வரதாச்சார் எழுந்தார். ''வாருங்கள். உங்களுடைய இலாகாவுக்குப் போவோம்'' என்று அவனை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றார். கூடவே கோஷும் வந்தான்.

அடுத்த அறைதான் அவனுடைய கணக்கு நிர்வாக அறை. சுமார் பத்து குமாஸ்தாக்களும், தட்டெழுத்துக்காரர்களும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் கிஷோரை அறிமுகம் செய்து வைத்து, அந்த ஹாலின் கோடியில் இருந்த தனி அறைக்கு அழைத்துச் சென்றார்.

''இதுதான் உங்களுடைய அலுவலகம். உங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துள்ளோம். இன்னும் ஏதாவது தேவையாயிருந்தால் எனக்கு அறிவியுங்கள்'' என்று சொல்லி விட்டுத் திரு வரதாச்சார் சென்று விட்டார்.

அங்கு கட்டப்பட்ட நவீன வசதிகளைக் கண்டு வியந்து கொண்டே சுழல் நாற்காலியில் அமர்ந்தான் கிஷோர். சற்று நேரத்தில் அவனுடைய தட்டெழுத்தாளர் அங்கு வந்து நின்று தம்மை அறிமுகம் செய்துகொண்டார். அவரும் ஒரு வங்காளி.

அவர் மூலமாக முக்கியமான கணக்குப் புத்தகங்களைக் கொண்டு வரச் செய்து பார்வையிட்டான். அவைகளில் சில திருத்தங்களைச் செய்தான். பிறகு அறையை விட்டு வெளியில் வந்து, குமாஸ்தாக்களுடைய வேலையைப் பார்வையிட்டான். பட்டியல் தயாரிப்பு வேலையில் சில திருத்தங்களைச் செய்தான்.

இடை வேளை வந்தது. வெளியில் காத்திருந்த பணியாள் உள்ளே வந்து பலகாரங்களையும் காப்பியையும் கொண்டு வந்து வைத்தான். அவன் சாப்பிட்டு முடித்ததும், ''வேலை யெல்லாம் உங்களுக்குப் பிடித்திருக்கும் என்று நம்புகிறேன்'' என்று கூறியவாறே பொது நிர்வாகி உள்ளே நுழைந்தார்.

''ஓ! வேலை பிடிக்கத்தானே வேண்டும்?''

''உங்களுக்குத் தங்குவதற்கு விருந்தினர் விடுதி வசதியாய் இருக்கும் என்று நம்புகிறேன். இந்த மாதம் அதில் இருந்து விட்டால் அடுத்த மாதம் ஊழியர் வீடுகள் தயார் ஆகி விடும். அதன் பிறகு நீங்கள் குடும்பத்

துடன் தங்கலாம். அதுவரையில் நம்முடைய தொழிற்சாலை உணவு விடுதியிலிருந்தே சாப்பாடு தருவித்துக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டேன்.... மறந்து விட்டேன்! உங்களை நம் கம்பெனியின் உரிமையாளர் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார். உங்களுக்கு எப்போது சௌகரியமோ அப்போது சொல்லுங்கள். அழைத்துப் போகிறேன்.''

''ஏன், இப்பொழுதே பார்க்கலாமே !''

''சரி, போவோம்!'' என்று அவர் அவனை அழைத்துக் கொண்டு வேறு ஒரு பெரிய அறைக்குள் நுழைந்தார்.

அதுவும் நவீன சாதனங்களுடன் விளங்கியது. வெளிநடையில் நாலைந்து சோபாக்கள் போடப்பட்டிருந்தன. அங்கு ஒன்றில் அவனை அமரச் செய்து நிர்வாகி உள்ளே நுழைந்தார். மறு நிமிடம் திரும்பி வந்தார்.

''மிஸ்டர், கிஷோர்! உள்ளே செல்லலாம்'' என்று அறைக் கதவைத் திறந்தார்.

கிஷோர் சற்றுப் படபடப்புடன் உள்ளே நுழைந்தான். அங்கே மேஜைக்கு எதிரில் உயரமான நாற்காலியில் ஒரு யுவதி உட்கார்ந்திருந்தாள்.

அவளுடைய முகத்தைக் கண்ட கிஷோர் திடுக்கிட்டான். யார் அவள்? இந்திரா! மின்வெட்டுப் போல் அந்த எண்ணம் அவனுடைய நினைவில் தாக்கியது. உடனே அவனுடைய முகம் மாறிற்று. என்ன செய்வது என்று தெரியாமல் அப்படியே ''வணக்கம்''சொல்லவும் மறந்து நின்றான்.

அவனுடைய குழப்பத்தைக் கண்டு நிதானமான குரலில், ''வணக்கம். மிஸ்டர் கிஷோர் ! உட்காருங்கள்'' என்றாள் அவள் தமிழ் மொழியில்.

அதற்கு மேல் அவனுக்குச் சந்தேகம் இல்லை. இந்திராதான், அவள் எப்படி அங்கு வந்தாள்? அந்தத் தொழிற்சாலைக்கு அவள் தான் உரிமையாளரா ?

''உட்காருங்கள், மிஸ்டர் கிஷோர் !'' என்றாள் மீண்டும். அதே குரல்தான். ஒரு காலத்தில் அவனுடைய செவியில் தேனைவிட இனிப்பாக ஒலித்த குரல்தான்.

அவன் குழப்பத்துடன், ''மன்னிக்க வேண்டும் ! எனக்குத் தெரியாது. நான் வருகிறேன்!'' என்று திரும்பி மடமடவென்று வெளியில் சென்று விட்டான்.

ஹௌரா ரயில்வே நிலையத்தை அடைந்ததும்தான் அவன் நிதானமடைந்தான். சென்னைக்கு எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் ஒரு மணி இருந்தது. முதல் வகுப்புப் பிரயாணிகள் காத்திருக்கும் அறையில் அவன் உட்கார்ந்திருந்தான்.

இருபத்து நான்கு மணி நேரத்தில் தனக்கு அடித்த அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்து கொண்டான். இந்திரா அவனுக்கு எஜமானி! வேடிக்கைதான்!

அடுக்கடுக்காக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் அவன் மனக்கண் முன்னே காட்சியளித்தன. அவன் சென்னையில் ஒரு கல்லூரியில்தான் படித்தான்.

இந்திராவும் அங்குதான் படித்தாள். அவளும் அவனுடைய தொகுதிதான். கல்லூரியில் மிகவும் அழகாக அலங்காரம் செய்து கொள்ளும் பெண் என்று அவள் பெயர் வாங்கி யிருந்தாள். தினம் ஒரு வண்ணமாக மிகவும் நவீன பாணியில் அவள் அலங்கரித்துக் கொண்டு வருவாள்.

அவள் தினம் கல்லூரி வெளி வாசலில் நுழையும்போதே மாணவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள், அன்று என்ன அலங்காரம் செய்துகொண்டு வந்திருக்கிறாள் என்று பார்க்க. அந்தக் கோஷ்டியில் கிஷோர் சேராத போதிலும் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அவனுக்கும் மற்ற மாணவர்களைப் போல் அவளைக் காண வேண்டும், அவளுடன் ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்று ஆசைதான். ஆனால் அதற்காகக் கண்ணியக் குறைவாக அவன் நடந்துகொள்ள விரும்ப வில்லை.

மற்றவர்கள் எதையாவது ஒரு சாக்கு வைத்துக் கொண்டு அவளிடம் போய்ப் பேசுவார்கள். ஒன்றும் சாக்குக் கிடைக்கா விட்டால் சும்மா கண்டதும், ''குட்மார்னிங்'' என்றாவது சொல்லுவார்கள். அவளும் நிற்காமல் ''குட்மார்னிங்'' என்று சொல்லி விட்டு வேகமாகப் போய் விடுவாள். அந்தக் கோஷ்டிக்குத் தலைவன் ராமாநுஜம். அவனைச் சுற்றி எப்போதும் நான்கு பேர். அவன் எது செய்தாலும் அதை ரசித்துக் கைதட்டக் காத்திருப்பார்கள்.

அவர்களுடைய தொகுதியில் பத்து மாணவிகள் படித்தார்கள். வகுப்பில் முதல் வரிசையில் பெண்கள் உட்கார்ந்திருப்பார்கள். கடைசி வரிசையில் ராமாநுஜம் கோஷ்டியார். அவர்களுக்கு முன் வரிசையில் கிஷோர். அவனுக்குப் பின்புறம் உட்கார்ந்து அவர்கள் ஏதாவது வம்பு அளந்து கொண்டு பெண்களைப் பரிகாசம் செய்து கொண்டிருப்பார்கள்.

ஒரு சமயம் வகுப்பு நடந்து கொண்டிருக்கையில் இந்திராவுக்கு முன்னால் ஒரு காகிதச் சுருள் காற்றில் வந்து விழுந்தது. அவள் அதை லட்சியம் செய்யவில்லை. பிறகு இன்னொன்று வந்து விழுந்தது. இப்படியே ஒன்றன்பின் ஒன்றாக மூன்று சுருள்கள் வந்து விழுந்தன. இந்திரா அந்தச் சுருள்கள் எல்லாவற்றையும் பொறுக்கிக் கல்லூரித் தலைவரிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். அவர் வகுப்பில் வந்து நன்னடத்தையைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்து, கண்யமாக வந்து குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி வேண்டினார். கிஷோருக்கு அந்த மாணவர்களின் நடத்தை வெறுப்பை அளித்தது. அவன் வகுப்பில் எழுந்து நின்று ராமாநுஜம் கோஷ்டியைக் காட்டிக் கொடுத்து விட்டான்.

அதன் பிறகு கிஷோரையும் இந்திராவையும் ஒதுக்கி வைத்து அவர்கள் கதை கட்டிப் பரிகசிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அப்படி இருவரையும் ஒதுக்கி வைத்ததினாலேயே இருவருக்கும் இடையில் நட்பு வளரத் தொடங்கியது. ஓராண்டுக்குள் அந்த நட்பு வளர்ந்து காதலாக மாறியது. இருவரும்

அடிக்கடி கடற்கரையில் சந்திப்பதும், திரைப் படங்களுக்குச் செல்வதுமாக நெருங்கி விட்டனர். அவர்களுடைய காதலைப் போலவே ராமாநுஜம் கோஷ்டியின் பொறாமையும் வளர்ந்தது. அவர்களைப் பிரிக்க எத்தனையோ சூழ்ச்சிகள் நடந்தன. ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை.....

அவர்கள் வகுப்பில் மாலதி என்று ஒரு பெண் படித்தாள். அவள் மிகவும் துணிவுள்ள பெண். தினமும் கல்லூரிக்கு ஸ்கூட்டரில் தான் வருவாள். ஆண் பிள்ளைகளோடு சகஜமாகப் பழகுவாள். தினம் பஞ்சாபியைப் போல் கால் சட்டை அணிந்து வருவாள். அவளிடம் அந்தப் பையன்கள் வாலாட்ட முடியாது. ஒரு நாள், பரீட்சைக்கு ஒரு மாதம் முன்பு, கிஷோர் கல்லூரிக்குப் பின்புறம் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். அப்போது மாலதி வந்தாள். அவனிடம் அன்று நடந்த பாடத்தில் சில சந்தேகங்களைக் கேட்டாள். அவன் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலேயே அவள் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது தூரத்தில் இந்திரா வருவதை அவன் பார்த்தான். தீவிரமாகப் பாடத்தில் கவனம் செலுத்தியிருந்த படியால் உடனே எழுந்து போய் அவளுடன் பேசவில்லை. சமீபத்தில் வந்த இந்திரா ஒரு விநாடி நின்றாள். சட்டென்று திரும்பி வேகமாகப் போய் விட்டாள். அவளுடைய நடத்தை அவனுக்கு விசித்திரமாக இருந்தது. அதன் பிறகு அவளைப் பார்க்க இரண்டு தடவைகள் அவளுடைய வீட்டுக்குச் சென்றான். இரண்டு தடவையும் அவளுக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி அவனைப் பாராமலே திருப்பி அனுப்பி விட்டாள்.

முதலில் அவனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. பிறகு போகப் போகச் சரியாகப் போய் விட்டது. ''பணக்கார வீட்டுப் பெண். அப்படித்தான் இருப்பாள்'' என்று தன் புண்பட்ட உள்ளத்தை ஆற்றிக் கொள்ளலானான். அதன் பிறகு படிப்பு முடியும் வரையில் அவளைப் பார்க்கவில்லை...

இப்போது எப்படி அவள் கல்கத்தாவில் வந்து தொழிற்சாலையின் முதலாளியாக உட்கார்ந்தாள்? அவளுடைய தந்தை பணக்காரர் என்பது மட்டும்தான் அவனுக்குத் தெரியும். அவர் எங்கு இருந்தார், என்ன தொழில் செய்தார் என்ற விவரங்கள் எதுவும் தெரியாது. அவன் எப்படி அங்கு வந்து சேர்ந்தான் ? விதியின் விளையாட்டுக்களில் ஒன்று ? அவளிடம் போய்க் கைகட்டி நின்று தான் பிழைக்க வேண்டும் என்பது விதியின் கட்டளையானால் அந்த விதியை அவன் ஏமாற்றி விட்டான்!... அப்படித்தான் அவன் எண்ணினான் அன்று பிற்பகல்.

தன்னுடைய அறைக்கு வந்ததும் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினான்: அவளிடம் ஊழியம் செய்ய அவனுக்கு விருப்பம் இல்லாதபடியால் தன் வேலையை அன்றே ராஜிநாமா செய்வதாய் ஒரே வரியில் எழுதி, அந்தக் கடிதத்தை அவளுக்கு அனுப்பி விட்டு, நேராக விடுதிக்கு வந்து, பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு ஹௌரா வந்து விட்டான்....

கடிகாரத்தைப் பார்த்தான். இன்னும் அரை மணி இருந்தது.

ரயில் புறப்படப் பத்து நிமிஷங்கள் இருக்கும். அவன் பெட்டியையும் படுக்கையையும் தூக்க எழுந்தான்.

அப்போது மடமட வென்று யாரோ உள்ளே நுழையும் சத்தம் கேட்டது. அவன் நிமிர்ந்து பார்த்தான். இந்திராதான். ஆடையெல்லாம் தூசி படிந்து, சீவிய தலை காற்றில் பறக்க, நெற்றித் திலகம் கலைந்து, பரபரப்புடன் நுழைந்து நின்றாள். அவளைக் கண்டதும் அவன் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது.

'' எப்படியும் உங்களுடைய பிரயாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று வேகமாக வந்தேன்....''

''அப்படி என்ன தீர்மானம்? என்னை யாரும் தடுக்க முடியாது'' என்று வெளியில் போக யத்தனித்தான் கிஷோர்.

''மிஸ்டர் கிஷோர்! நீங்கள் உத்தியோகம் பார்க்க வேண்டாம். அது உங்கள் இஷ்டம். ஆனால் எனக்காக ஐந்து நிமிஷம் தாமதிக்கவேண்டும். என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு விட்டுப் பிறகு புறப்படுங்கள்.''

''நமக்காக ரயில் காத்திருக்குமா?''

''ரயில் போனால் போகிறது. காலையில் விமானத்தில் போகலாம்.''

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் வெளிக் கதவை அடைந்து விட்டான். ஆனால் அவள் அவனுக்கு முன்னால் தாவி வழியை மறித்து, அவனுடைய பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டு, ''தயவுசெய்து — எனக்காக ஒரு நிமிஷம்! இது கூடச் செய்யக் கூடாதா?'' என்றாள். கண்கள் நீரைச் சொரிந்தன.

கிஷோர் திகைத்து விட்டான். அவனுடைய எண்ணத்தில் உருப்பெற்றிருந்த கர்வமும், மமதையும் கொண்ட இந்திரா எங்கே? இவள் யார்? தன் காலைத் தொட்டு வணங்கி, நிலைகுலைந்து நிற்கும் இந்திரா யார்?....

அப்படியே நாற்காலியில் அமர்ந்தான். அவள் தன்னுடைய பையைத் திறந்து சில கடிதங்களை வெளியில் எடுத்துப் போட்டாள்.

''அந்தக் கடிதத்தை முதலில் பாருங்கள்.''

அவன் அதைப் படித்தான். அவனுக்கு எழுதப்பட்ட கடிதம் அது: ''என் அன்பைக் கவர்ந்த என் ஆருயிர் ரோமியோவான கிஷோருக்கு'' என்று தொடங்கி, ஆங்கிலக் கவிதைகளில் காணப்படும் காதல் மொழிகளையெல்லாம், வலிந்து சேகரித்து எழுதப்பட்ட காதல் கடிதம் அது. கடிதத்தின் முடிவில் ''உன் அன்புச் சந்திப்பை எதிர்நோக்கி ஏங்கும் உங்கள் அருமை ஜூலியட் — மாலதி'' என்று கையொப்பமிடப்பட்டிருந்தது.

''இந்தக் கடிதம் ஏது?'' என்றான் அவன்.

''இதை ஒரு கவருக்குள் வைத்து மேல் கடிதமும் எழுதி எனக்கு யாரோ அனுப்பி

விருந்தார்கள். நான் இதை நம்பவில்லை. மாலதியை ஒரு நாளும் விரும்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் உங்களைச் சந்தித்து இதை உங்களிடம் காட்ட வேண்டும் என்று வந்தேன். நாம் வழக்கமாகச் சந்திக்கும் மரத்தடியில், உங்களுடன் மாலதி இருப்பதைக் கண்டேன். உடனே என்னுடைய அவசர புத்தியில், இந்தக் கடிதம் உண்மை தான் என்று நம்பி விட்டேன்..... அதன் பிறகு ஆறு மாதங்கள் முன்பு கல்கத்தாவில் மாலதியைச் சந்தித்தேன். அப்போதுதான் உண்மையை உணர்ந்தேன். இந்த ஆறு மாதங்களாக உங்களைத் தேடாத இடமில்லை. உங்களுடைய சென்னை விலாசத்துக்கு எழுதிய கடிதங்களெல்லாம் திரும்பி வந்து விட்டன. அவைகள்தான் இவை..... அதற்கு முன்பே அப்பா இறந்து விட்டார். தொழிற்சாலையை நானே நிர்வகித்து நடத்த வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. முதல் காரியமாகப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தேன். உங்களுக்காகவேதான் அந்த விளம்பரம் வெளியிட்டேன். இனி நீங்கள் திரும்பிப் போக வேண்டும் என்று விரும்பினால் அது உங்களுடைய இஷ்டம். இரண்டு ஆண்டுகளாக என்னுடைய எண்ணத்தில் சுமந்திருந்த சுமையை இறக்கி வைத்து விட்டேன்.....'' என்று கண்ணீருக்கிடையே கூறி முடித்தாள்.

எல்லாவற்றையும் கேட்டு அசைவற்று அவன் உட்கார்ந்திருந்தான். ''சென்னைக்குப் போவதானாலும் இனி இன்றைக்கு ரயில் கிடையாது. நாளைக்குத்தான். என் கூட வந்து தங்கி நாளைக்குப் புறப்படலாம். என்னுடைய ஊழியராக அல்ல; என்னுடைய விருந்தினராக'' என்றாள் இந்திரா அவனுடைய தயக்கத்தைக் கண்டு.


அவன் மௌனமாக எழுந்தான். அவளுடன் கூட வந்து வெளியில் காத்துக் கொண்டிருந்த திரு வரதாச்சாரி, ''நீங்கள் போங்கள். லக்கேஜை நான் கொண்டு வந்து சேர்க்கிறேன்'' என்றார்.

இந்திராவைப் பின்தொடர்ந்து, கிஷோர், ரயில்வே நிலையத்தை விட்டு வெளியில் வந்து, காரில் ஏறி உட்கார்ந்தான்.

தொழிற்சாலையிலிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டும் என்று ஓடி வந்த கிஷோர் சில மணி நேரத்துக்குள் மீண்டும் திரும்பி வந்தான்; ஊழியனாக அல்ல, எஜமானியின் விருந்தினனாக. இனி அவனுடைய வாழ்க்கைக்கும் அவள்தானே எஜமானி !

திரைத் துணுக்கு

70 எம். எம். சாதாரண பிலிம் சுருளின் அகலம் 35 மி. மீட்டர் அளவினதாய் இருக்கும். ஆனால் இப்போது இதைப் போல் இரண்டு மடங்கு அதாவது 70 மி. மீ. அகலமுள்ள பிலிமைக் கொண்டு படமெடுக்கிறார்கள். 70 மி. மீட்டர் பிலிம் உபயோகிக்க அது பொருந்தக் கூடிய வகையில் தயாரான விசேஷ காமிராக்களும் புரொஜக்டர்களும் தேவை. படத்திலிருக்கும் புரொஜெக்டர் நவீன 70 மி. மீ. புரொஜக்டர் தான். 70 மி. மீ. படம் மட்டும்தான் இதைக் கொண்டு காட்ட வேண்டும் என்பதில்லை. தேவையானபோது 35 மி. மீ. படங்களையும் காண்பிக்கலாம். 70 மி. மீ. பிலிமில் சாதாரண பிலிம்களில் உள்ளதை விட அதிகமாக, ஆறு ஒலிப்பாதைகள் (Sound Tracks) உள்ளன. 70 மி. மீ. படத்தை சினிமாஸ்கோப் திரையை விடப் பெரிய திரையில் நாம் பார்க்கும்போது (62 அடி நீளம் 30 அடி அகலம்) நம் கண்களுக்குத் தென்படுவதை 'டாட் ஏ. ஓ. விஷன்' என்கிறார்கள். எலிஸபெத் டெய்லரின் கணவராக இருந்தவரும் ஒரு விமான விபத்தில் இறந்துபோனவருமான மைக் டாட், அமெரிக்கன் ஆப்டிகல் கம்பெனியாருடன் இணை சேர்ந்து கண்டுபிடித்த புதுமையான சாதனம் என்பதால் 'டாட் ஏ. ஒ. விஷன்' என்று பெயர் பெற்றது.



70 மி. மீ. திரைப்படக் காமிராவுக்குள் அடங்கும் 'படம் பிடிக்கப்படும் விஸ்தீரணம்' அதிகமாவதால் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் போன்ற பெரிய பெரிய ஸெட்டுகள், ஒரே சமயத்தில் பல்லாயிரக் கணக்கானோர் நடிக்கும் யுத்தக் காட்சிகள் போன்றவற்றைப் பிரமிக்க வைக்கும் விதத்தில் காட்டலாம். தனி மனிதர்களின் உருவங்களானாலும் பெரிதாகவும் பளிச்சென்றும் நன்றாகத் தெரியும்.

''35 மி. மீ. படத்திலேயே நமது நட்சத்திரங்கள் 70 மி. மீ. படத்தில் பார்ப்பது போல் தோன்றும் அளவுக்கு உருவத்தால் பெரிதாகத்தானே இருக்கிறார்கள். இன்னும் 70 மி. மீ. படப்பிடிப்பு இந்தியாவுக்கு வந்து விட்டால் எங்கள் கதி என்ன ஆவது?'' என்று கிண்டல் செய்கிறார் ஒரு ரசிகர்.

வழக்கறிஞர் வரிசை

சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு கொலை வழக்கின் புனர் விசாரணைக் கட்டம். குற்றவாளிக்குச் சாதகமான சாட்சியங்கள் வெகு குறைவு. பிரதம நீதிபதி பீஸ்லியும் மற்றொரு நீதிபதியும் வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

குற்றவாளியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சாட்சியங்களின் தராதரத்தை எடுத்து அலசிவிட்டு; ''கனம் நீதிபதி அவர்களே! சாட்சியங்கள் என் கட்சிக்காரருக்கு அனுகூலமாக இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. அவைகளை ஏற்றுக் கொள்ளலாமா நிராகரிக்கலாமா என்று தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார்.

பிரதம நீதிபதி பீஸ்லி தமக்கே உரித்தான பாணியில் சில நிமிடங்கள் உதட்டைக் குவித்து யோசனை செய்தபிறகு அந்த வழக்கறிஞரைப் பார்த்து, ''நீங்கள் நீதிபதி ஸ்தானத்திலிருந்தால் என்ன முடிவுக்கு வருவீர்கள்?'' என்று கேட்டார்.

அந்த வழக்கறிஞர் கொஞ்சம்கூடத் தயங்காமல், ''குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதிப்பேன்'' என்றார். நீதிபதிக்குப் பரம சந்தோஷம். 'அதைவிட அதிகமாக என்றால் தண்டனை அளிக்க முடியாது' என்று சொல்லி வழக்கின் அப்பீலைத் தள்ளுபடி செய்தார்.

நேர்மையின் அடிப்படையிலேயே வாதாடுவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்த அந்த வழக்கறிஞர்தான் காலம் சென்ற வி. எல். எதிராஜ். அவருடைய கட்சிக்காரர் மனமுடைந்து போயிருக்கலாம்! அதற்காக அவர் நேர்மையைத் தியாகம் செய்யத் தயாராயில்லை! இப்படி அவர் சில வழக்குகளைத் தியாகம் செய்த போதிலும் பல பெரிய வழக்குகளில் வெற்றி பெறத் தவறவில்லை என்பது உண்மை.

அவர் வெற்றியடையாத சில வழக்குகளில் வேறு எந்த வழக்கறிஞர்களாலும் வெற்றி கண்டிருக்க முடியாது. அவர் ஜெயித்த சில வழக்குகளையும் மற்றவர்களால் ஜெயித்திருக்க முடியாது. கிரிமினல் வழக்குத் துறையில் நிழு ஜென்ட் கிராண்டுக்குச்சமமாகவும் கிராண்டுக்குப் பின் முடிசூடா மன்னராகவும் விளங்கிய பெருமை வி. எல். எதிராஜ் அவர்களுக்கே சேரும்.

ராசர்களாகவே பிள்ளைகளைப் பெற்ற பெருமை ஒரு தந்தைக்குக் கிடைத்ததென்றால் அந்தத் தந்தை வேலூர் லட்சுமணசுவாமி முதலியார்தான். கோவிந்தராசர், எதிராசர், வரதராசர் என்ற அந்த மூன்று பிள்ளைகளில் நடுவரான எதிராசர் 1890ம் ஆண்டில் பிறந்தார். வேலூரிலும் சென்னையிலும் படித்துப் பட்டம் பெற்று இங்கிலாந்து போய்ச் சீக்கிரமே ஒரு பாரிஸ்டராகப் பரிணமித்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் 1913 ம் ஆண்டில் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.

உடனடியாக அவர் தொழிற் பயிற்சி பெறத் தொடங்கியது அப்போது பப்ளிக் பிராசிகூட்டரான ஆஸ்போர்ன் துரையிடம். ஆனாலும் அவர் அதிக ஈடுபாடும் குரு பக்தியும் கொண்டது அனுபவமிக்க வழக்கறிஞரான டாக்டர் ஸ்வாமிநாதனிடத்தில். முன்னவரிடம் பயிற்சி பெறும் போது சர்க்கார் தரப்பில் வாதாடவும் பின்னவரிடம் பயிற்சி பெறும்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் வாதாடவும் ஒரே சமயத்தில் திறமை பெற்றார்.

இந்தத் திறமை அவரை எவ்வளவு தூரம் சார்ந்திருந்தது என்பதற்கு அந்த நாட்களில் கள்ளிக்கோட்டை செஷன்ஸ் நீதிபதியாக இருந்த ஜாக்ஸன் துரையின் வார்த்தைகளே சான்று! அவருடைய தீர்ப்புக்களின் மீது உயர்நீதி மன்றத்தில்அப்பீல்கள் வருமல்லவா? திரு எதிராஜ் சர்க்கார் தரப்பில் ஆஸ்பார்னுடன் நின்று வாதாடினால் அந்தத் தீர்ப்பு அப்பீலில் ஏற்றுக் கொள்ளப்படும். அதே ஜாக்ஸனின் வேறு தீர்ப்பு, எதிராஜ் எதிர்த் தரப்பில் டாக்டர் ஸ்வாமிநாதனுடன் நின்று வாதாடினால் நிராகரிக்கப்படும். - ''யார் இந்த எதிராஜ்? எந்தத் தரப்பில் ஆஜரானாலும் ஜெயித்து விடுகிறாரே?'' என்று ஆச்சரியப்பட்டாராம் ஜாக்ஸன்.



எதிராஜின் வெற்றி மனோதத்துவக் கலையின் அடிப்படையிலே அமைந்திருந்தது. அவருடைய வாதங்களும், வழக்கு அநுபவங்களும் எப்போதுமே இனிமையும் குழைவும் நிறைந்ததாக இருக்கும். ஓங்கியடித்துச் சாட்சிகளைப் பயமுறுத்தும் பாணியில் பேசுவது அவருடைய வழியில்லை. கிரிமினல் வழக்குகளையும் அப்பீல்களையும் விசாரிக்கும் பகுதிக்கு யாராவது புதிய நீதிபதிகள் வந்து சேர்ந்தால் எதிராஜ் தம் வழக்குகள்

அந்தக் கோர்ட்டுகளில் இல்லாத போதுங்கூட ஒரு பள்ளி மாணவன் போல அங்கு போய் அமர்ந்து அந்த நீதிபதிகளின் குணாதிசயங்களையும் மனோபாவங்களையும் கூர்ந்து கவனிப்பார். பிறகு தாம் அந்தக் குறிப்பிட்ட நீதிபதி முன் வாதாடச் சமயம் வரும்போது அந்த நீதிபதியின் போக்குக்குத் தகுந்தவாறு பேசி வெற்றிக்கு வழிகோலி விடுவார்.

வழக்கு விவரங்களை அவர் அலசி அலசிப் படித்திருந்தால் கூட, அப்படிப் படித்தவர் போலக் காண்பித்துக் கொள்ள மாட்டார். எதிராஜ் முழு கவனமும் செலுத்தியிருக்க மாட்டார் என்ற நம்பிக்கையில் எதிர்த் தரப்பினர் ஏதாவது குறுக்கு வழியில் புகுந்து குழப்ப முயன்றால் உடனே கச்சிதமாக அந்தத் தவறை மாத்திரம் சுட்டிக் காட்டி நீதிபதியின் கவனத்தைத் தம்மிடம் திருப்பிக் கொண்டு விடுவார்.

1925லிருந்து 1960 வரை சென்னை உயர்நீதி மன்றத்திலும் மற்றும் வெளியூர் நீதிமன்றங்களிலும் நடந்த எல்லாப் பிரபல கிரிமினல் வழக்குகளிலுமே எதிராஜ் அவர்களின் பெயர் இணைந்திருந்தது. காக்கிநாடா சதி வழக்கு, லட்சுமி காந்தம் கொலைவழக்கு, ஹைதராபாத் ரஸ்வி வழக்கு, நீதிபதி பயர்ஸ் வழக்கு முதலிய எல்லா வழக்குகளிலுமே எதிராஜ் கலந்து கொண்டிருக்கிறார்.

இவர் தீவிரமாக இத் தொழிலில் ஈடுபட்டிருந்த நாட்களில் சராசரி தினம் ஒன்றுக்கு இருபதிலிருந்து முப்பது வரையிலான வழக்குகளில் ஆஜராகியிருக்கிறார். அதிக பட்சமாக ஒரு சமயம் ஒரே நாளில் நாற்பத்தி நான்கு வழக்குகளில் ஆஜராகி யிருக்கிறார். ஒரே வழக்கில் அவர் அதிகபட்சம் பெற்ற தொகை காசிம் ரஸ்வி வழக்கில் பிராசிகூட்டராக இருந்த போதுதான். தினசரி ஊதியம் ஆயிரம் ரூபாய். அந்த வழக்கில் இருநூற்றித் தொண்ணூற்றி ஏழு நாட்கள் ஆஜராகியிருக்கிறார்! காக்கிநாடா சதி வழக்கில் பிராசிகூட்டராகப் பணியாற்றிக் கிடைத்த ஊதியமான முப்பதினாயிரம் ரூபாய் சொச்சத்தையும் அப்படியே கொடுத்து 1935ல் பெண்ட்லி கார் ஒன்றை வாங்கி விட்டார் கார் பிரியரான எதிராஜ். அவரிடம் எப்போதுமே நான்கு கார்கள் இருந்தன. காருக்கு ரிஜிஸ்டிரேஷன் நம்பர்களை வாங்குவதில்கூட விசேஷ கவனம் செலுத்தினார். காகிநாடா சதி வழக்கில் சர்க்கார் தரப்பில் அவருக்குக் கிடைத்த கோர்ட் வெற்றியை விட, அசல் பிரதிவாதியான 'பிரதிவாதி' பயங்கராச்சாரியார் தீர்ப்பளிக்கப்படு முன் கோர்ட்டிலேயே தமக்கு எதிராக வழக்காடிய எதிராஜின் கண்யமும் நேர்மையும் நிறைந்த வாதத்தைப் பாராட்டிச் சில வார்த்தைகள் சொன்னது அதிக தார்மீக வெற்றியைக் கிடைக்கச் செய்தது.

1946ம் ஆண்டில் அமர்க்களப்பட்ட நீதிபதி பயர்ஸ் வழக்கில் நீதிபதி பயர்ஸ் சார்பில் ஆஜரானார் எதிராஜ். தற்காப்புக்காகத் தான் பயர்ஸ் துப்பாக்கியை உபயோகித்து ஒரு பதினேழு வயதுப் பையனின் மரணத்தைக் கூட்டத்தில் விளைவித்தார் என்று முடிவாகியது.

மற்றொரு வேடிக்கையான வழக்கு. வயது முதிர்ந்த பங்களூர் ஸ்டேஷன் மாஸ்டர் சென்னை மெயிலிலிருந்து வந்து இறங்கிய யுவதி ஒருத்தியிடம் கூட்டம் மிகுந்த பிளாட்பாரத்தில் கண்யக் குறைவாக நடந்து கொண்டதாக வழக்கு. கீழ்க் கோர்ட்டில் ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தண்டனை அளித்து விட்டார்கள். அப்பீலில் அவருக்காக ஆஜரானார் எதிராஜ். நீதிபதிகள் சர் வில்லியம் ஜயிலிங்கும் கெளட்ஸ்டிராட்டரும்.

எதிராஜின் ஒவ்வொரு வாதத்தையும் ஜயிலிங் ஒங்கி நிராகரித்துக் கொண்டிருந்தார். டிராட்டர் கவனம் செலுத்தாமலே உட்கார்ந்திருந்தார். எதிராஜ் நிதானம் இழக்காமல் ஜூரர்கள் பக்கம் திரும்பி ''பிரஸ்தாபச் சூழ்நிலையை ஜூரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காலை வேளை. கூட்டம் நிறைந்த ரயில்வே பிளாட்பாரம். வண்டி வந்து நின்று ஜனசமுத்திரம் அலை மோதுகிற நேரம். என் கட்சிக்காரரோ ஐம்பது' வயதைக் கடந்த வயோதிகர். பிள்ளை குட்டிக்காரர். அவர் தம் மானத்தையும் கௌரவத்தையும் மறந்து ஒரு யுவதியிடம் அந்தச் சூழ்நிலையில் கண்யக் குறைவாக நடந்து கொண்டிருப்பாரா?... கனம் நீதிபதிகளும் வயோதிகர்தான். அனுபவமுடையவர்தான். அவர்களைப் போன்றவர்கள் ஒரு யுவதியிடம் பலாத்காரமாக நடந்து கொள்ள நினைக்கத்தான் முடியுமா?'' என்ற ரீதியில் ஆரம்பித்தார்.

ஜயிலிங்கின் முகம் ஜிவுஜிவுத்தது. 'என்ன? என்ன?' என்று துள்ளினார். டிராட்டர் புத்தகம் ஒன்றை எடுத்து முகத்தை மூடி ஆசை தீரச் சிரித்து விட்டுச் சக நீதிபதியிடம் ஏதோ சொன்னார். முடிவு! ஸ்டேஷன் மாஸ்டரின் தண்டனை ரத்தாகியது. எதிராஜுக்கு வெற்றி.

பதின்மூன்று வருட காலத்துக்கு மேலாக பப்ளிக் பிராசிகூட்டராகப் பணியாற்றிய எதிராஜுக்குப் பல ஜூனியர்கள் உண்டு. அவர்களில் இப்போது உயர்நீதிபதியாக இருக்கும் திரு பி. எஸ். கைலாசமும் ஒருவர். ஓய்வு பெற்ற நீதிபதி சோமசுந்தரம் அவர்களும் அவர் ஜூனியர்தான்.

ஜூனியர்களிடம் அன்பும் அனுதாபமும் நிறைந்த எதிராஜ், அவர்களுக்கு வருடம் முழுதும் சேர வேண்டிய ஊதியத்தைக் கணக்கிட்டு ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று காலையில் கொடுத்து உற்சாகப்படுத்துவாராம்.

தம் நாவுக்கு அதிக வேலையை நண்பர்களிடையே கொடுக்காமல் செவிக்கு மாத்திரம் நிறைய வேலை கொடுத்து எல்லோருக்கும் நண்பராய் விளங்கிய எதிராஜ் ஒரு சிறந்த விளையாட்டுப் பிரியரும் கூட. எழுபது ஆண்டு காலம் வாழ்ந்து புகழும் பெயரும் வழக்கறிஞர் துறையில் பெற்றுப் பல இளைஞர்களுக்குக் கலங்கரை விளக்காக நின்றவர். தம் நினைவை நீதித் துறைக்கே உரிமையாக விட்டுச் செல்லாமல் கல்வித் துறையுடனும் பகிர்ந்து கொண்ட கனவான் அவர்!

—கோமதி ஸ்வாமிநாதன்



ஆர்ய வைத்யன் ஸ்ரீ பி. வி. ராம வாரியர் அவர்களின் புதல்வி சௌ. தோவுக்கும் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ மயால்பழூர் மனைக்கால் சுப்பிரமணியன் நம்பூதிரி அவர்கள் குமாரன் சிரஞ்சீவி கேரளவர்மாவுக்கும் திருமணம் சமீபத்தில் கோயமுத்தூரில் சிறப்பாக நடைபெற்றது

வாழ்க, மணமக்கள்!

வேதாந்த தத்துவக் கதை

கண் திறந்த கண்ணன்

ஏ. குணபாரதி

ஏழைப் பிராமணர் ஒருவர் வீடுவீடாக யாசகம் வாங்கி வயிறு வளர்த்து வந்தார். அவர் கண்ணன் மீது அபார பக்தி கொண்டவர். அன்றாடம் அமுதாக்கி ஆண்டவனுக்குப் படைத்தபின் தான் அவரும், மனைவியும் உண்பது வழக்கம். தினமும் கீதையில் சில பகுதிகளைப் படித்துப் பாராயணம் செய்வதும் அவரது அன்றாட அலுவல்களில் ஒன்று.

அன்றொரு நாள் ஊர் முழுதும் சுற்றி அலைந்து விட்டார். ஒரு மணி அரிசிகூடப் பிச்சை கிடைக்கவில்லை. அவரும் அவரது மனைவியும் பட்டினி கிடக்க வேண்டியதுதான்.

''கண்ணா! உன் பக்தர்களாகிய நாங்கள் பட்டினி கிடந்தாலும் கிடக்கிறோம். உனக்குக் கூட இன்று அமுது படைக்க முடியாமல் செய்து விட்டாயே? உன் திருவுள்ளத்துக்கு இது சம்மதமா?.....'' என்று சொல்லி விட்டுக் கீதையைப் படிக்கிறார்.

பசி வயிற்றைக் கிள்ளுகிறது. கீதையின் ஒரு செய்யுளைப் படிக்கிறார். ''என்னைத் தவிர வேறெதையும் நினைக்காமல், என்னையே எவன் பக்தியோடு உபாசிக்கிறானோ, அவனது அன்றாடக் குடும்ப யோகக்ஷேமத்தை நானே நிர்வகித்து நடத்துவேன்'' என்ற கண்ணனின் கீதா வாக்கியத்தை மீண்டும் மீண்டும் உரக்க ஆவேசம் வந்தவர்போல் மும்முறை படிக்கிறார்.

கரித் துண்டு ஒன்றை எடுத்து வந்து, ''இது முற்றிலும் பொய்'' என்று ஆத்திரத்தோடு சொல்லிவிட்டு ஓலைச்சுவடியில் உள்ள கீதையின் மேற்கண்ட கருத்துள்ள சுலோகத்தில், ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்னும் பகுதியைக் கரியினால் கோடிட்டு அடித்து விட்டு அப்படியே போட்டு விட்டு எழுந்து வெளியே எங்கோ போய் விடுகிறார்.

வெகு நேரம் கழித்துத் தலையிலே துண்டைப் போட்டுக் கொண்டு ஆய்ந்து ஓய்ந்து காய்ந்து களைத்துப் போய் வீடு நோக்கி வருகிறார். மனைவி முகத்தில் புன்சிரிப்புடனும், புதிய ஒளியுடனும் கலை பொருந்திய அழகுடனும், தெம்புடனும் அவரை ஆவலோடு வரவேற்றது அவருக்கே ஆச்சரியமாயிருந்தது.

''வாருங்கள், உள்ளே சீக்கிரம். எத்தனை நாழிகையாகப் பட்டினி கிடப்பீர்கள்... அறுசுவை விருந்து படைத்திருக்கிறேன், உங்களுக்காக. அருந்துங்கள். நீங்கள் அனுப்பிய பொருள்களை அந்தச் சிறுவன் கொண்டு கொடுத்தே வெகு நேரமாகிறது. எங்கிருந்து கிடைத்தது உங்களுக்கு அவ்வளவு அரிசி, பருப்பு, பழ வகைகள், பொற்காசுகள், தங்க அணிகள், நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், உயர்ந்த ஆடைகளெல்லாம்.....?''

''என்ன.... நானா? சிறுவனையா? அனுப்பினேனா? அவன் யார்? எப்படியிருந்தான்? பேர் என்னவென்று சொன்னான்....''


''உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? இதென்ன விந்தை? அவன் பெயர் கிருஷ்ணனாம்...... எவ்வளவு அழகு தெரியுமா?...... சாக்ஷாத் கண்ணபிரான் படத்திலிருப்பது போலவே இருந்தான். ஆனால் பாவம்...அவனுக்கு.... திருஷ்டி மாதிரி...''

''என்ன...... என்ன?..... சொல்!''

''முகம் மட்டும் கரி பூசிய மாதிரி ஒரே கருப்புப் படர்ந்திருந்தது.....''

''ஆ... பரந்தாமா! என்ன பாவம் செய்து விட்டேன்? என்ன சோதனை? எத்தகைய தண்டனை எனக்கு?......'' என்று சொல்லி விட்டு மனைவியின் பக்கம் திரும்பி, ''நீதான் பாக்கியசாலி.... மகா புண்ணியவதி... சாக்ஷாத் கிருஷ்ண பகவான்தான் அவர். எனது அறியாமைக்குச் சரியான பாடம் கற்பித்துப் புத்தி புகட்டி விட்டார். நான் பாவி.... மகா பாவி... அவரையும், அவர் கீதையையும் நிந்தித்து, அதிலே கரிக் கோட்டைக் கிழித்து அழித்து விட்டேனல்லவா? அதைச் சுட்டிக் காட்டத்தான் அவர் முகத்தில் கரி பூசியது போல் இருந்திருக்கும். கண்ணன் என் கண்ணைத் திறந்து விட்டான். பசியின் கொடுமையால், எத்தகைய அபசாரத்தை இழைத்து விட்டேன்? பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்ற அஞ்ஞான நிலையிலிருந்தேன் நான். இப்போது எனக்குப் பத்தும் குவிந்து விட்டது. என் உடல் பசி பறந்து விட்டது. அவனை உணர வேண்டிய உள்ளப் பசி என்னை உந்தித் தள்ளுகிறது. எனக்கு இனி இந்தப் பொருள் தேவையில்லை. மாயை இருள் நீங்கிக் கண்ணன் அருள் பெற வேண்டும் நான். கண்ணனைக் கண்ணாரக் காண வேண்டும். அவனைப் பார்த்தால் என் பசி யெல்லாம் தீர்ந்து விடும். கண்ணா.... கண்ணா..... என்னை மன்னிப்பாயா? கருணை புரிவாயா?.....'' என்று கத்திக் கொண்டே கண்ணன் திருக்கோயிலுக்கு ஓடுகிறார், கையில் கீதைச் சுவடியோடு அவர் மனைவியும் அவரைப் பின்தொடருகிறாள் கண்ணனைக் காண.





"தப்பி விட்டானா?...

தயவுசெய்து மீண்டும் பிடிக்காதீர்கள்!"

"மேனா"

மேற்கண்ட வேண்டுகோளை, குறிப்பாகத் தப்பி ஓடிவிட்ட ஒரு கைதி விஷயத்தில் ஒரு நிர்வாகத் தலைவர் வெளியிட்டார் என்றால் ஆச்சரியமாக இல்லை?... ஆம்! அமெரிக்க நாட்டிலுள்ள டென்னஸி பிராந்தியக் கவர்னர் ஜான் புக்கனன்தான் இப்படி வேண்டிக் கொண்டார். அவர் நிர்வாகத்திலுள்ள ஜெயிலில் மீண்டும் அவர் வேண்டாத ஆசாமி ஹென்றி டேவிஸ் என்ற பெயர்போன கள்ளக் கையெழுத்துப் பேர்வழிதான்! இது நடந்தது-1891ம் ஆண்டில்.

எட்வின் ஸ்டாடர்ட் என்னும் ஹென்றி டேவிஸ் டென்னஸி மாநிலச் சிறையில் ஆறு வருட காலத் தண்டனை பெற்ற குற்றவாளியாக உள்ளே நுழைந்தபோதே தப்புவதற்கான வழிகளைத் தீவிரமாக ஆராய முற்பட்டான். ஹென்றி டேவிஸ் திறமை மிக்க வழக்கறிஞனாகத்தான் தொழில் நடத்தினான். அரசியலில் நுழைய மோகம் பிறக்கவே தொழிலை விட்டு அரசியல்வாதியாக மாறினான். கட்சிப் பணத்தின் பொருளாளர் பதவியும் கிட்டவே, கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பணத்துடன் தலைமறைவாகப் போனான். ஆனாலும் நீதியின் கண்களுக்குத் தப்ப முடியாமல் மாட்டிக் கொண்டு முதல் தடவை சிறைக்குச் சென்றான்.

வெளியே வந்தவுடன் செக்குகளில் பொய்க் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கும் துறையில் கவனத்தைச் செலுத்தினான். இந்தத் தடவைதான் மேலே குறிப்பிட்ட ஆறு வருடத் தண்டனை கிடைத்தது.

ஹென்றி டேவிஸின் கனவான் போன்ற தோற்றமும் ஆடையும் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கும். அவனுக்கோ பல பெரிய புள்ளிகளின் பெயர்களும், அவர்கள் பாங்குக் கணக்கு வழக்கும் அவர்கள் கையெழுத்துப் போடும் விதமும் கன கச்சிதமாகப் பாடமாகியிருந்தன. அவன் பொய்க் கையெழுத்து சில காலத்துக்குத்தான் தெரியாமல் இருந்தது. என்றைக்கும் உண்மை வெட்டவெளிச்சமாகிப் போகாமலிருக்குமா? அவன் குற்றத்துக்குரிய தண்டனை கிடைத்து விட்டது. சிறைக்குள் போனாலும் அவன் கிரிமினல் மூளை வேலை செய்யாமல் போகவில்லை.



ஜெயில் மேற்பார்வையாளர்களில் ஒருவனைத் தன் கைக்குள் போட்டுக் கொண்ட டேவிஸ் அவன் மூலமாக நீதிஸ்தலங்களில் உபயோகிக்கப்படும் காகிதங்களையும், பலவித மை, பேனாக்கள் முதலியவற்றையும் வரவழைத்தான். பெரிய மனிதர்கள் எழுத உபயோகிக்கும் விலையுயர்ந்த காகிதங்களையும் பல ரகங்களில் வாங்கி வரச் செய்தான்.

அவன் வசித்த பகுதியைச் சேர்ந்த நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பெரிய மனிதர்கள், வியாபாரிகள் எழுதுவதுபோல் தனித்தனிக் கடிதங்களை அவனே எழுதி அவர்களுடைய கையெழுத்துக்களையும் அப்படியே போட்டான். எல்லாம் டென்னஸி கவர்னருக்கு எழுதப்பட்டவை. ஒவ்வொன்றிலும் 'டேவிஸ் நிரபராதி. விடுதலை செய்யப்பட வேண்டும்' என்ற வேண்டுகோள். இவைகளையெல்லாம் சேர்த்து, டேவிஸின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சிபாரிசு செய்து எழுதும் கருணை மனுப்போல் ஒன்று! இந்த விடுதலை வேண்டுகோள் காகிதக் கத்தையை டேவிஸின் மற்றொரு ஜெயில் நண்பன் தபாலில் சேர்த்து விட்டான். கவர்னர் கையிலும் இந்தக் கருணை மனுக்கள் கிடைத்து விட்டன!


இரண்டு வார காலத்துக்குள்ளாகவே கவர்னரின் மன்னிப்புக் கடிதத்தையும் விடுதலை உத்தரவையும் எடுத்துக்கொண்டு தூதுவன் ஒருவன் வந்தான். சம்பிரதாயமாகச் சில 'டாக்குமெண்டு'களில் கையெழுத்திட டேவிஸைக் கவர்னரிடம் அழைத்துப் போகும் பொறுப்பும் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சிறைக்கு வெளியே வந்ததும் டேவிஸ் எப்படியோ அந்தத் தூதுவனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ரயிலேறித் தப்பிவிட்டான். கையில் ஒரு காசு கிடையாது. அதைப் பற்றி அவன் கவலைப்படவும் இல்லை! சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு பேசி நடிக்கும் சாமர்த்தியம்தான் அவனிடம் நிறைய இருந்ததே! பாவம்! கவர்னர் புக்கனனுக்குத் தாம் ஏமாந்த விஷயம் பிறகுதான் தெரிய வந்தது!

பல நாட்கள் கழித்து ஐம்பது செண்டுகள் கூடப் பெறாத ஒரு விஷயத்தில் டேவிஸ் பொய்க் கையெழுத்து இட்டதை ஒரு துப்பறிபவர் கண்டு அவனையும் அடையாளம் கண்டுகொண்டார். அவனைக் கண்காணித்துக் கொண்டே கவர்னர் புக்கனனுக்கு 'ஹென்றி டேவிஸைப் பிடித்துக் கொடுத்தால் என்ன சன்மானம்கொடுப்பீர்கள்?' என்று தந்தி கொடுத்தார். சூட்டோடு சூடாகப் பதில் வந்தது. 'தயவுசெய்து அவனைப் பிடிக்க வேண்டாம்! அவன்போன்ற மேதைகளைச் சிறையில் வைத்துக் கண்காணிக்க இயலாது' என்று கவர்னர் பதில் தந்தி கொடுத்திருந்தார்!

ஆதாரம்: 'கார்னெட்.'

மேற்கு ஜெர்மானிய நிபுணர்கள் ஓர் அற்புதமான சாதனையைப் புரிந்து வருகிறார்கள். ரைன் நதி மீதாக இவர்கள் அமைத்து வரும் பாலம் பூர்த்தியான பிறகு அதற்கு ஆற்றின் நடுவே தூணோ எந்த விதமான ஆதாரமோ இருக்காது என்பதுடன் அதனை உருவாக்கி வரும்போதுகூட ஆற்றுப் படுகையிலிருந்து சாரம் ஏதும் கட்டவில்லை! ஆற்றில் கப்பல் போக்குவரத்துப் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக ஆற்றங்கரைகளில் இரு புறங்களிலிருந்தும் ஆரம்பித்துப் பாலத்தைக் கட்டி வந்து நடுவே இணைத்துவிடப் போகிறார்கள். பாலத்தின் நீளம் 515 மீட்டர். (சுமார் 2.7 பர்லாங்) பாலத்தில் கார்கள் போய் வருவதுடன் அவை ஓர் ஓரமாக நிற்கவும் இடம் உண்டு. சைக்கிள்கள் செல்லத் தனிப்பாதையும் இருக்கிறது. 4000 டன் இரும்பை இதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்களாம்.




ஃ ஃ ஃ

வளரும் விஞ்ஞானம்

விஞ்ஞான ஆராய்ச்சிகள் வளர்ந்து வரும் வேகம் பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. ஏராளமான புதிய கண்டுபிடிப்புகள் பற்றி நாள்தோறும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. ஒரு ரசாயன நிபுணர், பிற விஞ்ஞானிகளின் நவீன ஆராய்ச்சிகள், அவர்கள் கண்ட முடிவுகள் ஆகியவை பற்றி உடனுக்குடன் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டுமானால் அவர் மாதா மாதம் 4500 அச்சடித்த பக்கங்களைப் படிக்க வேண்டும்! இன்னும் இருபது வருடங்களில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகும் என்று நம்பப்படுகிறது! விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் படிப்பதென்பது கதைகளையோ நாவல்களையோ படிப்பது போலவா என்ன? சராசரி மனிதனின் மூளை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கும் அதிகமாகவே புதிய ஆராய்ச்சிகள் பற்றி நூல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. பௌதிக விஞ்ஞானம், பொறி இயல் விஞ்ஞானம் ஆகியவற்றில் மட்டும் உலக முழுவதிலுமுள்ள 35,000 விஞ்ஞானப் பத்திரிகைகள் பத்து லட்சம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒவ்வொரு வருஷமும் வெளியிடுகின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதனால் ஒரு பெரிய சிக்கல் ஏற்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார் டாக்டர் வாரென் என்ற அமெரிக்கர். பலப் பல விஞ்ஞானிகள் ஏற்கனவே ஒருவர் ஆராய்ந்து முடிவு கண்ட விஷயங்களைப் பற்றியே — அவ்வாறு முடிவு காணப்பட்ட விவரம் இவர்களுக்குத் தெரிய வாததால் — தாங்களும் ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எத்தனை விஞ்ஞானிகளுடைய அருமையான நேரம் வீணாகிறது? அந்நேரத்தில் அவர்கள் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடலாமல்லவா? "யார் கண்டார்கள்? ஒருவேளை இத்தகைய லட்சக் கணக்கான விஞ்ஞானக் கட்டுரைகளுள் ஒன்றில் கான்ஸர் நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சிறந்த வழியைப் பற்றிக் கூடத் தகவல்கள் வெளியாகி யிருக்கலாம்" என்கிறார் டாக்டர் வாரென்.

ஃ ஃ ஃ

லட்சோப லட்சம் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பிற முக்கியமான நூல்களும் வெளிவந்துகொண்டே யிருக்கும் இந்நாளில் அவற்றையெல்லாம் எங்கே கொண்டு போய் அடுக்குவது? எப்படிப் பாதுகாப்பது என்ற பிரச்னை பெரிய தலைவேதனை அளிக்கக் கூடிய ஒன்றுதான். ஆராய்ச்சி நிலையங்கள், தொழிலகங்களில் இவற்றில் தேவையான எல்லா ஆராய்ச்சி நூல்களையும் வாங்கி வைத்து இடத்தை அடைப்பதற்குப் பதில் 'கோடாக்' கம்பெனியாரின் ஒரு கிளை ஸ்தாபனத்தின் தயாரிப்பான 'மைக்ரோ பிலிம்' இயந்திரத்தை வாங்கி வைத்துக் கொள்ளலாம். (கீழ்ப் படம்) இந்தச் சாதனம் பத்து லட்சம் அச்சடித்த பக்கங்களைச் சிறிய பிலிம் சுருளாகத் தன்னுள் புகைப்படமெடுத்து வைத்துக்கொள்கிறது. நமக்குத் தேவையான ஒரு பக்கத்தை அதே அளவுள்ள போட்டோ படமாக மூப்பது செகண்டுகளுக்குள் தருகிறது. அங்கிருந்தவாறே அப்பக்கத்தை ஒரு முறை படித்தால் மட்டும் போதும், கையோடு கொண்டுபோக வேண்டாமென்றால் அதற்கு ஒரு பட்டனை அழுத்த வேண்டியதுதான். எட்டே வினாடிகளுக்குள் குறிப்பிட்ட பக்கம் ஒரு திரையில் சினிமா படம்போல் தெரியும். சௌகரியமாய்ப் படிக்கலாம்.



லலிதா வீட்டு விருந்துக்குப் போக மாட்டேன் என்று பிச்சுமணி அடம் பிடித்ததும், ''ஏன்?'' என்று கூவிய மேஜர் தம் இரு முறுக்கு மீசைகளும் துப்பாக்கி முனைகள் போல் ஆடிப் பட படக்கத் தம் பேரனை அதிகக் கடூர மாக ஏறிட்டுப் பார்த்தார்.

''ஏனென்றால் எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான். அதற்கு மேல் இப் போது ஒன்றும் கேட்காதீர்கள்!''

''டேய், உன் மனத்தில் என்ன முட் டாள்தனமான யோசனை பண்ணி வைத் திருக்கிறாய்? இப்போதோ பின்னரோ அது எனக்குத் தெரிந்தேதான் தீர வேண்டியிருக்கும்!'' என்று மேஜர் அடியுண்ட புலிபோல் உறுமியவராய், ''சொல்லிவிடு, சொல்லிவிடு!'' என்று கூச்சலிட்டார்.

பிச்சுமணி சில கணங்கள் அமைதி யாகச் சிந்தனையில் இருந்துவிட்டு, ''தாத்தா! நான் விசேஷமாகச் சொல் லுவதற்கு ஒன்றுமில்லை!'' என்றான்.

''இல்லையா?'' என்று கொதித்த மேஜர், ''அப்படியானால் இப்போது யாரைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருக்கிறாய்? அதைச் சொல்லித் தொலை'' என்று அதட்டினார்.

பிச்சுமணி அமைதியாகத் தன் நாற் காலியின் மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, ''தாத்தா! இப்போது நான் சிந்திப்பதெல்லாம் சம்பத்குமா ரைப் பற்றித்தான்!'' என்று மெல்ல ஆரம்பித்தான்.

''அது யார்? சம்பத்குமார்?'' என்று கத்திய மேஜர், ''உன் கார் மெக்கா னிக்கா?'' என்று ருத்தலாகச் சீறினார்.

அந்த வர்ணனைகளை மேஜரால் தாங்க முடியவில்லை. தம் தலையை ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ''போதும், போதும்! அந்தச் சம்பத்குமாரைப் பற்றி இப்போது ஏன் நீ சிந்திக்கிறாய்?'' என்று அழாத குரலில் கேட்டார்.

''ஏனென்றால் தாத்தா, அவன் இப் போது லலிதாவின் வீட்டு டின்னருக் குப் போயிருக்கிறான்!''

''அதனால் என்ன? நீயும் அங்கே போனால் உன் சூட்டையும் கோட்டை யும் அவன் பறித்துக் கொண்டுவிடு வானா?'' என்று கேட்டார் மேஜர்.

''இல்லை, தாத்தா! சம்பத்குமார் ரொம்ப சங்கோஜி! நாமாகக் கொடுத் தாலொழிய அவனாக வாய் திறந்து ஒன்றும் கேட்க மாட்டான்!''

''அவன் அங்கே டின்னர் பிளேட் டுகள் பரிமாறப் போயிருக்கிறானா?''

''இல்லை தாத்தா!'' என்று சிணுங் கிய பிச்சுமணி, ''அவன் லலிதாவுக்குத் தாய் வழியில் ஏதோ சொந்தக்கார னாம்! அவனுக்கு.... அவனுக்கு...'' என்று மேலே சொல்லுவதற்குக் கூச் சப்படுபவன் போல் நெளிந்தான்.

''அவனுக்கு என்ன வந்து விட்டது?'' என்று மேஜர் பொறுமை இழந்த வராய் மறுபடியும் வெடித்தார்.

''அந்தச் சம்பத்குமாருக்கு... காத லாம் தாத்தா!'' என்று பிச்சுமணி ஒரு வழியாகச் சொல்லி முடித்தான்.

மேஜர் குண்டடி பட்டவர் போல் திடுக்கிட்டார்.

''தாத்தா! என்னிடம் சம்பத் குமார் என்னென்ன சொன்னான் தெரி யுமா?'' என்ற பிச்சுமணியின் உதட்டு

குண்டு மல்லிகை

''தாத்தா! நான் சொல்லுகிற சம் பத் குமாருக்குக் காரைப் பற்றி ஒன் றுமே தெரியாது. அவன் என் சிநேகி தன். ஒரு நாள் பீச்சில் கிடைத்தான். அவன் நல்லவன். என்னுடைய சூட் டையும் கோட்டையும் போட்டுக் கொண்டால் ரொம்ப அழகாக இருப் பான்'' என்று பிச்சுமணி வெகு ரசமாகச் சம்பத்குமாரின் சாமுத்திரிகா லட்சணங் களை வர்ணிக்க ஆரம்பித்து விட்டான்.

விளிம்புகளில் மெல்லியதொரு புன் முறுவல் விரிந்தது.

மேஜர் ராமதுரை தமக்குச் சவால் விடப் போகும் யாரோ எதிரியைப் போர்க்களத்தில் எதிர்நோக்குவதுபோல் நிமிர்ந்து பார்த்தார்.

''சம்பத்குமார் சொன்னதையெல் லாம் உங்களிடம் சொல்லட்டுமா,

தாத்தா?'' என்று பிச்சுமணி பவ்விய மாகக் கேட்டான்.


''சொல்லு! சொல்லு!'' என்று மேஜர் தம் பீரங்கியில் மருந்து கெட்டிப்பதற்கு அவகாசம் எடுத்துக்கொள்வதுபோல் சொன்னார்.

''அதையெல்லாம் உங்களிடம் சொல்ல எனக்கு வெட்கமாக இருக்கு, தாத்தா!'' என்று நாணத்தோடு நெளிந்த பிச்சுமணி பெண்மையின் சாகசங்களைப் பிரயோகித்துத் தன் தாத்தாவின் மீது வெற்றி கொள்ள முயன்றான்.

சிலர் பணம் என்பார்கள். சிலர் அந்தஸ்து என்பார்கள்; சிலர் புகழ் என்பார்கள். ஆனால் உண்மையிலே அதையெல்லாம் விட மிகப் பெரியது எது தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும். முட்டாள் தனம்! அதுதான் மிகப் பெரிது என்று நீ சொல்லப் போகிறாய்!''

அரு.ராமநாதன்



''இனிமேல் உனக்கென்னடா வெட்கம்? நிமிர்ந்தே செல்!''

''சரி, தாத்தா! உங்களையே என் அருமைச் சிநேகிதனாக நினைத்துக் கொண்டு சொல்கிறேன்!'' என்று பிச்சுமணி வெகு சகஜமாகவும் வெகு பிரியமாகவும் சொல்லிவிட்டு, ''இந்த உலகத்திலே மிகப்பெரியது எது தாத்தா?

''இல்லை, தாத்தா! காதல்தான் பெரிது! அதுதான் வாழ்க்கையிலே அதியற்புதமானது... என்கிறான் என் நண்பன்!''

''பீச்சிலே சுற்றுகிறவன் இதுவும் சொல்வான், இதுக்கு மேலேயும் சொல்வான்!''

''ஆமாம் தாத்தா! இதுக்கு மேலேயும் சொன்னான்! 'காதல் இன்றேல் சாதல்' என்று மகா கவி பாரதியார் சொல்லியிருக்கிறாராம்! அதற்கு உதாரணமாக அம்பிகாபதி அமராவதி,

லைலா மஜ்னு, ரோமியோ ஜூலியட் முதலான காதல் கதைகளையெல்லாம் அவன் சொன்னான். அதையெல்லாம் கேட்டால் உங்கள் உள்ளங்கூட உருகி அழுகை வந்துவிடும் தாத்தா! மேலும் அத்தகைய அமர காதலர்கள்தான் இலக்கியத்தில் இடம் பெறுவார்களாம்!''

''இந்தக் காலத்தில் அத்தகைய முட்டாள்களுக்குப் பிளாட்பாரத்தில் கூட இடம் கிடைக்காது!''

''காதலை உணர்ந்தவர்களுக்குத்தான் அது தெரியுமாம் தாத்தா! பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எட்டாம் எட்வர்டு இளவரசர் கூடக் காதலுக்காகத் தம் முடியையே துறந்தாராம்!''

''உன் நண்பனிடம் துறப்பதற்கு என்ன இருக்கிறது? முடி வெட்டிக் கொள்கிறதற்குக்கூட காசில்லாதவன்!''

''பணத்திலே என்ன இருக்கிறது?''

''பணம் இல்லாமல் கஷ்டப்படுகிற போதுதான் அதன் அருமை தெரியும்.''

''பாவம், என் நண்பன்... ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறானும்! அவளையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தவிக்கிறானும்...''

''அப்போ அவன் புத்திசாலிதான்! பணமில்லாத பயல் பணக்காரப் பெண்ணைப் பிடித்துக் கொள்ளப் பார்ப்பான்! பணமில்லாத பெண் பணக்காரப் பையனை இழுத்துக் கொள்ளப் பார்ப்பான்!'' என்று மேஜர் கூறிய போது தம் பேரன் இதுவரையில் குறிப்பிட்டு வந்த சம்பத்குமார் என்பது உமாவாகவே மாறி அவரது நெஞ்சை உறுத்தியது.

பிச்சுமணியோ தன் போக்கிலேயே ''தாத்தா! காதல் நிறைவேறாவிட்டால் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வானும். அந்த முடிவுக்கே வந்துவிட்டானும்!'' என்றான் மெல்ல.

''அப்போ அவன் மகா மடையன் தான்!'' என்று மேஜர் இரைந்தார்.

''போங்க, தாத்தா! இதெல்லாம் உங்களுக்குப் புரியாது!'' என்று பிச்சுமணி பிணங்கினான்.

''புரிகிறது, புரிகிறது!'' என்று தம் பல் இடுக்குகள் வழியே சொற்களைத் தள்ளிய மேஜர், ''டேய், பையா! இதுமாதிரி விஷயங்களை உன் நண்பன் சொன்னாலும் சரி, வேறு யார் சொல்லிக் கொடுத்தாலும் சரி, நீ புரிந்து கொள்ள வேண்டாம்!'' என்று விம்மாத குறையாய் உறுமினார்.

''எனக்கு வேறு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லையே!'' என்று அழுத்திச் சொன்ன பிச்சுமணி படபடத்தான்.

''சரி, சரி! லலிதாவின் வீட்டு டின்னருக்கு நீ போகாமல் இருப்பதற்கும் உன் கடற்கரை நண்பனின் கதைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று மேஜர் வெடுக்கெனக் கேட்டார்.

''அதைச் சொல்லட்டுமா தாத்தா?'' என்ற பிச்சுமணியின் கண்களில் விஷமத்தனமான ஓர் ஒளி நர்த்தனமாடியது.

''பிச்சுமணி, விளையாடாதே! எதையும் நன்றாக யோசித்துச் சொல்!''

''சரி, தாத்தா! சுற்றி வளைக்காமல் சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். நம் சம்பத்குமார் இருக்கிறானே...''

''அதுதான் ஒருவன் இருக்கிறானே... சொல்லு!''

''அவன் லலிதாவைக் காதலிக்கிறான். அவளையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தவிக்கிறான். அவள் இல்லாவிட்டால் தனக்கு வாழ்வே இல்லை என்கிறான். இதை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்று நூறு தடவை முயன்றானும்! ஆனால் அவனுக்கு வாய் வரவில்லையாம்!''

''அது எப்படி அவனுக்கு அவ்வளவு தூரம் நாக்கு நீளும்?''

''என்னிடம் யோசனை கேட்டான்.''

''நீ அவன் செவிட்டிலே பளாரென்று அறைந்தாயா?''

''இல்லை, தாத்தா! 'லலிதாவிடம் அதைச் சொல்லச் சங்கோஜப்படாதே, நீயும் அவளும்தான் பொருத்தமான ஜோடிகள் என்று சொன்னேன். அவன் லலிதாவிடம் மனம் திறந்து பேசினால் அவனை லலிதா ஏற்றுக் கொள்வாள் என்றும் சொன்னேன்.''

''அவள் ஏற்றுக்கொள்வதிருக்கட்டும். அவள் அப்பன் எப்படி அந்த வெத்து வேட்டுப் பயலை ஏற்றுக்கொள்வான்?'' என்று மேஜர் கத்தினார்.

''லலிதாவின் விருப்பப்படி தான் அவள் அப்பா நடப்பார்! அவர் பரந்த மனப்பான்மை உள்ளவர்!'' என்றான் பிச்சுமணி.

அவ்வளவுதான்; அதற்கு மேலும் மேஜர் ராமதுரையால் பொறுக்க முடியவில்லை.

''அட போக்கிரிப் பயலே!'' என்று அதிமூர்க்கத்தனமாகக் கூவிய மேஜர் ஆக்ரோஷத்தோடு மேஜை மீதிருந்த தண்ணீர் ஜாடியைத் தூக்கினார். அடுத்த கணம் அதிலுள்ள தண்ணீரையெல்லாம் பிச்சுமணியின் முகத்தின்மீது வீசிக் கொட்டியிருப்பார். அதற்குள் பிச்சுமணி மின்னலெனப் பாய்ந்து கிழவரின் மணிக்கட்டை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவரது மற்றொரு

கையையும் இன்னொரு கையால் பிடித்துத் தன் பலம் முழுவதையும் மாட்டி வளைத்து முறுக்கினான்.

''வேண்டாம் தாத்தா! தண்ணீரைக் கொட்டினால் எனக்கு ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும்!'' என்றும் அவன் முனகினான்.

தாத்தாவும் பேரனும் ஒருவர் விழிகளை ஒருவர் ஊடுருவிப் பார்த்தார்கள். இளமையின் உத்வேகமான பலத்தைச் சமாளிக்க முடியாமல் முதுமை திணறியது. ''முரட்டுப் பயலே! முரட்டுப் பயலே!'' என்று மேஜர் முனகிக் கொண்டு தம் பேரனிடமிருந்து தம் கைகளை விடுவித்துக் கொள்ள மேலும் போராட முடியாமல் நெளிந்தார்.

இருபது விநாடிகள் கழித்த பிறகு, ''விடுடா, கையை விடுடா!'' என்று மேஜர் பிளிறிய பிறகே பிச்சுமணி மெல்லத் தன் கைகளை அவர் மீதிருந்து எடுத்தான்.

மேஜரும் தம் கையிலுள்ள தண்ணீர் ஜாடியை அப்படியே தரையில் வீசி எறிந்தார். அது 'டங்'கென்று விழுந்து உடைந்து கண்ணாடித் துண்டுகள் நாலாபுறமும் சிதறின. அது, மேஜரின் ஆகாசக் கோட்டைகள் அனைத்தும் சிதறி விழுந்தது போலவே, தம் பேரனின் எதிர் காலம் பற்றி அவர் கண்ட கனவுகள் அனைத்தும் உடைந்து கிடப்பது போலவே அதிகோரமாகப் பிரமையூட்டியது. அந்தக் கண்ணாடித் துண்டுகளையே மேஜர் வெறித்துப் பார்த்தபடி பிரேதம் போல் அசைவற்று நின்றார்.

பிச்சுமணி சிறிதும் பரபரப்படையாமல், சிறிதும் தயங்காமல் அவர் எதிரில் வந்து நின்று தீர்மானமான குரலில் மிகவும் நிதானமாக ''தாத்தா! நான் லலிதாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை!'' என்றான்.

''ஏன்?'' என்று மேஜர் எரிமலை போல் சீறி நிமிர்ந்தார்.

''எனக்கும் லலிதாவுக்கும் பொருத்தமில்லை!''

''பொருத்தத்தை நீ என்ன கண்டாய்? சின்னப் பயல்!... உங்கள் இருவருக்கும் சகல விதமான பொருத்தங்களும் இருக்கின்றன என்றுதான் நானும் அவன் அப்பாவும் ஒரு முடிவு செய்தோம்.''

''முதலில் மனப் பொருத்தம்தான் முக்கியம் தாத்தா! நான் லலிதாவைக் கல்யாணம்செய்து கொண்டால் எங்கள் வாழ்க்கை சோபிக்காது. அதில் அழுகையைத் தவிர சந்தோஷமே இருக்காது. இதை உணர்ந்து கொள்ள எனக்குப் புத்தி இருக்கிறது.''

குட்டிக் கதை

குற்றம் குற்றமே

அவர் தமது சொந்தப் பண்ணையிலிருந்த தோட்டத்தில் விதை விதைப்பதற்காக மண் வெட்டிக் கிளறிக் கொண்டிருந்தார். பண்ணையின் 'கேட்' அரைகுறையாகத் திறந்திருந்தது. திடீரென்று ஒரு காளை மாடு உறுமிக் கொண்டு, கேட்டை முட்டித்தள்ளித் திறந்து உள்ளே வந்து விட்டது. அவர் அதைக் கண்டு மிரண்டு விட்டார். காளையைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அவருடைய உடல் ஆடியது. குலை நடுக்கம் கண்டு விட்டது. உடனே ஓட ஆரம்பித்து விட்டார். அவர் ஓடுவதைக் கண்ட காளை அவரைத் துரத்த ஆரம்பித்து விட்டது. பண்ணைத் தோட்டம் துவம்சமாகி விட்டது. செடிகொடிகள் எல்லாம் பாழ்! அவர் பண்ணையை விட்டு வெளியே ஓடவோ வீட்டுக்குள் புகுந்துகொள்ளவோ அது விடவில்லை. மடக்கி மடக்கித் துரத்திக் கொண்டிருந்தது. கடைசியில் எதிர் பார்த்தது நடந்து விட்டது.

அந்தோ பரிதாபம்! காளை மாடு முட்டித் தூக்கி எறிந்து விட்டது அவரை. செத்தே போய் விட்டார் பண்ணையார்.

அங்கே பெருங் கூட்டம் கூடி விட்டது. கூட்டத்தைக் கண்டதும் காளை பயந்து போய் ஓரிடத்தில் சற்று நிற்பதும் ஜனங்களைப் பார்த்து உறுமுவதும் பிறகு கொஞ்ச தூரம் ஓடுவதுமாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் போலீஸ் வந்து விட்டது. காளை மாட்டின் சொந்தக்காரரைக் கண்டுபிடித்து அதைப் பிடித்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் செய்தார்.

காளை மாட்டின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கொலைக் குற்றம்! நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்துக் காளை மாட்டுக்கு மரண தண்டனை விதித்தார் நீதிபதி. காளையைத் தூக்கிலிட்டுத் தண்டனையும் நிறைவேற்றப்பட்டது.

மனிதன் குற்றம் புரிந்தால் மட்டும்தான் வழக்கு, விசாரணை, தண்டனை என்பதில்லை. மிருகங்கள் குற்றம் புரிந்தாலும் வழக்குத் தொடர்ந்து தண்டனை அடைந்திருக்கின்றன என்பதற்கு மேற்கண்ட உண்மைக் கதையும் ஓர் உதாரணம். அது பிரான்ஸ் தேசத்தில் நடந்தது.



இதே போல் ஜூரிச்சில் ஓர் ஓநாய் மீதும் ஒரு பன்றி மீதும் பிரேஸிலில் எறும்புகள் மீதும் ஒரு குருவியின் மீதும் வழக்குத் தொடரப்பட்டு அவையெல்லாம் தண்டனைக்குள்ளாகியிருக்கின்றன !

''புத்தி! உனக்கா புத்தி இருக்கிறது? நீ...நீ மகா மடப்பயல்! ஆனால் என்னிடம் இப்படியெல்லாம் பேச உனக்கு எங்கிருந்து துணிச்சல் வந்தது? யார் சொல்லிக் கொடுத்து இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' என்று மேஜர் சூறைக் காற்றைப் போல் வார்த்தைகளை வீசினார்.

''யாரும் எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. நானாகத்தான் சொல்கிறேன்....''

''அடுத்தபடியாக நீ லலிதாவைக் காதலிக்கவில்லை என்றும் சொல்லப் போகிறாயோ?'' என்று மேஜர் பொருமினார். காதல் என்ற வார்த்தையில் உள்ள கசப்பு கிழவரின் உடம்பை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வெட வெட வென்று ஆட வைத்தது. பிச்சுமணியின் தகப்பனும் தான் பார்த்த பெண்ணைக் காதலிக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டுத்தான் ஒரு நாடகக்காரியின் பின்னால் ஓடி உருத் தெரியாமல் அழிந்து போனான். அதுபோல் பிச்சுமணியும் லலிதாவைக் காதலிக்கவில்லை என்று சொல்லிவிட்டு வாத்தியாரம்மாவின் பின்னால் ஓடி உருத் தெரியாமல் அழிந்துவிடுவானோ? பழைய ஞாபகமும் புதிய பயமும் கிழவரின் அனுபவ விழிகளில் நரகாவஸ்தைகளாகக் கிளர்ந்தெழ அந்த விழிகளாலேயே அவர் பிச்சுமணியை ஊடுருவிப் பார்த்தார்.

அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் பிச்சுமணி தன் விழிகளை வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

பிறகு அவன் தலை குனிந்தபடி, தாழ்ந்த குரலில், மிகவும் மிருதுவாக, ''ஆமாம் தாத்தா! நான் லலிதாவைக் காதலிக்கவில்லை!'' என்றான்.

''காதலாவது கத்திரிக்காயாவது!'' என்று மேஜையின் மீது ஓங்கி ஒரு குத்து விட்ட மேஜர் இடி முழக்கம் போன்ற குரலிலே, ''காதல்! காதல்! அதை நீயும் சொல்லி என்னைச் சாகடிக்கப் பார்க்கிறாயா?'' என்று பொருமினார்.

''தாத்தா! என்மீது கோபப்படாதீர்கள். என்னால் போலித்தனமான வாழ்க்கை நடத்த முடியாது! நான் லலிதாவைக் கல்யாணம் செய்து கொண்டால் அது நரக வாழ்க்கையாகிவிடும்! ஆமாம், இதயம் இல்லாத போது அந்த வாழ்க்கை நரகாவஸ்தையாகவே பெருகிக் கொண்டிருக்கும்! அதைத் தாங்க முடியாமல் என் கைத் துப்பாக்கியை எடுத்து என்னைச் சுட்டுக் கொள்வேன். லலிதாவும் உங்கள் பெரிய துப்பாக்கியாலேயே தன்னைச் சுட்டுக் கொள்வாள்! அதைத்தான் காண விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் என்னை வளர்த்த கடமைக்காக, நீங்கள் என்னிடம் காட்டிய அன்புக்கெல்லாம் பிரதியாக நான் லலிதாவைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். ஆனால் கல்யாணம் ஆன மறுநாளே நான் பிணமாகிவிடுவேன்! அதை உங்களாலோ லலிதாவின் அப்பாவாலோ தாங்கிக் கொள்ள முடியுமா? அதை முதலில் யோசித்துப் பாருங்கள்!''

கிழவரின் முறுக்கேறிய நாடிகளெல்லாம் தளர்ந்து விட்டன. ஆனாலும் கடைசிக் கட்டத்தில் கடைசி அஸ்திரங்களை அவநம்பிக்கையுடன் பிரயோகித்துப் பார்க்க முயல்வதுபோலவே அவர் பேசலானார்.

''ஆனால் நீயும் லலிதாவும் கன்யாகுமரியில்....''

''ஆமாம். ஒன்றாகச் சுற்றித் திரிந்தோம். உங்கள் எதிரிலேயே வேடிக்கை வேடிக்கையாகப் பேசிச் சிரித்தோம். ஆனால் அதெல்லாம் காதலல்ல. இரண்டு ஆண் நண்பர்கள் பேசிப் பழகுவது போல்தான் நாங்கள் பேசினோம்.''

''ஆனால் அவள் உன்னை விரும்புகிறாளே?...''

''உங்கள் தூண்டுதலின் பேரிலோ, அவள் அப்பாவின் தூண்டுதலின் பேரிலோ அவள் என்னை விரும்பியிருக்கலாம்! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளவும் சம்மதித்திருக்கலாம்! ஆனால் அந்த விருப்பம் மட்டும் காதலாகிவிட முடியாது! அவள் சம்பத்குமாரோடு பேசிப் பழகினால் அவளுடைய மனமும் மாறிவிடும்.''

''மனம் மாறலாம். ஆனால் வார்த்தை மாற முடியுமா? நான் மருதநாயகத்திடம் வாக்குக் கொடுத்திருக்கிறேனே...?''

''உங்களால் கொடுத்த வாக்கை மீற முடியாது. அதை விடத் துப்பாக்கியால் சுட்டுக் கொள்வதே மேல் என்று நினைப்பீர்கள். அது எனக்குத் தெரியும்!''

''தெரிந்துமா அதை எதிர்பார்க்கிறாய்? அப்படியானால் அதை உன் கையாலேயே செய்து விடு!''

''தாத்தா; நீங்கள் வாக்கு மீற வேண்டாம். ஆனால் அவர்கள்...'' என்று ஏதோ சொல்ல வந்த பிச்சுமணி அதைத் தன் மனத்துக்குள்ளேயே அடக்கிக் கொண்டு, ''சரி, தாத்தா! நான் இப்போது டின்னருக்குப் போகிறேன்!'' என்றான். (தொடரும்)

மறவாதீர்கள்!

நியூ யார்க்குக்கு

வாரம் 7 முறை

வசதியான விமான சர்வீஸ்



இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா
இங்கிலாந்து - அமெரிக்கா

ஏயர்-இந்தியா



மாமன் மகள்

கே.வி

''டமாரு''வின் வெண் மணற் பரப்பில் மல்லாந்து படுத்தவாறு ஒவ்வொரு பட்டாணியாக மேலே தூக்கிப் போட்டுக் கீழே விழும்போது வாயால் பிடித்துப் பிடித்து ரசித்துக் கொண்டிருந்தான் மாதவன். அவன் அங்கங்கள் தானாக இயங்கின என்ற போதும், மனம் மட்டும் வேறு ஏதோ ஒரு திக்கில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. தனியாக இப்படி எத்தனை நாள் பட்டாணிக்கடலையைக் கொறித்துக் கொண்டிருப்பது என்ற வினா அவன் மனத்தினுள் எழுந்து இப்போது ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. அந்தக் காதலர் பாதையிலே ஜோடி ஜோடியாகப் போகும் 'கொடுத்து வைத்தவர்களை'ப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு அடிக்கடி எழுந்தது.

இந்த வீட்டுக்கு விளக்கேற்ற ஒரு மருமகள் வேண்டாமா?..... அப்படி அவனைக் கேட்க அவன் அம்மாவும் இல்லை. அப்படிவருபவள் விளக்கேற்ற தனியாக வீடும் அவனுக்கு இல்லை. மாமா வேதாசலத்தின் நயலில் சென்ற பதினைந்து வருஷங்களை எப்படியோ ஓட்டி முடித்துவிட்டான்.

பதினைந்து வருடங்கள்!... நாட்கள் பறந்துதான் போகின்றன. 'ஸெலூலாய்ட்' பொம்மையை இடுப்பில் வைத்துக் கொண்டு 'என் பாப்பா, என் பாப்பா' என்று அன்று கொஞ்சிக் கொண்டிருந்த அந்தப் பிரபாகூட இன்று பி. யூ: ஸி: படித்துக்கொண்டிருக்கிறாள்.

படிக்க வைத்தாரே அந்த மாமா, அவருக்குக் கொஞ்சம் உலக அறிவு இருக்கவேண்டும்!...: படிக்க வைத்த பின் மகளை வேலைக்கா அனுப்பப் போகிறார்? தம் பிள்ளைக்கும் மேலாக வளர்த்த ஒரு மருமகனுக்குக் காலா காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்துவிட வேண்டாமா? சிரமப் படக் கூடத் தேவையில்லை... தாமே தங்கச் சிலை போல் ஒரு பெண்ணைப் பெற்று வைத்திருக்கிறார்! அவர் தான் ஆண் பிள்ளை, தெரியாதவராக இருக்கிறார் — அந்தப் பெண்ணைப் பெற்ற தாயார்—பெயரும் தாயாரம்மாள் தான், மூச்சு விடவேண்டுமே!

அந்தப் பிரபாவை நேரடியாகக் கேட்டுவிட்டால்?

மாதவனுக்கு எப்படிக் கேட்பது என்பதுதான் புரியவில்லை. ஒரே வீட்டில் அவர்கள் இருந்தாலும் இருவரும் தனிமையில் சந்திக்க வாய்ப்பு இருப்பதில்லை. எப்போது அவளைத் தனியாகச் சந்தித்து, அவளிடம் எப்படி இந்த விஷயத்தை விசாரிப்பது?

தூக்கிப் போட்ட அந்தப் பட்டாணி வாயிலும் விழவில்லை. மணலிலும் போகவில்லை. வளையல் அணிந்த கை ஒன்று அதைத் தட்டிப் பறித்திருந்தது.

''நீயா, பிரபா?'' என்று கேட்டான் மாதவன் ஆச்சரியத்துடன். கடவுள் இவ்வளவு சீக்கிரம் அவன் பிரார்த்தனைக்கு இரங்குவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''என்ன அத்தான்!.... இங்கே மல்லாந்து கொண்டு குருட்டு யோசனை பண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள்?'' என்று அவனை அன்பாக விசாரித்தாள் பிரபா.

''எந்த மடப்பயல் சொன்னான் குருட்டு யோசனை என்று? இரண்டு விழிகளையும் அகலமாகத் திறந்து கொண்டாக்கும் யோசனை செய்து கொண்டிருக்கிறேன்!.....''

''ஆமாம்! இங்கே யாருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''உனக்குத் தெரியத்தான் வேண்டுமோ?'' என்று கேட்டான் மாதவன் துடுக்காக.

''ஆமாம்!.....'' என்று சொல்லியபடி அவன் அருகிலே அமர்ந்தாள்.

''ஒரு பெண்ணுக்காக என்றுதான் வைத்துக் கொள்!'' சட்டைக் காலரின் நுனியில் ஒட்டிக் கொண்டிருந்த பட்டாணித் தோலை அவன் கண்டு விரல் 'ஸ்டைலாக'த் தட்டி விட்டது.

''யார் அவள்?.... எத்தனை நாட்களாகப் பழக்கம்? என்று பிரபா அவசரம் அவசரமாகக் கேட்டாள்.

''அவளைப் பதினைந்து வருஷங்களாகத் தெரியும். அழகுப் பதுமை ஆடி வருவது போல் அவள் நடப்பாள். என் மனசுக்குள் புகுந்து கொண்டு என்னை ஆட்டி வைக்கிறாள். கண்ணைத் திறந்தாலும் மூடினாலும்....''

''போதும், போதும்! அப்பா உங்களை ஒன்றும் தெரியாத அப்பாவி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்!......''

''அப்பா மட்டும்தானா?....'' என்று கேட்டான் மாதவன். பிரபா விழித்தாள்.

படுத்திருந்த மாதவன் 'சட்'டென்று எழுந்து உட்கார்ந்தான்.

''நீயும்தான் எனக்கு மரக் கட்டை, இருதயம், கான்கிரீட் மூளை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் எண்ணத்தை மாற்றிக் கொள்!... பிரபா! இந்த உலகத்தில் நான் எந்தப் பெண்ணை யாவது நினைத்தேன், நினைக்கிறேன், நினைக்கப் போகிறேன் என்றால் அவள் நீதான்.....உன் சம்மதத்தைப் புரிந்துகொண்டு அப்புறம் மாமாவிடம் சொல்ல வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன்!''

பிரபாவுக்கு அவன் பேச்சு விளங்கியது. அவள் ஆடாமல் அசையாமல் அப்படியே சிலையானாள்.

''என்ன பிரபா!... சொல்... ஏன் அப்படிப் பார்க்கிறாய்?'' என்று பதறினான் மாதவன்.

பிரபா நீண்ட பெருமூச்சு ஒன்றை உதிர்த்தாள்; காதலி விடக்கூடிய அன்புப் பெருமூச்சு, ஆசைப் பெருமூச்சு, அழகுப் பெருமூச்சு இல்லை அது. அவள் பவழ வாய் குவிந்து மீறந்தியது கீழ்க்கண்டவாறு:

"அத்தான்.... எனக்கு அக்கா இல்லே! தங்கை இல்லே...... அண்ணனும் கிடையாது. தம்பியும் கிடையாது...... எனக்கு மூணு வயசு ஆகும்போது என் வீட்டுக்கு நீங்கள் வந்தீர்கள்......அன்று முதல் இன்று வரையில் எனக்குக் கடவுளாகக் கொடுத்த தமையனாகத்தான் உங்களை நினைத்திருக்கிறேன்.... அத்தான் என்று கூப்பிட்டிருக்கிறேன். ஆனால் அம்மாதிரி என் கற்பனையில்கூட உங்களை நான் நினைத்துப் பார்க்கவில்லையே!...."

மாதவன் விழிகள் உடனே ஏமாற்றத்தில் தொங்கிப் போயின. ஒரு கணம் தாமதித்தான்; மறு வார்த்தை பேசாமல் அங்கிருந்து எழுந்து போனான்.

பிரபா, "அத்தான்.... அத்தான்....!" என்று கூப்பிட்டது அவன் காதுகளில் விழுந்தும்கூடத் திரும்பாமலே போனான்.

ஒரு வாரம் சென்ற பிறகு கூடப் பிரபாவை மாதவன் மீண்டும் பார்க்க முடியவில்லை. ஞாயிற்றுக் கிழமை பகல் பொழுதை ஓட்ட மிகவும் சிரமமாக இருந்தது. பிரபாவின் அறைக்குள் தன்னையும் அறியாமல் அவன் நுழைந்தான். மேஜையின் மேல் கிடந்த ஒரு புஸ்தகத்தை அலட்சியமாகப் புரட்டினான். அந்த வேகத்தில் வேறு ஒரு புஸ்தகம் கீழே விழுந்தது. அதனுள்ளே.......

"அன்புள்ள பிரபாவுக்கு.....

இன்று வகுப்பில் தமிழாசிரியர் சீதையும் இராமனும் ஒருவரை யொருவர் முதலில் சந்தித்த இடத்தை நன்கு விவரித்தார். நாம் முதலில் சந்தித்த இடம் உனக்கு நிச்சயம் மறந்திருக்காது...அன்று



நாம் எந்த நிலையில் இருந்தோமோ—நம் நட்பு வரை அது உதவியது. அது என்றும் வளர வேண்டும், மறையக் கூடாது என்பது தான் என் அவா. உன்னை மீண்டும் நான் சந்திக்க விரும்புகிறேன். நாளைக் கல்லூரி முடிந்த பிறகு கடற்கரையில் வழக்கமான இடத்துக்கு வா ! மறக்காமல் வா;

உன் நிலைவான
ஆனந்த்''

''ஓஹோ!..... இதுதான் விஷயமா?..... வேறு ஒருவன் உன் மனத்தில் இருப்பதால் தான் நான் அண்ணனாக மாறி விட்டேனா? என் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டாய் அல்லவா ?..... உனக்கு ஒரு வழி வைக்கிறேன்.....'' என்று கறுவிக் கொண்டான் மாதவன்.

மாலையில் வேதாசலம் வந்ததும் தானாக அவரிடம் பேச்சுக் கொடுத்தான் மாதவன். ''என்ன மாமா, பிரபா இன்னும் குழந்தை என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?''

''நீயே கேளடா மாதவா!..... நான் ஆயிரம் முறை சொல்லி ஆகிவிட்டது...'' என்றாள் தாயாரம்மாள் வெற்றிலையை மென்றவாறு.

''ஆயிரத்தோராவது முறை நீ கேட்கவேண்டாம் என்றுதான் நாளைக்குப் பெண்ணைப் பார்க்கப் பிள்ளையை வரச் சொல்லி யிருக்கிறேன்.....!'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் வேதாசலம்.

''இப்படித் திடீரென்று சொன்னால் எப்படி?'' என்றாள் பெற்றவள்.

''நாளைக்குப் பெண்ணைப் பார்க்கத்தானே வருகிறார்கள். கல்யாணம் நாளைக்கு நடக்கவில்லையே..... ஒரு நாள் அவகாசம் இதற்குப் போதும்!'' என்று அடித்துச் சொன்னார் வேதாசலம்.

''அப்படியானால் நான் ஆபீசுக்கு லீவு போட்டு விடுகிறேன்!'' என்றான் மாதவன்.

''உனக்கில்லேடா கல்யாணம், பிரபாவுக்கு!'' என்று ஞாபகப்படுத்தினார் வேதாசலம்.

''உங்களுக்குக் கூடமாட உதவி.....'' என்று முன்வந்தான் மாதவன்.

உதவி?... யாருக்கு உதவி.....? பிரபா! இந்த வரன் என்ன?..... இன்னும் யார் வேண்டுமானாலும் வரட்டும்!..... யார் உன் கழுத்திலே தாலியைக் கட்டுகிறான்?..... நான் பார்த்து விடுகிறேன்!....

மாதவனின் கண்களில் பழி வாங்கும் வெறி தெறித்தது.

பெண்ணைப் பார்க்க வந்தவர்களுக்குப் பிரபாவை மிகவும் பிடித்து விட்டது. பிரபாவும் அவர்களை வணங்கி விட்டு உள்ளே போய் விட்டாள். அவர்கள் முகத்தில் திருப்தி பரவியது. மாதவன் ஓடி ஓடி உபசாரம் செய்தான்.

''எங்கள் பிரபா கையெழுத்தை நீங்கள் பார்த்ததில்லையே..... முத்து முத்தாக இருக்கும்.....'' என்று தொடங்கினான் மாதவன்.

''அதெல்லாம் எதற்கு?'' என்றார் பிள்ளையைப் பெற்றவர்.

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்; மணிகளைக் கோத்தாற் போல் குண்டு குண்டாக...... ஒரு நிமிஷம் இருங்கள்....''

மாடிக்குப் போய்த் தான் முன்பு பார்த்த அதே புஸ்தகத்தைக் கொண்டு வந்து பிள்ளையிடம் கொடுத்தான். அிரத்தையாக அதைப் பிரித்தபோது கடிதம் ஒன்று கீழே விழுந்தது. குனிந்து எடுத்த பிள்ளை அதைப் பிரித்துப் பார்த்தான். அடியில் போட்டிருந்த கையெழுத்து அவன் ஆவலைத் தூண்டியிருக்க வேண்டும்.

பெண் பார்க்க வந்த பிள்ளை கடிதத்தைப் படிக்கப் படிக்க மாதவனின் முகம் மேலும் மேலும் மலர்ந்தது. வந்தவனின் முகமோ செம்மையாக மாறியது. இருந்த இடத்தை விட்டுச் சரேலென்று எழுந்தான்.

''வாருங்கள், அப்பா! போகலாம்....!'' என்று தன் தந்தையை அழைத்தான்.


''என்ன ஸார்!.... என்ன?....'' என்று பதறினது போல் நடித்தான் மாதவன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டே.

''உங்கள் மாமா பெண் தானாக மாப்பிள்ளை தேடிக் கொண்டு விட்டாள். இதோ பாரும் !''

மாதவனின் நீண்ட கரத்தைத் தட்டி விட்ட வேதாசலம் அந்தக் கடிதத்தைத் தானே எடுத்துப் படித்தார். அவர் படிக்கும் போதே வந்தவர்கள் வெளியே நடந்தார்கள். அவர் கண்களில் ஒரு ரத்தச் சிவப்புப்

ஓட்டுக் கூரையை அடுத்த ஆண்டு எதிர்பார்க்கலாமா?

பேஷாய்! விவேகமுள்ள விவசாயி வளமுள்ள வருங்காலத்துக்காகப் பாடுபடுகிறான். நிலத்தை நல்முறையில் பயன்படுத்துகிறான். விவசாயத்துக்கு நவீன முறைகளையே நம்புகிறான் அவன். சிறந்த விதைகளைப் பயிரிடுவதோடு, ராலீஸ் தயாரிக்கும் உரங்களையும் உபயோகிக்கிறான் என்பதையும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஆம், ராலீஸ் 'மரம் மார்க்' உரங்கள் அமோக விளைச்சலைத் தருகின்றன. வளம் மேலும் பெருக, டாடா - பைஸன் பூச்சி மருந்துகளைக்கொண்டு பயிரைப் பாதுகாருங்கள். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன.



TATA-FISON
PESTICIDES

RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் (இந்தியா) லிமிடெட்

இந்தியா முழுதும்

BI-RF-66 TAM

பிறந்தது. உதடுகள் துடித்த வேகத்தில் அவருடைய மீசை பயங்கரமாக ஆடியது.

''பி.....ர.....பா!....'' என்று வீடே இடியும்படி கத்தினார் வேதாசலம். அவள் உள்ளேயிருந்து ஓடி வந்தாள்.

'' இந்தப் புத்தகம் உன்னுடையது தானே....!'' என்று அந்தப் புத்தகத்தை அவளிடம் நீட்டிக் காண்பித்தார். 'ஆமாம்' என்று தலையசைத்தாள் பிரபா, ஒன்றும் விளங்காதவள் போல. தம் இடுப்பிலிருந்த தோல் 'பெல்'டை வேதாசலம் மறுகணம் அவிழ்த்தார். யாரும் எதிர்பார்க்காத வேகத்தில் மாதவன் பிரமித்து நிற்க — அந்தத் தோல் கச்சை பிரபாவின் மேல் பாய்ந்தது.

அவள் துடித்துப் போனாள். ''ஐயோ!.... அம்மா.....!'' என்று அலறினாள். தாயாரம்மாளும் உடன் அலறினாள்.

அந்த ஒரு கணம்!...: பழி வாங்க நினைத்த மாதவனின் சிந்தையிலே எரிமலையே கொந்தளித்தது. துடித்துக் கொண்டிருந்த பிரபாவின் விம்மல் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. கூடப் பழகிய பாசம் பழி உணர்ச்சியை வெட்டிப் புதைத்தது. என்ன வீம்பு அவன் கொண்டிருந்தாலும் பிரபா துயரப்படுவது அவனுக்குத் தாங்க முடியவில்லை. மீண்டும் ஓங்கி உயர்ந்த அந்த தோல்க் கச்சைக்குத் தன்னையே இலக்காக்கிக் கொண்டான்.

''நகர்ந்து போடா!.... அவளைக் கொன்றுவிட்டுத்தான் மறு வேலை.....'' என்று கர்ஜித்தார் வேதாசலம்.

''தண்டிக்கப்பட வேண்டியது நான்தான் மாமா!'' என்றான் மாதவன் தயங்காமல்.

''என்ன பிதற்றுகிறாய்?.....''

''இந்தக் கடிதம் நான் எழுதினதுதான்....: எங்கே பிரபா எனக்குக் கிட்டாமல் போய் விடுவாளோ என்று எழுந்த ஆத்திரத்தில் இந்தத் திருமணத்தை நிறுத்த நான்தான் அதை எழுதி வைத்தேன்.... அவள் எதுவும் அறிய மாட்டாள்!'' என்றான் நிதானமாக.

''அடப் பாவி!..... நீயா....?'' என்றார் வேதாசலம்.

உடலெல்லாம் நெருப்புப் பட்டது போல் தகிக்க மாதவன் தலையைக் குனிந்தபடி நின்று கொண்டிருந்தான்.

''போடா!..... வெளியே போடா!.... இங்கே ஒரு கொலை விழுவதற்கு முன்னால் தொலைந்து போ!.... சீ!.... இதற்கா உன்னை வளர்த்தேன்?.....'' சீறினார் வேதாசலம்.

மௌனமாகத் தெரு வாயிலை நோக்கி நடந்தான் மாதவன். அவன் வாயிற்படியைக் கூடக் கடந்திருக்க மாட்டான்.

''நில்லுங்கள்!.....'' என்றாள் பிரபா.

''அவனை ஏன் கூப்பிடுகிறாய்?'' என்று தடுத்தார் வேதாசலம்.

''இந்தக் கடிதம் அவர் எழுதவில்லை!....'' என்றாள் அவள் பிடிவாதமாக. அப்போது தான் இந்த விபரீதத்துக்குக் காரணமான கடிதத்தைப் படித்துப் பார்த்திருந்தாள்.

''என்ன விளையாட்டு இது? யார்தான் எழுதினார்கள் இந்தக் கடிதத்தை!....'' என்று உறுமினார் வேதாசலம்.



'' இனிமே நாம் ஜோடியா சினிமாவுக்குப் போகணும்னு இன்னிக்குச் செஞ்சாப் போலே நீ ஒரு சிநேகிதியைக் கூட்டிண்டு வந்துடு. அப்பத்தான் உன் தொணதொணப்பு இல்லாமெ நிம்மதியா என்னாலே படம் பார்க்க முடியும்.''

''ஹூம்... போன மாதம் எங்கள் கல்லூரியில் சீதா கல்யாணம் நாட்டிய நாடகம் போட வில்லையா?.... அதில் ராமனாக நடித்த ஆனந்தி எழுதிய கடிதம்தான் இது. 'ஆனந்த்' என்று அவள் கையெழுத்திடப் போய், எனக்கு ஒரு 'பெல்ட்' அடி அத்தானுக்கு...''

கண்கள் விரிய அவளையே பார்த்துக் கொண்டிருந்த மாதவன் மீண்டும் வெளியே போகத் திரும்பினான்.

''அடச் சீ!..... வாடா, உள்ளே! நான் தான் புத்தி கெட்டுப் போய் வேறு இடம் பார்த்தால், இதோ இருக்கிறேன் முறைப் பையன் என்று நினைவுபடுத்த வேண்டாமா? ஹூம்! சீக்கிரத்தில் ஜமாய்த்து விடலாம்!''

வேதாசலம் தாயாரம்மாளுடன் மாடிக்குப் போனதும் மாதவன் பிரபாவை நெருங்கினான்.

''பிரபா! ஏன் மரம் மாதிரி நிற்கிறாய்? என்னிடம் அன்று சொன்னதை இன்று உன் அப்பாவிடம் சொல்வதுதானே ?''

''என்னுடைய அருமையான அத்தானே... முதல் நாள் பார்த்த கதாநாயகி சொன்ன வசனத்தை அப்படியே நான் ஒப்பித்தவுடன் நீங்கள் நம்பி ஓடி வந்து விட்டீர்கள். எப்படிக் கூப்பிட்டுப் பார்த்தும் நீங்கள் திரும்பவில்லை. ஏமாறச் சொன்னது நானா? என் மேல் கோபம்தானா ?.....''

''கோபம்தான்!..... இந்த மாப்பிள்ளைப் பையன் பின் எதற்கு வந்தான்? அவனுக்கு எதற்கு இத்தனை உபசாரம்?''

''அப்பா திடீரென்று ஏற்பாடு செய்து விட்டார். எப்படி நிறுத்துவதாம்?:... போகிறது...... உங்களுக்கு என்மேல் அத்தனை ஆசையா?...: யாரோ எழுதிய கடிதத்தை நீங்கள் எழுதியதாக ஒத்துக் கொண்டீர்களே !''

அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். பழி வாங்க நினைத்ததைச் சொல்லிப் பைத்தியக்காரனாக அவன் அவ்வளவு புத்தியில்லாதவனா?

துக்கடா

புதிய பிரதம மந்திரி லால் பகதூர் சாஸ்திரிஜி, புதுடெல்லி ஜன்பத் வீதியில் ஒரு புது வீட்டில் வசிக்கப் போகிறார். தற்சமயம் அதில் குடியிருந்து வரும் நியூஜிலந்து ஹை கமிஷனர், வீட்டுக் கண்ட்ரோலரிடம் வழக்குத் தொடராமல் அதைக் காலி செய்துவிட ஒப்புக்கொண்டிருக்கிறாராம்!

அந்த வீடு, தற்சமயம் பிரதம மந்திரி வசித்து வரும் வீட்டைச் சேர்ந்தாற்போல் இருக்கிறது. அதன் முக்கிய விசேஷம் அதன் எண் 10 என்று இருப்பதுதானாகும்.

புதிய மந்திரி லால் பகதூர் சாஸ்திரிக்கும் 'பத்து' என்ற இலக்கத்துக்கும் அதிகப் பொருத்தம் உண்டு. அவர் பெயரில் பத்து எழுத்துக்கள் இருக்கின்றன. 10 என்பதில் முதலில் உள்ள 1-ஐக் குறைத்தால் ஒன்பதாகிறது. ஆகவே 9-ந் தேதியன்று பதவி ஏற்றார். இப்படித் திரைப்பட நாமகரண இலக்க ஜோசிய நிபுணர்கள் கூறக் கூடும்.

பிரதம மந்திரிகள் இல்லத்துக்கும் 10 என்ற எண்ணுக்கும் எப்போதுமே 'ராசி' உண்டு. லண்டனில் டௌனிங் ஸ்டிரீட்டில் 10ம் நம்பர் எண்ணுள்ள மாளிகைதான் சென்ற இருநூற்றைம்பது வருட காலமாக பிரிட்டிஷ் பிரதம மந்திரிகள் வசிக்கும் இடமாக இருந்து வந்திருக்கிறது.

டௌனிங் ஸ்டிரீட் என்பது ஒரு சிறிய வீதி; அதில் பிரிட்டிஷ் பிரதமர், நிதி மந்திரி, கட்சியின் பிரதம கொறடா ஆகிய மூன்று பேரும் 10, 11, 12 என்ற இலக்கங்களுள்ள அடுத்தடுத்த மாளிகைகளில் வசிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

பழங் கதை இது. ஒரு நாள் குதிரைக்கும் பசுவுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. அந்த நாட்களில் இரண்டுமே தன்னிச்சையாகத் திரிந்தவை; சுதந்திரமாக வாழ்ந்தவை. சச்சரவு ஏற்படவே, குதிரை மனிதனிடம் சென்று, "ஐயா! அந்தப் பசுவின் மடியில் அமிருதம் இருக்கிறது. அதைக் குடிக்க வேண்டுமென்று விருப்பம் இருக்குமானால், இந்தப் பசுவை உன் வசப்படுத்திக் கொள்" என்றது.

மனிதனுக்குப் பசுவின் கொம்பைக் கண்டால் ஓர் அச்சம். "அது என்னைக் கொன்று போட்டு விடும். நான் அதனிடம் வலுச் சண்டையை விலைக்கு வாங்கிக்கொள்ள மாட்டேன்" என்றான்.

குதிரை ஆலோசனை கூறியது: "என் முதுகில் அமர்ந்து அதைக் கம்பால் அடி. அது கொம்பால் முட்டினால், நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்."

மனிதன் அது சொன்ன பிரகாரமே செய்தான். குற்றுயிரும் குலையுயிருமாகப் பசுவைப் பிடித்து வந்து வீட்டில் கட்டிக் கொண்டான். கூடவே குதிரையையும் கொட்டிலில் கட்டிக் கொண்டான். குதிரை தடை கூறவே, 'சிறிது நேரம் உன் முதுகில் உட்கார்ந்திருந்த பொழுது, அது எனக்கு வெகு சுகமாயிருந்தது. அந்தச் சுகத்தை நான் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. பசுவோடு நீயும் எனக்கு உதவியாக இரு" என்று இடைமறித்து விட்டான்.

மூலையில் கட்டப்பட்டிருந்த பசு முறுவலித்தது. "குதிரையாரே! படைப்பின் பரிகாசத்தைப் புரிந்துகொள்ளுங்கள். யார் கட்டுகிறானோ, அவனும் கட்டப்படுகிறான். கயிறு பிறரைக் கட்டுகிறது. ஆனால் தானும் கட்டுண்டு விடுகிறது" என்று கூறியது.

குதிரை நெஞ்சடைக்கும் குரலில், "இல்லை, அம்மா! நம்மை நாமே நமது குற்றம் குறைகளினால் கட்டிக் கொள்கிறோம் என்பதை நான் இன்றுதான் கண்டேன்" என்றது.

இவ்வுலகில் நம் குறையை நாமே போக்கிக் கொள்வதுதானே பெரும் பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது?

ஃ ஃ ஃ

கணவனும் மனைவியும் ஏகப்பட்ட சாமான்களோடு சென்டிரல் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். கூலிகளிடம் சாமானை ஒப்படைத்து விட்டு வண்டியேறப் போனார்கள். வண்டியில் ஏறி உட்கார்ந்தால் ஒரு சாமான் குறைந்திருந்தது.

"மொத்தம் பதினாறு சாமான்கள் எண்ணி ஒப்படைத்தோம் அல்லவா? பதினைந்து தானே இருக்கின்றன? மீதி ஒன்றையும் கொண்டு வந்து கொடுத்து விட்டு உன் கூலியைப் பெற்றுப் போ!" என்று கணவர் போர்ட்டரிடம் சண்டை போடலானார்.

போர்ட்டருக்கும் ஒன்றும் புரியவில்லை. 'சாமான்களில் ஒன்று எப்படிக் குறைந்தது? 'அவர் ஏமாற்றுகிறாரா, அல்லது நாம்தான் ஏமாந்து விட்டோமா?' என்று தயங்கினான்; கவலையில் ஆழ்ந்தான். கையைப் பிசைந்து கொண்டு நின்றான். அவனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

வண்டியில் உட்கார்ந்திருந்த ஒருவருக்கு அநுதாபம் பிறந்தது. "அது சரி, சாமான்களை எண்ணியது தாங்களா, தங்களுடைய மனைவியா?" என்று கேட்டார்.

"ஏன்? நான் எண்ணினால் என்ன, என் மனைவி எண்ணினால் என்ன? கணக்குத் தவறி விடுமோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"அதற்குச் சொல்லவில்லை. தங்கள் மனைவி எண்ணியிருந்தால், தங்களையும் சேர்த்து எண்ணியிருக்கலாம் அல்லவா?" என்று சிரிக்காமல் சொன்னார் அந்த மனிதர்.

மனைவி மட்டும் முறுவலித்து விட்டாள்!

ஃ ஃ ஃ

போர் வீரன் ஒருவன், தன் மனைவியின் உடல் நலத்தைக் காரணம் காட்டி லீவு கேட்டான். மேலதிகாரிகள் அவனை அழைத்து, "நாட்டைக் காக்கும் பொறுப்பைக் காட்டிலும் மனைவியைக் காப்பது மேலான கடமையா?" என்று கேட்டனர்.

"சந்தேகமென்ன? நாட்டைக் காக்கும் பணியிலே எத்தனையோ பேர் இன்று ஈடுபட்டிருக்கிறார்கள். என் மனைவிக்கு நான் ஒருவன் தானே?" என்றான்.

உடனே அவனது லீவு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

டெட்டால்



தொற்றுநோயிலிருந்து அவனைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது



அவன் மிகவும் சுத்தமாகத்தான் இருக்கிறான். ஆனால், அவன் வசிக்குமிடத்தின் தரை எப்படி இருக்கிறது? போதிய அளவிற்கு சுத்தமாகக் காணப்பட்டபோதிலும், கோடிக்கணக்கான, கண்ணுக்குத் தெரியாத விஷக்கிருமிகள் தயாராகப் பதுங்கி இருக்கின்றன. அசட்டை செய்து விடாதீர்கள். உலகத்திலேயே மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமிநாசினி 'டெட்டாலை,' தரைகளை அலம்பிவிடவோ துடைக்கவோ உபயோகிக்கப்படும் தண்ணீருடன் கலந்துகொள்ளுங்கள். 'டெட்டால்' விஷக்கிருமிகளை கொல்ல கூடியது.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

